விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 15 ஞாயிற்றுக்கிழமை (01.11.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 317

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்
கடிதங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடு புடைவைகள்
CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-2577)


# தீபாவளிக்கு முன்னர் கைதிகளுக்கு விடுதலை

## ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்கப்படும் என சிறைச்சாலை அமைச்சர் யாழில் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை எதிர்வரும் 10ஆம் திகதி தீபாவளி பண்டிகைக்கு முன்னர் விடுவிப்பது தொடர்பில் சட்டமா அதிபர், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படுமென சட்டம், ஒழுங்கு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாறப்பன யாழில் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நினைவாக மரம் நடுகை இன்று

(யாழ்ப்பாணம்)

மாவீரர்களை நினைவு கூரும் வகையில் இன்றைய தினம் யாழ். நாவற்குழி செம்மணி பகுதியில் வடக்கு மாகாணசபையின் விவசாய அமைச்சு மரம் நடுகையினை ஆரம்பிக்கிறது.

இன்று காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ள இந் நிகழ்வினை வடக்கு மாகாண முதலமைச்சர் 15 ஆம் பக்கம் பார்க்க....

## அரச நிறுவனங்களில் இலவச வைபை

(கொழும்பு)

அடுத்த வருடத்தில் 3,500 அரச நிறுவனங்களில் இலவச வைபை (WiFi) வலயங்களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டளவில் நாட்டின அனைத்து 15 ஆம் பக்கம் பார்க்க....

## கசப்பான சிறைச்சாலை வரலாறுகள் மீண்டும் எழுதப்பட்டு விடக்கூடாது

### கைதிகள் ஒவ்வொருவரும் மனிதர்களே – இளஞ்செழியன்

## அவன்கார்ட் ஆயுதக் கப்பல்; சோதனை நடவடிக்கைகள் முடிவு

(காலி)

காலி துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள அவன்கார்ட் கப்பலில களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் தொடர்பில் மேற்சித் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் சோதனைகளை மேற்கொண்டிருந்ததாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்

## கைதிகள் ஒவ்வொருவரும் மனிதர்களே – இளஞ்செழியன்



(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் சிறைக்கூடங்களில் எழுதப்பட்ட கசப்பான வரலாறுகள் மீண்டும் எழுதப்பட்டு விடக்கூடாது.

சிறைகளில் உள்ள கைதிகள் ஒவ்வொருவரும் மனிதர்களே என்ற ஒரே பார்வையிலேயே அவர்கள் பார்க்கப்பட வேண்டும்.

மாறாக தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தவர்கள் என பார்க்கப்படக் கூடாது. இதனை ஒவ்வொரு சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களும் உணர்ந்து கொள்ள வேண்டுமென யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ம.இளஞ் 15 ஆம் பக்கம் பார்க்க....

மிடப்பட்டுள்ள அவன்கார்ட் கப்பலில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதாக பாரிய ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலிலுள்ள ஆயுதங்கள் குறித்து கடந்த 3 நாட்களாக பிரதம பொலிஸ் பரிசோதகர் ரஞ் கொண்டிருந்ததாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இக்கப்பலில் சோதனை நடத்திய குழுவில் 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவன்கார்ட் கப்பலில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 15 ஆம் பக்கம் பார்க்க....

## சரணடையும் திட்டத்துக்கு பிரபாகரன் சாதகமாக பதிலளிக்கவில்லை - எரிக்

(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப் புலிகள் சரணடைவதற்கு முன்வைக்கப்பட்ட திட்டத்துக்கு விடுதலைப் புலிகளின் தலைமை சாதகமாக பதிலளிக்கவில்லை. இதன் விளைவாகவே, வெள்ளைக் கொடியுடன் சரணடைய முனைந்த போது மரணங்கள் ஏற்பட்டன என நோர்வேயின் முன்னாள் சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலண்டனில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற ஒரு உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, இலங்கையில் நோர்வேயின் அமைதி முயற்சிகள் என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரை யாற்றிய போது இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக சொலஹெய்ம தெரிவித்துள்ளார். 15 ஆம் பக்கம் பார்க்க....

# போராளிகள் விடுதலையில் வெடிக்காத போர் கைதிகள் விடுதலையாக வெடிக்க போகிறது?

## நிலைமையைச் சுட்டிக்காட்டி விஜயகலா கேள்வி

(யாழ்ப்பாணம்)

மகிந்த அரசு 12 ஆயிரம் முன்னாள் போராளிகளை விடுவித்த போது வெடிக்காத ஈழப்போர் தற்போதுள்ள 247 தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் போது வெடித்துவிட போகின்றது என தென்னிலங்கை கைதிகளிடம் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தக்க கேள்வியை தொடுத்துள்ளார்.

பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள புதிய சிறைச்சாலை திறப்பு விழா நேற்றையதினம் நடைபெற்றது. இதன்போது அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் இடப் 15 ஆம் பக்கம் பார்க்க....



## சிறுபான்மை இனங்களுக்கு எதிராக திட்டமிட்ட வகையில் இன அழிப்பு

### மகிந்த ஆட்சியில் இடம்பெற்றதாக மங்கள உரை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக திட்டமிட்ட இனஅழிப்பு இடம் பெற்றது.

பெரும்பான்மை ஆதிக்கத்தை தூண்டிவிடும் 16 ஆம் பக்கம் பார்க்க....



## தனியார் வகுப்புக்களுக்கு எதிரான சட்டமூலம்

(கொழும்பு)

பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் நடைபெறும் காலப்பகுதிக்குள், தனியார் மேலதிக வகுப்புகளை நடத்துவதற்கு தடைவிதிக்கும் யோசனை ஒன்று அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார். பாடசாலை 15 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்தினரை விசாரிக்க புதிய சட்டங்களை உருவாக்குவது அரசியலமைப்புக்கு முரணானது - சரத்

(கொழும்பு)

போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையின் போது இராணுவத்தினரை விசாரிப்பதற்காக புதிய சட்டங்களை உருவாக்குவது அரசியலமைப்புக்கு முரணானது என்று சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர்பில் உருவாக்கப்படவுள்ள உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை தொடர்பில் புதிய சட்டங்கள் உருவாக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள முன் 15 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## அமரர் விநாயகமூர்த்தி சிவமணி



மண்டைதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி சிவமணி நேற்று 31-10-2015 சனிக்கிழமையன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கணேசமூர்த்தி, அமரர் சிறிகாந்தராசா, மனோகரன், சறோஜா, பாஸ்கரன், கருணாலயன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் மகாலட்சுமி, அமரர் சுந்தரம், அமரர் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணேஸ்வரி, கமலநாதன், யோகேஸ்வரி, சந்திராதேவி ஆகியோரின் மாமியும் ஜெயதர்சினி அமரர் உமாதர்சினி, தர்மலோஜினி, பங்கயற்செல்வன், கஜந்தினி, லோஜிதன் தர்சிகன், கஜேந்திரன், கஸ்தூரி ஆகியோரின் பேர்த்தியும் தமிழினி, லிலூசன் ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01-11-2015) ஞாயிற்றுக்கிழமை 1.00 மணியளவில் மண்டைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.

(2216)


# Kannathasan

Global Cargo & Courier

## நீங்கள் ஓர் நம்பகரமான பொதிகள் சேவையினை தேடுகிறீர்களா?

உள்நாட்டு,வெளிநாட்டு பொதிகள் சேவைகளில் கடல் மற்றும் ஆகாய மார்க்கமான விரைவு பொதிகள் சேவையினை 25 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் முன்னணி நிறுவனத்தின் இணை நிறுவனம் தற்போது உங்கள் அருகில்

**அனுபவம் - விரைவு - நம்பிக்கை - பாதுகாப்பு.**

- 3-5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- உள்நாட்டு பொதிகளை 24 மணித்தியாலத்தில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- கடிதம், CD & DVDs, உடுபுடைவைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் எண்ணெய் வகைகள் அனுப்பிடலாம். (நிபந்தனைக்குட்பட்டது).
- வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பொருட்களை சிரமமின்றி உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- சகல விதமான வெளிநாட்டு உதவிகளையும் இங்கிருந்தவாறே எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.




PICK UP SERVICE – Door to Door

உங்கள் இல்லங்களில் இருந்து பொதிகளைப் பொறுப்பேற்று உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

**Express: 11kg மேல் அனுப்பப்படும் அனைத்து பொதிகளுக்கும் விசேட விலைக்குறைப்பு:-**


UK 575/-, France 650/-, Germany 650/-, Italy – 750/-, Swiss 700/-, Canada 950/-, Denmark 800/-, Norway 900/-

**Normal Parcel Service for Over 5Kg:**

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு 1Kg கட்டணம் 425/-
கனடா 1Kg கட்டணம் 525/-

**Gift Delivery Service:**

அனைத்து வைபவங்களுக்கான Gift பொதிகளை Order செய்து அதே தினத்திலேயே உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்




தீபாவளியினை முன்னிட்டு :-


10/11/2015 வரை அனுப்பும் அனைத்து பொதிகளுக்கும் விலைக்கழிவும் மற்றும் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாடிக்கையாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான இலவச விமான பயணச்சீட்டும் வழங்கப்படும்.
(மலேசியா, சிங்கப்பூர், இந்தியா)

**DON'T MISS IT**

For more information call us on: 076 690 1514/076 690 1513
140, Palaly Road, Kantharmadam, Jaffna.
Hotline: 0212227555
Email Id: kgccourier@gmail.com

(2206)


# நீராடிய ஆலயக் குருக்கள் நீரில் மூழ்கி உயிரிழப்பு



(கரணவாய்)

தீர்த்தக் கேணியில் நீராடிய ஆலயக் குருக்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கரணவாய் முதலைக்களி முருகன் ஆலய தீர்த்தக் கேணியில் இடம் பெற்றுள்ளது.

இதில் கரணவாய் தெற்கினைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான சிவஸ்ரீ கனகசபை தியாகராஜக்குருக்கள் (வயது -86) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

ஆலயப் பூசைக்காக அதிகாலை வேலையில் கேணியில் இறங்கிக் குளித்துள்ள பிரஸ்தாப குருக்கள் நீரில் மூழ்கி இறந்துள்ளார்.

காலையில் கோவிலுக்கு சென்ற ஆலய பரிபாலனசபையினர், குருக்கள் கேணியில் சடலமாக மிதந்துள்ளதைக் கண்டு நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

அத்துடன் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி வின்சன் அன்ரவா சடலத்தை நேரில் சென்று பார்வையிட்டு மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-5-60)

# தேர்தல் ஆணையாளருக்கு விருது

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிற்கு சர்வோதய விருது நேற்று வழங்கப்பட்டுள்ளது. ஒப்படைக்கப்பட்ட கடமைகளை பக்கச்சாரபின்றி, எவருக்கும் அடி பணியாது, தைரியமாக மிகவும் பொறுப்புடன் கடமையாற்றியமை ஆகிய காரணிகளின் அடிப்படையில் விருது வழங்கப்பட்டுள்ளது.

சர்வோதய அமைப்பின் தலைவர் ஏ.ரீ.ஆரியரட்னவின் ஆலோசனைக்கு அமைய சர்வோதய தேசிய விருது வழங்கும் நிகழ்வு இம்முறை 18-வது தடவையாக நடைபெற்றது. இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக சபாநாயகர் கரு ஜயசூரிய பங்கேற்றிருந்தார்.

மொரட்டுவ சர்வோதய தலைமையகத்தில் நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது. பல்வேறு துறைகளில் நாட்டுக்கு ஆற்றப்பட்ட சேவைகளின் அடிப்படையில விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

தேவநாயகம் ஈஸ்வரன், பேராசிரியர் சந்திரா குணவரதன, துசித மலலசேகர, மணிகே சுமனசேகர ஆகியோருக்கும் விருது வழங்கப்பட்டது.(செ-12)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கு குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி வடக்கால் போகும் நாகலிங்கம் வீதி எனும் முகவரியைக் கொண்ட இடத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. (2209)

தொடர்புகளுக்கு: 0212052098
0756825890

## வீடு வாடகைக்குத் தேவை

கல்வி நிறுவனமொன்றின் பாவனைக்கு பொருத்தமான வீடொன்று யாழ் மாநகர சபை எல்லைக்குள் தேவை. (2215)

தொடர்புகளுக்கு :-
0770078887

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இராச பாதையிலிருக்கும் முருகன் கோவிலுக்கு 200 மீட்டர் தொலைவில் 4 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (2210)

தொடர்புகளுக்கு :-
0765204632


# Hotel Lux Etoiles

## என்றும் நற்செய்தி

அரசாங்கத்தினால் சகல பானங்களுக்கும் விலை உயர்வு செய்த பொழுதிலும் நமது விடுதி மட்டுமே எந்தவொரு பானத்திற்கும் உயர்வு செய்யவில்லை என்பதையும்

எமது Hot and Cool Bar ல் எந்த ஒரு உணவும் 320/= ரூபாய்க்கு மேலதிகமாக விலைப்பட்டியலில் இல்லை என்றும், அவற்றிலும் விலை ஏற்றம் இல்லை என்பதையும் நமது வாடிக்கையாளர்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன்

நமது pizza வகைகளுக்கும் 20% கழிவு 15 கார்த்திகை வரை விடுதியிலோ கிளைகளிலோ வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-2588)

இல 34, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.இல :- 021 221 5566

# மகிந்த விளம்பரம் மகனுக்குப் பணம்

ஜனாதிபதி தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டதற்கான பணத்தை யோசித ராஜபக்ஷவுக்கு சொந்தமான மீடியா பெக்ரி என்ற விளம்பர முகவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

விளம்பர தரகுப் பணத்தை யோசிதவிற்கு சொந்தமான மீடியா பெக்ரி என்ற விளம்பர முகவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதா என்பதனை ஆராய வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுர குமார திஸாநாயக்கவேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விளம்பரங்கள் வழங்கப்பட்ட மீடியா பெக்ரி நிறுவனம் யோசித ராஜபக்ஷவுக்கு சொந்தமான நிறுவனம் என தெரியவந்துள்ளதாகவும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# ஜே.வி.பி.யினர் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

ஜே.வி.பி. கட்சியின் காலி மாவட்ட முக்கியஸ்தர்கள் அம்பலாங்கொடையில் நேற்று முன்தினம் முதல் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசின் பதவிக்காலத்தில் அம்பலாங்கொடை நகர சபையின் ஜே.வி.பி. உறுப்பினர் சந்திரதாஸ நாய்துவாவடு என்பவர் கடுமையாகத் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இக்கொலை குறித்து முறையான விசாரணை முன்னெடுக்கப்படாத அதே நேரம், முன்னைய அரசதரப்பின் முக்கியஸ்தர்கள் இக்கொலையில் தொடர்பு பட்டிருப்பதாக பரவலான தகவல்கள் கசிந்திருந்தன.

இந்நிலையில் சந்திரதாஸவின் மரணம் குறித்து நியாயமான விசாரணையொன்றை நடத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குமாறு கோரிக்கை விடுத்து காலி மாவட்ட ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (இ-7)

# வேறு நாடுகளின் ராணுவ தேவைக்கு இலங்கையைப் பயன்படுத்த முடியாது

எந்தவொரு நாட்டினதும் இராணுவத்தின் தேவைக்காக இலங்கை நிலப்பரப்பை பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப் போவதில்லை என்று சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவசேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அதேபோல இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் புதிய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், இந்தியா மற்றும் சீனா நாடுகளுக்கு இடையில் பல வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

# உள்ளூராட்சித் தேர்தலை பிற்போட அவசியமில்லை

## பைசர் முஸ்தபா தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கான தேவை தமக்கு கிடையாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா மீண்டும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில். குறித்த தேர்தலை பிற்போடுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாக வெளியான செய்திகள் குறித்து வினவிய போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் இந்த தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்த சட்டம். 2013ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டமையினால். இந்த தேர்தலை தொகுதி வாரி முறையில் நடத்த வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 224 பயணிகளுடன் பயணித்த விமானம் விழுந்து நொறுங்கியது

**224 பயணிகளுடன் பயணித்த ரஷ்ய விமானம் ஒன்று நேற்று அதிகாலை எகிப்துக்கு அருகில் விழுந்து நொறுங்கியுள்ளதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. விமான விபத்துக்களும் மாயமாகும் சம்பவங்களும் அதிகரித்து வரும் நிலையில் மேற்படி விமான விபத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**


இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

எகிப்து நாட்டில் உள்ள ஷர்ம்-அல்-ஷேக் நகரில் இருந்து 200 இற்கும் அதிகமான பயணிகளுடன் ரஷ்யா நோக்கி சென்று கொண்டிருந்த ரஷ்ய நாட்டு விமானம் துருக்கி நாட்டு வான் வெளியில் மாயமானதாக முன்னர் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், வான் வெளியில் எகிப்தில் உள்ள சினாய் தீபகற்பம் பகுதியில் அந்த விமானம் விழுந்து நொறுங்கியதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. செங்கடலை ஒட்டியுள்ள கடற்கரை நகரமான ஷர்ம்-அல்-ஷேக் நகரில் இருந்து திரும்பிய அந்த விமானத்தில் இருந்தவர்கள் பெரும்பாலும் ரஷ்ய நாட்டு சுற்றுலா பயணிகள் என தெரியவந்துள்ளது.

ரஷ்ய அரசால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட அந்த தனியார் விமானத்தில் 217 பயணிகளும் விமானிகள் உடபட 7 பணியாளர்கள் இருந்ததாகவும் ரஷ்யாவின் விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தை எகிப்து பிரதமரும் உறுதிப்படுத்தியுள்ளார். இதுதொடர்பாக, எகிப்து பிரதமர் ஷரிப் இஸ்மாயில் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மத்திய சினாய் பகுதியில் ரஷ்ய பயணிகள் விமானம் விழுந்து நொறுங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)



# வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபரை பல்கலை.மாணவி மரணம் குறித்து விசாரிக்க பணிப்பு

பல்கலைக்கழக இணை மருத்துவபீட மாணவி மரணம் கொலை என சந்தேகிப்பதால் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரிடம் இது தொடர்பான விசாரணையை முன்னெடுக்க வேண்டுமென யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

இணை மருத்துவப்பிரிவு மாணவியான லோறன்ஸ் அனா எப்சிபா என்பவர் கடந்த ஜுலை மாதம் 6 ஆம் திகதி அன்று தீக்காயங்களுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார.

இம்மாணவியின் மரணம் தொடர்பில் மாணவியின் கணவரான மருத்துவத்துறை விரிவுரையாளர் ஒருவர் மீது பெற்றோர், உறவினர் மற்றும் நண்பர்களால் சந்தேகம் வெளியிடப்பட்டு அதனடிப்படையில் யாழ். நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி இவ்வழக்கு மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மாணவியின் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகளான றெமிடியஸ் மற்றும் அன்ரன் புனித நாயகம் ஆகியோர் இம் மரணத்தில் உள்ள சந்தேகங்கள் தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வந்ததோடு அத்துடன் கடந்த வழக்கில் இம் மரணத்தில் உள்ள சந்தேகங்கள் தொடர்பாக பல தகவல்களை நேரடியாகவும் ஆவணமாகவும் நீதிமன்றில் சமர்பித்திருந்தனர்.

தொடர்ச்சியாக பொலிஸார் இவ் வழக்கில் காட்டிவரும் அசமந்தப்போக்கினையும் சுட்டிக் காட்டினர்.

அத்துடன் கொலை தொடர்பில் சந்தேகத்தினை ஏற்படுத்தும் ஆதாரங்கள் இருக்கும் நிலையில் பொலிஸாரினால் இம் மரணம் தொடர்பில் இதுவரை ஏன் பூரணமான மரண அறிக்கையினை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியவில்லை என வினா எழுப்பியபோது மாணவியின் கொலை தொடர்பில் சந்தேகத்தினை ஏற்படுத்தும் ஆதாரங்கள் இருக்கும் நிலையில் பூரணமான விசாரணை அறிக்கையானது இதுவரை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படாததினால் இந்த வழக்கு தொடர்பான விசாரணையை உடனடியாக வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நடத்த வேண்டுமெனவும் உத்தரவிட்ட நீதிபதி பொலிஸாரை கடுமையாக எச்சரித்ததுடன் தேவை ஏற்படின் கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரியினையும் விசாரணைக்கு உட்படுத்தும்படியும் அது தொடர்பான அறிக்கையினை எதிரவரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார்.

அன்றைய தினமே இவ் வழக்கு மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (இ -9)

# 12 வயதுச்சிறுவன் படுகொலை 20 வயது இளைஞர் படுகாயம்

மாத்தறை - திஹகோட பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 12 வயது சிறுவன் படுகொலை செய்யப்பட்டுள்ளான். மேலும் இதன் போது 20 வயதான ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார தெரிவித்தனர். அப்பகுதியின கப்புவத்தை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாடே கொலைக்கு காரணம் எனத்தெரியவந்துள்ளது.(இ-7)

# மலசலகூட குழியில் விழுந்து மூன்று வயதுச்சிறுமி மரணம்

காத்தான்குடி - ஜன்னத் மாவத்தையில் பாத்திமா ரஜா எனும் மூன்று வயது சிறுமி புதிதாக கட்டப்பட்ட மலசல கூட குழியில் விழுந்து உயிரிழந்துள்ளாள். இந்த சம்பவம்நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் தாயாரது மூத்த சகோதரியின் வீட்டில் நீர் நிரம்பி இருந்த மலசல கூட குழியில் இருந்த நிலையில் சிறுமி மீட்கப்பட்டு காத்தான்குடி தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளாள்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி அங்கு மரணமடைந்துள்ளாள். (இ-7)

Yarl Beauty Academy
அழகுக்கலை பயிற்சிகள்
தீபாவளி திருநாளினை முன்னிட்டு 40% கட்டணக்கழிவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்
YARL BEAUTY ACADEMY
Certificate in Basic Beauty Course
(ஒரு மாத கால அழகுக்கலை) 3600/= மட்டுமே.
Dip in Beauty Culture & Hair Dressing
(மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
Cake Decoration Classes (கேக் ஐசிங்)
அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெறுமேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
கிழமை நாள் புதிய பிரிவுகள் 06.11.2015 அன்று 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 07.11.2015 அன்று 10.00 மணிக்கு
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.
(C-2582) இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)


# குடும்பப்பெண் கடத்தல் விவகாரம் 11 சந்தேக நபர்களுக்கும் மறியல்

(கரணவாய்)

வடமராட்சி வல்வெட்டித்துறை கம்பர்மலைப் பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 11 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார். மேலும் சந்தேகநபர்களுக்காக அடையாள அணிவகுப்பும் நேற்றுமுன்தினம் நீதிபதி முன்னிலையில் இடம்பெற்றது.

அத்துடன் இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஊடாக கடந்த 21 ஆம் திகதி சரணடைந்து எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 11 ஆவது சந்தேகநபரும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்காக ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இதன்போது குறித்த பெண்ணினால் 11 நபர்களும் அடையாளங்காட்டப்பட்டுள்ளனர் என தெரிய வந்துள்ளது. பெண்ணினால் அடையாளங் காட்டப்பட்டதையடுத்தே மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

# டி வில்லியர்ஸ் அசத்தல் சதம் சமநிலையில் பயிற்சி ஆட்டம்



இந்திய சபை தலைவர் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் தென்னாபிரிக்கா அணி முதல் இன்னிங்சில் 302 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இதில் இந்திய - தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதல் டெஸ்ட் வருகிற 5-ம் திகதி தொடங்குகிறது.

இதற்கு முன்பாக தென்னாபிரிக்க அணி இந்திய சபை தலைவர் அணியுடன் 2 நாள கொண்ட பயிற்சி ஆட்டத்தில் மோதியது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற புஜாரா தலைமையிலான இந்திய சபை தலைவர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதில் முதல் இன்னிங்சில் இந்திய சபை தலைவர் அணி 296 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

தொடக்க வீரர் ராகுல் (72), ஓஜா (52) அரைசதம் அடித்தனர். கருண் நாயர் 44 ஓட்டங்களும், பாண்டியா 47 ஓட்டங்களும் எடுத்தனர்.

தென்னாபிரிக்க அணி சார்பில், ஸ்டெய்ன், சிம்மன் தலா 3 விக்கெட்டுகளை எடுத்தனர்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணி அன்றைய நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்கு 46 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

தொடர்ந்து நேற்று விளையாடிய தென்னாபிரிக்கா இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது. இதனால் 57 ஓட்டங்களுக்கே 5 விக்கெட்டை இழந்தது.

இந்நிலையில் டி வில்லியர்ஸ், விலாஸ் ஜோடி சிறப்பாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தது. நிதானமாக விளையாடிய டி வில்லியர்ஸ் 18 பவுண்டரிகளுடன் 112 ஓட்டங்கள் எடுத்தார்.

விலாஸ் (54) அரைசதமும், கடைசி நேரத்தில் ஸ்டெய்ன் அதிரடியாக விளையாடி 37 ஓட்டங்களும் எடுத்தனர். மற்றைய வீரர்கள் சோபிக்கவில்லை.

இதனால் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்சில் 302 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. இந்தியா சார்பில், தாகூர் 3 விக்கெட்டுகளை எடுத்தார்.

பின்னர் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய சபை தலைவர் அணி 30 ஓவர்களுக்கு விக்கெட் இழப்பின்றி 92 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஆட்டநேர முடிந்ததால் போட்டி டிரா ஆனது.

ராகுல் (43), புஜாரா (49) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். (க)

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது சானியா - ஹிங்கிஸ் ஜோடி



தரவரிசையில் ரொப்-8ல் உள்ள வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் உலக மகளிர் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டிகள் சிங்கப்பூரில் நடந்து வருகிறது.


இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மகளிர் இரட்டையர் பிரிவில் சானியா (இந்தியா)- ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி, டிமியா பாபோஸ்- கிறிஸ்டினா மிலாடேனேவிக் ஜோடியை எதிர்கொண்டது.

இந்தப் போட்டியில் சானியா- ஹிங்கிஸ் 6-4, 7-5 என்ற நேர்செட்டில் ஹங்கேரியின் டிமியா பேபஸ்-பிரான்ஸின் கிறிஸ்டினா ஜோடியை தோற்கடித்து அரையிறுதியில் நுழைந்தது.

இந்நிலையில் நேற்று நடந்த முதல் அரையிறுதி ஆட்டத்தில் முதல் இடத்தில் இருக்கும் சானியா (இந்தியா)- ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி, சீன தைபேயின் யங்-ஜன் சான், ஹாவோ- சிங் சான் ஜோடியை எதிர்கொண்டது.

ஒரு மணி நேரம் 23 நிமிடம் நீடித்த இந்த அரையிறுதிப் போட்டியின் முடிவில் சானியா (இந்தியா)- ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி

# உலக சம்பியன்ஷிப் டென்னிஸ் இறுதிப் போட்டியில் கிவிட்டோவா




உலகின் 8 முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் உலக சம்பியன்ஷிப் டென்னிஸ் போட்டி சிங்கப்பூரில் நடைபெற்று வருகிறது. 8 வீராங்கனைகளும் ரெட் மற்றும் வைட் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு லீக் போட்டிகள் நடத்தப்பட்டது.

இதன் முடிவில் ஒரு அரையிறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவும், செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவாவும் பலப்பரீட்சை நடத்தினார்கள்.

முதல் செட்டை பெட்ரா கிவிட்டோவா 6-3 என எளிதில் வென்றார். ஆனால், அனுபவ வீரரான மரியா ஷரபோவா 2-வது செட்டில் கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் அந்த செட் 'டை பிரேக்கர்' வரை சென்றது.

இறுதியில் கிவிட்டோவா 7-6 (3) என வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் கிவிட்டோவா, ரட்வன்ஸ்காவை எதிர்கொள்கிறார். (க)

# இலங்கை - மேற்கிந்திய தீவுகள் முதலாவது ஒருநாள் போட்டி இன்று




இலங்கை மற்றும் மேற்கிந்தியதீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி இன்று முதலாம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 டெஸ்ட் போட்டிகளிலும் 3 ஒருநாள் போட்டிகளிலும் 2 இருபது - 20 போட்டிகளிலும் பங்கேற்று விளையாடிவருகின்றது.

இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2-0 என கைப்பற்றிய நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது. இந்நிலையில் முதலாவது போட்டி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பித்து பகலிரவு போட்டியாக நடைபெறவுள்ளது. (க)

# சென்னை, ராஜஸ்தானுக்கு தடை புதிய 2 ஐ.பி.எல் அணி தேர்வு

ஐ.பி.எல் தொடரில் சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு பதிலாக 2 புதிய அணிகள் உருவாக்கப்படுகிறது. ஐ.பி.எல் சூதாட்ட வழக்கில் சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் 2016, 2017-ம் ஆண்டு சீசன்களில் இந்த இரு அணிகள் பங்கேற்க முடியாது.

இந்த நிலையில், சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு பதிலாக 2 புதிய அணிகள் விளையாடும் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்தது. இந்த புதிய அணிகள் விரைவில் தெரிவு செய்யப்படுகிறது. இந்த அணிகள் கிட்டத்தட்ட ராஜஸ்தான், சென்னை அணிகள் போன்றே இருக்கும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

அதாவது, சென்னை, ராஜஸ்தான் அணிகளில் இருந்து தலா 5 வீரர்கள் 2 புதிய அணிகளுக்கு நேரடியாக தேர்வு செய்யப்படுவார்கள். இந்த 5 பேரில் அதிகபட்சமாக 4 இந்திய வீரர்கள் இருக்கலாம். மற்றைய வீரர்கள் ஏலத்தில் விடப்படுவார்கள்.

இதன்படி புதிய ஐ.பி.எல் அணியில் சென்னை அணியில் இருந்து முன்னணி வீரர்களான தோனி, ரெய்னா, ஜடேஜா, அஸ்வின், மக்கலம் ஆகியோர் இடம்பெற வாய்ப்பு உள்ளது.இந்த புதிய அணிகளின் விவரம் எதிர்வரும் 9-ம் திகதி மும்பையில் நடக்கும் கிரிக்கெட் சபை கூட்டத்திற்கு பிறகே தெரியவரும். (க)

நூல் வெளியீட்டு விழாவும் சிறப்பு இசையரங்கமும்...
வர்ணம் கிரியேஷன்ஸ் மற்றும் சரஸ்வதி வெளியீட்டகம் வழங்கும்
கவிஞர் வேலணையூர் சுரேஷின்
"கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்" (கவிதை நூல்)
"பிள்ளைத் தமிழின்பம்" (பிள்ளைப் பாடல்கள்)
இசைமேதை வர்ண ராமேஸ்வரனின்
சிறப்பு இசையரங்கம்
காலம் : 01.11.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை
இடம் : சபாலிங்கம் மண்டபம் யாழ் இந்துக் கல்லூரி
நேரம் : பிற்பகல் 3.30 மணி
(C-2586)

# அதிரடிச் சலுகை

**வலம்புரியின் அதிரடிச் சலுகை**

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

**தொடர்புகளுக்கு :-**
**021 221 7603,**
**021 321 0815**
**021 567 1543**

Valampurii@yahoo.com


# 7 இந்திய மீனவர்களையும் மறியலில் வைக்க உத்தரவு

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பருத்தித்துறைக்கு அண்மைய கடற்பரப்பில் வைத்து கடந்த ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராஜா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் அவர்களது படகுகளுடன் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். (இ-5-60)

# ரயிலில் மோதி வயோதிபர் பலி!

கொழும்பு- மட்டக்களப்பு கடுகதி ரயிலில், நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மோதுண்டு வயோதிபர் ஒருவர் பலயாகியுள்ளார் என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் பலியானவர் கருவப்பங்கேணியைச் சேர்ந்த 79 வயதுடைய மூத்ததம்பி வடிவேல் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு ரயில் நிலையத்திலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள கருவப்பங்கேணியால் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிவந்த இரவு கடுகதி ரயிலில் குறித்த நபர் மோதுண்டு பலியாகியுள்ளார். (இ-7)


## கார் விற்பனைக்குண்டு

வெள்ளைநிற, நன்கு பராமரிக்கப்பட்ட நிலையில் உள்ள AC யுடன் கூடிய 302-XXXX இலக்கமுடைய Toyota Camry வகை கார் விற்பனைக்குண்டு

**தொடர்புகளுக்கு: 071 861 7949**

## காணி விற்பனை

நுணாவில் மேற்கு சாவகச்சேரியில் சுமார் 74 பரப்பு காணி கட்டடங்களுடன், முழுமையாகவோ அல்லது பகுதி பகுதியாக அவசர விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு: 077 486 6659**

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

யாழ் நகரில் இயங்கும் மென்பான விற்பனை நிலையத்தில் லொறியில் சென்று மென்பானம் விற்பனை செய்து வர விற்பனை பிரதிநிதிகள் SALES REP தேவை. உங்கள் சுயவிபரக் கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம் - C-2573
வலம்புரி
03, 2 வது ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(C-2573)


# மரண அறிவித்தல்

## நடராசா பரமேஸ்வரி



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பரமேஸ்வரி நேற்று (30.10.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, புஸ்பமலர், உருத்திரசிங்கம் மற்றும் குணபாலசிங்கம், தனபாலசிங்கம் (சுவிஸ்), சறோஜினிதேவி (பணிப்பாளர் திவிநெகும, வவுனியா), அம்பிகை (ஜேர்மன்), அம்பாலிகை, பவானி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் கெகராசா, சிவபாலசுப்ரமணியம் (ஜேர்மன்), பத்மரஞ்சன் (வவுனியா கிராம சேவையாளர்), மேனன், புனிதராசன் (ஜேர்மன்), பிறேமா தர்மா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சரஸ்வதி, யோகம்மா மற்றும் பற்பனா, கமலாதேவி, இலங்காதேவி, பரஞ்சோதி, மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், செல்லையா, தர்மலிங்கம், பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி மற்றும் ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனியும், பாமினி (ஜேர்மன்), தர்சினி (பிரான்ஸ்), பிறேமளா, நிசாந்தன், டினோஜா, நிசாந்தினி, ஜெனனி, கஸ்தூரி, தாமிரர், திமேத், சொலமன், ரிசான், நிரோஸ், திவ்யா, பிரசாந், ரம்யா, பிரஜித், அனோஜித் ஆகியோரின் பேர்த்தியும், சுபானு, மாதவன், சியாம், அபர்னிகா, அபர்னன், அர்ச்சயன்,சஜித், சஞ்சயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கிழக்கிலுள்ள கட்டை ஆலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராமகிருஷ்ணா வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.** (சி-2575)

**தகவல்:-மகன்**
**ந.குணபாலசிங்கம்**
**(கடவுள்) குடும்பத்தினர்.**

# மக்கள் வங்கி அறிவித்தல்

*பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.07.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 07.11.2015, 08.11.2015 ஆகிய திகதிகளிலும் 30.09.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 28.11.2015, 29.11.2015 ஆகிய திகதிகளிலும் காலை 8.30 மணி தொடக்கம் கீழ்க்குறிப்பிட்ட அட்டவணைக்கு அமைவாக பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

| கிளைகள் | சேவை நிலையம் | திகதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| காங்கேசன் துறை | மல்லாகம் | 07.11.2015<br>28.11.2015 | யாழ் பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| யாழ்.சுன்னாதிட்டி | இணுவில் | | |
| அச்சுவேலி | புத்தூர் | 07.11.2015<br>28.11.2015 | யாழ் ஸ்ரான்லி வீதி, கிளை |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி கல்வியங்காடு | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| ஊர்காவற்துறை | -- | 08.11.2015<br>29.11.2015 | யாழ் பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| சுன்னாகம் | கோப்பாய் அளவெட்டி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி மானிப்பாய் | 08.11.2015<br>29.11.2015 | யாழ் ஸ்ரான்லி வீதி, கிளை |
| நெல்லியடி | -- | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் கைதடி | | |

*அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.*

*பிராந்திய முகாமையாளர்,*
*மக்கள் வங்கி,*
*பிராந்திய தலைமையகம்,*
*சுன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C-2579)

# ராசி பலன்

**மீனம்:** தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்,மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மேடம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள்,கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும்,புதிய திட்டங்கள் கைகூடும்,உங்களின் வார்த்தைகளை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**மிதுனம்:** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம்,நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும்,போசன சுகமுண்டு.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்,புதிய முதலீடு கள் செய்வது பற்றி அனுபவ மிக்கவர்களின் ஆலோசனை கேட்பீர்கள்,வியாபார விருத்தியுண்டு.

| கேது | | | சந் |
|---|---|---|---|
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம், அனுசம் | | |
| | | | குரு, செவ், சுக் |
| | சனி | சூரி, புத | ராகு |

**01.11.2015**
(ஐப்பசி 15, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59மணிக்கு,
பஞ்சமி முற்பகல் 10.35 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 9.21மணிவரை
இராகுகாலம் 4.33-6.03மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை

**வளவன்**

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது, பயணத்தால் பலன் கிடைக்கும்.

**மகரம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்,கடன் பிரச்சினைகள் சுமுகமாக முடியும்,தேவைகள் பூர்த்தியாகும்,உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான நாள்.

**சிம்மம்:** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்,வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்,குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்,பொது வாழ்வில் கௌரவம் அதிகரிக்கும்.

**தனுசு:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள்,புதிய பொருட் சேர்க்கையுண்டு,வராத உறவினர் கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம்,போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்:** வரவும் செலவும் சமமாகும் நாள்,குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது,உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்:** பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான தகராறுகள் அகலும், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்,புதிய திட்டங்கள் கைகூடும்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆரோக்கியமான நாள்.

# பிள்ளைகள் எங்கே?

## கரவெட்டியில் அதிகாரிகளை முற்றுகையிட்ட காணாமற் போனவர்களின் உறவினர்கள்



காணாமற் போன உறவுகளின் பெற்றோர்கள் புனர் வாழ்வு அதிகார சபையின் அதிகாரிகளை கரவெட்டி பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் சந்தித்துள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் புனர்வாழ்வு அதிகார சபையினால் நடமாடும் சேவை ஒன்று நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

இந் நடமாடும் சேவைக்கு புனர்வாழ்வு அதிகார சபையின் அதிகாரிகள் வந்திருந்தனர். இதன் போது மக்கள் தேவைகளை புனர்வாழ்வு அதிகார சபையினர் கேட்டறிந்து கொண்டனர்.

அத்துடன் இது தொடர்பில் பிரதேச செயலர் எஸ். சிவசிறியின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது.

இதன்போது 30க்கும் மேற்பட்ட பெண்கள் பிரதேச செயலரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது இதுவரை ஏன் அவர்களை வடுவிக்கப்படவில்லை என கேள்விகளை அடுக்கி இருந்தனர்.



இதேவேளை பிரதேச செயலர் சிவசிறி அத் தாய்மார்களின் மகஜரை வாங்கி புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார், (இ-5-60)

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

மூன்று மாதங்களுக்கு முன்னர் விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் கடந்த வியாழக். கிழமை உயிரிழந்துள்ளார்.

குடத்தனை வடக்கு குடத்தனையைச் சேர்ந்த சவரி முத்து யேசுராசா (வயது 58) என்ப வரே இவ்வாறு உயிரிழுந்தராவார்.

மணற்காடு சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் சிக்கிய மேற்படி குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை முடிவுற்று நல்ல நிலையில் வீடு திரும்பிய இவர் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார். (இ-5-60)

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக விஷேட பூஜை


இலங்கையின் பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் நாச்சிமார் கோவிலில் விஷேட பூசையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ)

## மழை வெள்ளத்தால் மக்கள் பெரும்அவதி

யாழ்ப்பாணத்தில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக நாவந்துறை வடக்கு மற்றும் சோனகதெரு பகுதியில் வசிக்கும் பல குடும்பங்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

நாவாந்துறைவடக்குஜே/85 கிராம சேவகர் பிரிவில் உள்ள வசந்தபுரம் நித்திய ஒளி, சாபிநகர் ஆகிய பகுதிகளில் 160 குடும்பங்கள் வசித்து வரு கின்றன.





1990ஆம் ஆண்டுகளில் இடம்பெயர்ந்த இவர்கள் தனியார் காணிகளில் குடியமர்ந்துள்ளனர்.

இவர்கள் தனியார் காணிகளில் குடியமர்ந்துள்ளதால் இவர் களுக்கான நிரந்தர வீட்டுத் திட்டங்கள் எவையும் இல்லை. தனியார்நிறுவனங்களும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தாலும் சிறுசிறு உதவிகள் கிடைக்கின்றன.

மழை காலங்களில் இவர்கள் பாரிய கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மழை காலத்தில் அனர்த்தம் பாரிய அளவில் ஏற்படுமிடத்து 5 பேருக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

அவை ஒருமுறைதான் வழங்கப்படுகின்றது. மிகவும் பின்தங்கிய நிலையில் இப் பிரதேச மக்கள் தமக்குரிய உதவிகளை பெற்றுத் தரும்படி அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)


## கற்கை நெறிகளின் மாவட்ட கண்காட்சி

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக் களத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதேச மட்ட மகளிர் அபிவிருத்தி நிலையங்களின் ஆடை வடிவமைத்தல். அழகுக்கலை மற்றும் மனைப் பொருளியல் கற்கை நெறிகளின் மாவட்டக் கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மற்றும் வட மாகாண மீன்பிடி வீதிப் போக்குவரத்து கிராம அபிவிருத்தி மற்றும் வாகன போக்குவரத்து அமைச்சர் எஸ். சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் மற்றும் யாழ்.மாவட்ட காணி நிர்வாக மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## 3 இடங்களில் மருத்துவ முகாம்



தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மல்லாகம் குளமங்கால் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம், கோணப்புலம் நலன்புரி நிலையம் மற்றும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் மருத்துவ முகாம் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இந்த மருத்துவ முகாமில் தொற்றா நோய்களான சலரோகம், குருதி அமுக்கம் போன்ற நோய்களுக்கான மருத்துவ ஆய்வும் யாழ். போதனா வைத்தியசாலையின் தோல் சிகிச்சைப் பிரிவினர் இணைந்து தோல் நோய்க்கான சிகிச்சைகளும் யாழ. போதனாவைத்தியசாலை பாலியல் தொற்று நோய்த் தடுப்பு சிகிச்சைப் பிரிவு அதிகாரியால் பரிசோதனைகளும் விழிப்புணர்வு நடவடிக்கையும் இடம் பெற்றன.

இதில் மருத்துவ அதிகாரிகள், தெல்லிப்பழை பொது சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

## 40:60 என்ற விகிதாசார புதிய நேர அட்டவணை

கடந்த 29.10.2015 ஆம் திகதி வட மாகாணப் போக்குவரத்து அமைச்சர் தலைமையின் கீழ் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகளுக்கும் தனியார் பேருந்துகளுக்குமான ஒருங்கிணைந்த நேர அட்டவ ணையானது 40:60 என்ற விகிதாசாரத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது.

இதில் வட மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளரும் ஐந்து மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரும் இலங்கை போக்கு வரத்துச் சபை வட மாகாண பிராந்திய முகாமையாளர், செயலாற்று முகாமையாளர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய சாலை முகாமையாளர்கள் மற்றும் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர், செயலாளா, நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் 5 மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர், செயலாளரும் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுஅலுவலர்கள்அனைவரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்திற்குள் மாவட்டங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் அனைத்து சேவைகளுக்கும், இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளுக்கும் தனியார் பேருந்துகளுக்குமான ஒருங்கிணைநத நேர அட்டவணையானது 40:60 என்ற விகிதாசாரததிற்கு அமைவாக பெரும் முரண்பா டுகள், வாக்குவாதங்களையும்தாண்டி அனைவரது ஒத்துழைப்புடனும் தயாரிக்கப்பட்டதுடன் இந்நேர அட்டவணையானது மிக விரையில் நடைமுறைக்கு வரவுள்ளதுஎன்பதனைஉரிமையாளர்கள் அனைவருக்கும் பொது மக்கள் அனைவருக்கும் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சி.சிவபரன் அறியத்தந்துள்ளார். (இ)

# முஸ்லிம் மக்களின் காணிகளை அபகரிக்க தமிழீழ விடுதலைப்புலிகள் அனுமதிக்கவில்லை

## வைத்திய கலாநிதி சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு

(வவுனியா)

**முஸ்லிம் மக்களின் காணிகளை தமிழ்மக்கள் அபகரிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்டத்தின் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வவுனியா றோயல் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இராணுவம் தமிழ், முஸ்லிம் மக்களின் வடகிழக்கு மாகாண காணிகளை அபகரித்து சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளித்தது போல் விடுதலைப்புலிகள் முஸ்லிம் மக்களின் காணிகளை அபகரிக்க அனுமதிக்கவில்லை. நான் வன்னி நிலப்பரப்பில் வாழ்ந்தவன். வன்னிநிலப்பரப்பில் நடந்தேறிய அரசியல் போராட்ட சூழல் தெரிந்தவன். துரதிர்ஷ்டவசமான ஒரு சூழலில் தமிழரின் விடுதலைப் போராட்டம் முடக்கப்பட அனுமதிக்கமுடியாத நிலையிலேயே முஸ்லிம் மக்கள் வடபகுதியில் இருந்து விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்படவேண்டி இருந்தது. இருப்பினும் முஸ்லிம் மக்களின் காணிகளை தமிழ் மக்கள் அபகரிக்க என்றும் விடுதலைப்புலிகள் அனுமதிக்கவில்லை. விடுதலைப்புலிகள் தூரநோக்கில் செயற்பட்டதால் தான் இன்று எவ்வித தங்கு தடையும் இன்றி முஸ்லிம் மக்கள் தமது காணிகளில் முல்லைத்தீவு




மாவட்டத்தில் குடியேறக்கூடியதாக இருக்கிறது.

விடுதலைப்புலிகளின் ஆரம்ப கால போராட்டத்தில் முஸ்லிம் இளைஞர்களும் முக்கிய பங்கு வகித்தனர் என்றும் முஸ்லிம் மக்களை இனசுத்திகரிப்பு செய்யும் நோக்கில் விடுதலைப்புலிகள் நோக்கவில்லை. அதனால்தான் 20 ஆண்டு காலத்தின் பின்னும் முஸ்லிம் மக்கள் தமிழர்களுடன் சேர்ந்து மீள்குடியேறி வருகிறார்கள். வட கிழக்கு மாகாணம் முஸ்லிம், தமிழ் மக்கள வாழும் தமிழ் மொழி பேசும் மாகாணம். இங்கு முஸ்லிம் மக்களுக்கு எதிராக எந்த ஒரு தமிழனும் யதார்த்தத்திற்கு மாறாக செயற்படமாட்டான். ஒருசில தமிழ், முஸ்லிம் இனவாதிகளால் தமிழ் மொழி பேசும் எமது மக்களின் ஒற்றுமை குலைக்கப்பட இடமளிக்கமுடியாது.

அதேசமயம் எமது வடகிழக்கு பிரதேச மக்கள் வலுக்கட்டாயமாக இடம்பெயரச் செய்தபின் இராணுவம எமது காணிகளை அபகரித்து சிங்கள மக்களுக்கு வழங்கியது பாரிய தவறு. மேற்படி தமிழ்மொழி பேசும் தமிழ், முஸ்லிம் மக்கள் இன சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு சிங்கள அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் துணைபோயினர் என்பது பட்டவர்த்தனம் என்றார்.(2)

## மக்கள் பயனடைந்த நடமாடும் சேவை வட மாகாண முதல்வர் தலைமையில்



மன்னார் மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய மடு பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள மக்களின் குறை நிவர்த்தி செய்யும் நடமாடும் சேவை நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் பாலம் பிட்டி தட்சணா மருதமடு அரசினர் தமிழ கலவன் பாடசாலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் ஆரம்பித்துவைக்கப் பட்டது. இம் மக்கள் குறை நிவர்த்தி நடமாடும் சேவையினை வடக்கு மாகாண சபையும் மன்னார் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தின.

இதன்போது வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் பிரதிக் குழுக்களின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவமோகன் ஆகியோரும் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும் வடக்கு பிரதம செயலாளர் எஸ்.பத்திநாதன், மடு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி, மாகாண அமைச்சுக்களின செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர கலந்துகொண்டு மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கினர்.

இம் மக்கள் குறை நிவர்த்தி நடமாடும் சேவையின் மூலம் மக்கள் பெறக்கூடிய சேவைகளாவன. முதலமைச்சரின் அமைச்சு செயலகம், மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் செயலகம், சுகாதார அமைச்சின் செயலகம் மற்றும் மருந்தகமும், விவசாய அமைச்சின் செயலகம், கண்காட்சி, கல்வி அமைச்சின் செயலகம், பிரதம செயலாளர் செயலகம், மடு பிரதேச செயலக சேவைகள், தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சி பத்திரம், கமநல சேவைகள், தொழில் திணைக்கள சேவைகள், கிராம அபிவிருத்தி திணைக்கள சேவைகள், நீர்வழங்கல் வடிகால மைப்பு சபையின் சேவைகள், பிராந்திய நீரியல் இன விரிவாக்கல் நிலைய சேவைகள் (நன்னீர் மீன் வளர்ப்பு), திருமண பதிவுகள், கடவுச்சீட்டு, சமுர்த்தி சேவைகள், காவற்றுறை சேவைகள், அஞ்சல் திணைக்கள சேவைகள், இலங்கை போக்குவரத்து சபையின் சேவைகள் ஆகியனவற்றை மக்கள் பெற்று பயன் படக்கூடியதாக இருந்தது. அத்தோடு வடக்கு போக்குவரத்து அமைச்சால் இங்கு வருகின்ற மக்களின் போக்குவரத்து தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இலவச பேருந்து சேவைகளும் நடத்தப்பட்டன.

இதேவேளை மு.தட்சணா மருதமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலைக்கென போட்டோ பிரதி செய்யும இயந்திரம் ஒ்றை வடக்கு மாகாண முதலமைச்சர் பாடசாலை அதிபரிடம் கையளித்தார். (2-9-281)

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கார் தீயில் எரிந்து முற்றாக நாசம்

### வவுனியாவில் சம்பவம்



(குருமன்காடு)

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரம சிங்கவின் கார் நேற்றுமுன்தினம் தீப்பற்றி எரிந்து விபத்துக்குள்ளானது.

வவுனியா ஏ-9 வீதியில் குறித்த காரினை அதன் சாரதி செலுத்திக் கொண்டிருந்த போது மூன்று முறிப்பு பகுதியில் கார் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இதன் போது சாரதி கதவினைத் திறந்துவெளியில் பாய்ந்து உயிர் தப்பியுள்ளார். சம்பவ இடத்திற்கு தண்ணீர் பௌசர்கள் வரவழைக்கப்பட்டு நீர் பாய்ச்சி தீ அணைக்கப்பட்டது. எனினும் கார் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இயந்திரக் கோளாறு காரணமாக இத் திடீர் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கின்ற போதிலும் விபத்திற்கான உண்மையான காரணம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

இந் நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)




## இந்திய இழுவைப்படகுகள் கடல்வளத்தை அழிக்கின்றன

### அஞ்சல் அட்டை போராட்டத்தை ஆரம்பித்து வைத்தபோது சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு

(பூநகரி)

நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கடற்றொழில் உபகரணங்கள் எதுவும் இன்றி பல்வேறு போராட்டத்தின் மத்தியில் இந்திய இழுவைப்படகுகள் கடல் வளத்தை அள்ளிச் செல்வது மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வடபுலகடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைகின்ற இந்திய இழுவைப் படகுகளினால் வடக்கு கடற்பரப்பில் கடல் வளம் கொள்ளையிடப்படுவதை தடுத்து நிறுத்துமாறு கோரி அஞ்சல் அட்டைகளை அனுப்புகின்ற விழிப்புணர்வு செயற்பாட்டினை கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் மேற்கொண்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாச செயலகத்தில் அதன தலைவர் எஸ்.பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சல் அட்டை போராட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாகவும் அவர்கள் கடல்வளத்தை அபகரித்து செல்வது தொடர்பாகவும் நீங்கள் கொண்டிருக்கின்ற உணர்வை நாங்களும் கொண்டிருக்கின்றோம். இது தொடர்பாக எமது தலைமை பல்வேறு மட்டங்களில் பேசிவருகின்றது.

இத்தகைய கடல்வள இழப்பு எவ்வாறு தனி ஒரு சமூகத்தின் இழப்பல்ல ஒட்டுமொத்த தேசத்தையும் அவர்களின் தேசிய வருவாயையும் பறிக்கின்ற செயலாகவே பார்க்கின்றோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கடற்றொழில் உபகரணங்கள் எதுவும் இன்றி பல்வேறு போராட்டத்தின் மத்தியில் இந்திய இழுவைப்படகுகள் கடல் வளத்தை அள்ளிச்செல்வது மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

எனவே இலங்கை அரசாங்கம் ராஜதந்திர ரீதியாக பேசி கடற்றொழிலாளர்களுக்கு நல்ல தீர்வை பெற்றுத்தர வேண்டும் என தெரிவித்தார்.

இந்த அஞ்சல் அட்டைகள் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், இந்திய பிரதமர் நரேந்திரமோடி, இலங்கை கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட ஐயாயிரம் பிரமுகர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நேற்றைய இந்த நிகழ்வுகளில் கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள், கடற்றொழிலாளர்கள் நலன் விரும்பிகள், கிளிநொச்சி மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அமைபபாளர் வேழமாலிகிதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (2)

## திருப்புகழ் இன்னிசைக்கச்சேரி

(கிளிநொச்சி - 1)

வவுனியா சுத்தானந்த இந்து சங்கத்தின் ஏற்பாட்டில் கந்தசஷ்டியை முன்னிட்டு நடத்தும் திருப்புகழ் இன்னிசைக் கச்சேரி எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் தலைவர் நா.சேனாதிராஜா தலைமையில் நடைபெறும்.

இதில் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக சங்கீதத்திற்கான முதுகலைமாணி நயினை. ட.சிவமைந்தன் இன்னிசை கச்சேரி நடத்தவுள்ளார். எனவே சமய, சங்கீத ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (2-277)

# ஐ.தே.கவிற்கு எதிராக மு.கா தாக்கல் செய்த மனு வாபஸ்

ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்திருந்த மனு வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட கடந்த நாடாளுமன்றில் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு உறுப்பினர்கள் இவ்வாறு மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது. கடந்த 2013 ஆம் ஆண்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக கட்சியின் தலைவர் ரணில் வக்கிரமசிங்க, முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

2010 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டது.


எனினும், குற்றப்பிரேரணை ஒன்றுக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்றில் வாக்களித்திருந்தது.

இவ்வாறு வாக்களித்தமையை அடிப்படையாகக் கொண்டு கட்சி உறுப்புரிமையை இரத்து செய்து நாடாளுமன்ற உறுப்புரிமையை பறிக்க ஐக்கிய தேசியக்கட்சி முயற்சிப்பதாகவும் கட்சியின் ஒழுக்காற்று விதிகள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு பொருந்தாது எனவும் தெரிவித்து நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கட்சி உறுப்புரிமை தடை செய்யப்படுவதற்கு இடைக்கால தடை விதிக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் கோரியிருந்தது. எவ்வாறெனினும், தற்போது இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்பட்டு வருவதனால் குறித்த மனுவை வாபஸ் பெற்றுக் கொள்வதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. (இ-7-10)

# மகனுக்கு பாடசாலையில் அனுமதி கோரி தாய் உண்ணாவிரதம்

## சிலாபத்தில் சம்பவம்



**சிலாபத்தில் தனது மகனுக்கு பாடசாலை அனுமதி கோரி தாயொருவர் பாடசாலை நுழைவாயில் முன்பாக உண்ணாவிரதமிருந்த சம்பவமொன்று நடைபெற்றுள்ளது.**

சிலாபத்தில் உள்ள ஆனந்தா தேசிய பாடசாலையின் நுழைவாயில் முன்பாக நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக உண்ணாவிரதமிருந்த நிர்மலி பெரேரா எனும் பெண்மணி கருத்து வெளியிடுகையில், இந்தப் பாடசாலையிலிருந்து 100 மீற்றர் தொலைவற்குள்ளேயே எங்கள் வீடு அமைந்துள்ளது. எனது மூத்த பிள்ளைகள் இரண்டு பேரும் இதே பாடசாலையில்தான் கல்வி கற்கின்றார்கள்.

இருந்தும் கடந்த பத்து மாத காலமாக எனது மகனுக்கு இந்தப் பாடசாலையில் அனுமதி கேட்டுப் போராடியும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. இதன் காரணமாக அவனது ஒருவருடப் படிப்பு பாழாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே உண்ணாவிரதமிருந்த பெண்ணை பாடசாலையின் பாதுகாவலர்கள் விரட்டியடிக்க முற்பட்ட சமயத்தில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த சிசிர அபேசேகர அவ்விடத்துக்கு வருகை தந்துள்ளார்.

கல்வி அமைச்சருடன் கலந்துரையாடி இப்பிரச்சினை தொடர்பில் தீர்வொன்றைப் பெற்றுத் தருவதாக அவர் உறுதியளித்ததையடுத்து நிர்மலி, தனது உண்ணாவிரதத்தை கைவிட்டுள்ளார். (இ-7-10)

# 11.2015 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ✦1520 - தென் அமெரிக்காவில் மகலன் நீரிணை மகலனால் கண்டுபிடிக்கப்பட்டது.
- ✦1592 - கொரியக் கடற்படையினர் பூசான் என்ற இடத்தில் மிகப்பெரும் ஜப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- ✦1604 - ஷேக்ஸ்பியரின் ஓத்தெல்லோ நாடகம் முதற்தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- ✦1611 - ஷேக்ஸ்பியரின் த டெம்பெஸ்ட் நாடகம் முதற்தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- ✦1755 - போர்த்துக்கல், லிஸ்பன் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக 60,000-90,000 பேர் வரை கொல்லப்பட்டனர்.
- ✦1805 - முதலாம் நெப்போலியன் ஆஸ்திரியாவை முற்றுகையிட்டான்.
- ✦1814 - நெப்போலியனின் பிரான்ஸ் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐரோப்பாவின் எல்லைகளை மீளவரையும் பொருட்டு வியென்னா காங்கிரஸ் கூடியது.
- ✦1876 - நியூசிலாந்தின் மாகாண சபைகள் கலைக்கப்பட்டன.
- ✦1894 - ரஷ்யாவின் மூன்றாம் அலெக்சாண்டர் இறந்ததை அடுத்து இரண்டாம் நிக்கலாஸ் மன்னனானான்.
- ✦1904 - இலங்கையின் வட மாகாணத்துக்கான தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது. இது அநுராதபுரம் வரை சேவையில் ஈடுபட்டது.
- ✦1911 - இத்தாலிக்கும் துருக்கிக்கும் இடையில் இடம்பெற்ற போரில் முதற்தடவையாக விமானத்தில் இருந்து குண்டுகள் வீசப்பட்டன.
- ✦1914 - முதலாம் உலகப் போர்: சிலியில் ஜேர்மனியக் கடற்படையுடன் நடந்த மோதலில் பிரித்தானியக் கடற்படையினர் முதன் முதலில் தோல்வியடைந்தனர்.
- ✦1918 - மேற்கு உக்ரேன் ஆஸ்திரிய-ஹங்கேரிப் பேரரசிடம் இருந்து விடுதலை பெற்றது.
- ✦1922 - ஒட்டோமான் பேரரசின் கடைசி சுல்தான் ஆறாம் மெகமெட் பதவியிழந்தான்.
- ✦1928 - துருக்கிய மொழி சீர்திருத்தம் ஏற்பட்டது. அரபு எழுத்துக்கள் புதிய துருக்கிய எழுத்துக்களாக மாற்றப்பட்டன.
- ✦1948 - சீனாவின் மஞ்சூரியா என்ற இடத்தில் சீனக் கப்பல் வெடித்து மூழ்கியதில் 6,000 பேர் கொல்லப்பட்டனர்.
- ✦1950 - புவேர்ட்டோ ரிக்கோ தேசியவாதிகள் அமெரிக்கத் தலைவர் ஹரி ட்ரூமனை கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.
- ✦1951 - நெவாடாவில் அணுகுண்டு வெடிப்புச் சோதனையில் அமெரிக்கப் படைகள் ஈடுபடுத்தப்பட்டனர்.
- ✦1954 - புதுச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று இந்தியாவுடன் இணைந்தது.
- ✦1956 - நிசாம் என அழைக்கப்பட்ட பகுதி ஆந்திரப் பிரதேசம் என்ற மாநிலமாக்கப்பட்டது.
- ✦1956 - இந்தியாவில் மைசூர், கேரளம், மதராஸ் ஆகிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன.
- ✦1956 - இந்தியாவில் கன்னியாகுமரி பிரதேசம் கேரள மாநிலத்தில் இருந்து பிரிந்து தமிழ்நாடு மாநிலத்துடன் புதிய மாவட்டமாக இணைந்தது.
- ✦1957 - அக்காலத்தில் உலகின் மிக நீளமான தொங்கு பாலமான மக்கினா பாலம் மிச்சிகன் மாநிலத்தில் அமைக்கப்பட்டது.
- ✦1973 - மைசூர் மாநிலம் கர்நாடகா என மாற்றப்பட்டது.
- ✦1981 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து அன்டிகுவா பர்புடா விடுதலை பெற்றது.
- ✦1993 - ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பதற்கான மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.
- ✦1998 - மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- ✦2006 - பெங்களூர் நகரின் பெயர் பெங்களூரு என மாற்றப்பட்டது.

### பிறப்புக்கள்

- ✦1762 - ஸ்பென்சர் பேர்சிவல், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் (இ. 1812)
- ✦1916 மோகன் குமாரமங்கலம் இந்திய அரசியல்வாதி (இ. 1973
- ✦1970 - கப்டன் மயூரன், விடுதலைப் புலிப் போராளி (இ. 1993)
- ✦1973 - ஐஸ்வர்யா ராய், இந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

- ✦1959 - தியாகராஜ பாகவதர், தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் (பி. 1910)
- ✦1996 - ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தனா, இலங்கையின் முதலாவது ஜனாதிபதி (பி. 1906)

# தமிழக மீனவர்களை விடுவிக்க இந்தியத் தூதரகம் நடவடிக்கை


இலங்கை சிறைகளிலுள்ள தமிழக மீனவர்களை விடுவித்து அழைத்துச் செல்ல இந்தியத்தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டில்லியில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

இந்திய மீனவர்கள் 120 பேர் இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இதேபோல் இலங்கை மீனவர்கள் 36 பேர் இந்திய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இரு நாட்டு மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக தூதரக அளவிலான பேச்சுவார்த்தை நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் இந்த விபரத்தை மட்டுமே பகிர்ந்துகொள்ள முடியும். இது மிகவும் நுட்பமாக அணுக வேண்டிய பிரச்சினை. மீனவர்கள் சிறைப்பிடிக்கப்படும் நடவடிக்கைகள் இரு நாடுகளுக்கும் புதிய பிரச்சினை கிடையாது.

வெகு காலமாகவே இதை இரு நாட்டு அரசுகளும் அணுகி வருகின்றன. இத்தகைய நிலைமை தொடராமல் தவிர்க்க இலங்கை அரசுடன் தொடர்ந்து இந்தியா பேசி வருகிறது என்றார் விகாஸ் ஸ்வரூப். இதேவேளை சிறைகளிலுள்ள இலங்கை மற்றும் இந்திய மீனவர்களை விடுவிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

### ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தனா



ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தனா செப்டம்பர் 17 1906 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இலங்கையின் இரண்டாவது ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதியுமாவார்.

இவர் பெயரின் சுருக்கமான ஜே.ஆர். என பிரபலமாக அறியப்பட்டார். இவர் ஜனாதிபதிப் பதவியை ஏற்கும் முன் அரசில் பல பதவிகளை வகித்துள்ளார்.

இவர் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு அதன் தலைவராகவும் செயலாற்றினார்.

இவர் இலங்கையின் சட்டத்துறையில் பிரபலமாக விளங்கிய குடும்பமொன்றில் பிறந்தார்.

இலங்கையின் தலைமை நீதிபதியாக இருந்த கௌரவ நீதியரசர் இயுஜீன் வில்பிரெட் ஜயவர்தனாவுக்கும், இலங்கையின் செல்வந்த வணிகர்களுள் ஒருவரின் மகளான அக்னசு டொன் பிலிப் விஜயவர்தனாவுக்கும் பிறந்த 11 பிள்ளைகளுள் இவரே முதலாமவர்.

# வரவு செலவுத் திட்ட விவாதத்திற்கான நாட்களை அதிகரிக்கக் கூடாது!

## ஜே.வி.பி. அரசிடம் வலியுறுத்து

வரவு செலவுத் திட்ட விவாதத்திற்கான நாட்கள் அதிகரிக்கப்படக் கூடாது என ஜே.வி.பி] கட்சி அறிவித்துள்ளது. வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த 7 நாட்களை 12 நாட்களாக உயர்த்தும் யோசனையை கடுமையாக எதிர்ப்பதாக ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் என்ற ரீதியில் இந்த யோசனையை கடுமையாக எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதனால் விவாதத்திற்கான நாட்களை ஒதுக்கும் தீர்மானத்தை ஒத்தி வைப்பதாக கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் எதிர்ப்பிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆதரவு தெரிவிப்பதாக தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 70(4) இன் அடிப்படையில் இரண்டாம் வாசிப்பிற்காக அதிகபட்சமாக 7 நாட்களை மட்டுமே ஒதுக்க முடியும் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, அடுத்து நடைபெறும் கட்சித் தலைவர் கூட்டத்தில் விவாதத்திற்கான நாட்கள் குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 220 | 250 | 350 |
| தக்காளி | 120 | 140 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 120 | 80 |
| கரட் | 80 | 60 | 160 | 70 |
| பூசணி | 50 | 60 | 60 | 40 |
| புடோல் | 100 | 60 | 100 | 50 |
| வாழைக்காய் | 60 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 160 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 70 |
| பயற்றங்காய் | 160 | 140 | 160 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 40 | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 160 | 200 |
| போஞ்சி | 180 | — | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | — | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 40 | 30 |
| தேசிக்காய் | 350 | 350 | 600 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 180 | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | — | — | 180 |
| முள்ளங்கி | 40 | — | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | — | 30 | 40 |
| வல்லாரை | 10 | — | 20 | 30 |

## வாரம் ஒரு தகவல்

# வாழ்க்கை

மற்றொருவரின் கீழ் வேலைபார்ப்பது வேறு-மற்றவரிடத்தில் தன் உடல்,பொருள்,ஆவி அத்தனையையும் அடகு வைத்துவிட்டு-மற்றவரை நம்பி வாழ்வது வேறு.

இன்றைய சூழ்நிலையில் எல்லோரும் சுயதொழில் செய்ய முடியாது.அவரவர் தங்கள் தகுதிக்கேற்ப மற்றொருவரின் கீழ் ஏதாவது ஒரு பணியில் கட்டாயம் அமர வேண்டிய நிலை உள்ளது.

அடுத்தவரின் கீழ் பணியில் இருப்பது குற்றமல்ல அடுத்தவருக்குப் பணிந்து செல்வது குற்றமல்ல.அடுத்தவருக்காகத் தன்சுய மதிப்பீட்டை தன் சொந்த நம்பிக்கையை இழந்து விடுவது தான் தவறு.

ஏதாவது ஓரிடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.அப்படிச் செய்யும் வேலையை முழு ஈடுபாட்டுடன் மன நிறைவுடனும் செய்ய வேண்டும்.உங்களுக்குவேலை கொடுத்தவரிடம் விசுவாசமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

ஈடுபாடு தேவைதான்;விசுவாசம் அவசியம் தான்.ஈடுபாட்டுடன் செய்யும் போது மட்டும் அந்த வேலையின் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியாது.விசுவாசம் இருந்தால் தான் நீங்கள் உண்மையானவராக இருக்க முடியும்.

ஈடுபாட்டுடனும் உண்மையுடனும் நீங்கள் செய்யக்கூடிய அந்த வேலையை பொருளீட்டுவதற்கு ஜீவனோபாயத்திற்கு என்று கருதலாமே தவிர அந்த வேலையே சாசுவதம் என்றும் அந்த வேலை போய் விட்டால் வாழ்க்கையே போய்விடும் என்றும் கருதக்கூடிய நிலைக்கு எப்போதும் ஆளாகிவிடக்கூடாது.

இப்போது செய்து கொண்டிருக்கும் பணியை விட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால் அதன்பின் வாழ்க்கையே வறண்ட பாலையாகிவிடும்,எந்தத் திசையில் போவது எனத் தெரியாமல் திகைக்க வேண்டியிருக்கும் என்ற நிலையில் நீங்கள் இருந்தால் உங்கள் சுயத்தை நீங்கள் இழந்து விட்டீர்கள் என்றுதான் பொருள். உங்கள் வாழ்க்கையே அடுத்தவரிடம் அடகுவைக்கப்பட்டிருக்கிறது என்று தான் அர்த்தம்.

உங்கள் வாழ்க்கைப் படகின் திசையை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்;துடுப்பை நீங்கள் வலித்தாலும் வலிக்காவிட்டாலும் படகின் திசை உங்கள் தீர்மானமாகவே இருக்க வேண்டும்.

# ஐ.நா. விசாரணையை எதிர்கொள்ளத் தயார்

## கருணா சவால்

**இலங்கை தொடர்பான ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணை அறிக்கையில், காணாமற்போனோரைக் கருணா குழுவினர் தான் கடத்தினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, கருணா கடத்தினார் என்று அதில் தெரிவிக்கப்படவில்லை. எனினும், ஐ.நாவின் விசாரணையை எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன் என கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.**



கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணை அறிக்கையில் காணாமற்போனவர்கள் கடத்தப்பட்டதில் கருணா குழு ஈடுபட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன? என்று அவரிடம் வினவியபோதே மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் அமைப்பிலிருந்து விலகி நான் இந்தியா மற்றும் லண்டனில் தங்கியிருந்தேன். இந்தக் காலகட்டத்தில்என்னுடைய பெயரைப் பயன்படுத்தி சிலர் ஆட்கடத்தல்; கொலைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆட்கடததல், கொலை தொடர்பில் இன்று பலர் கைது செய்யப்படுகின்றனர்.

இதிலிருந்து மக்கள் ஒன்றை மட்டும் தெரிந்துகொள்ள வேண்டும்.

நான் லண்டனில் கைதுசெய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகத்தான் செயற்பட்டேன். என் மீதான இவ்வாறான குற்றச்சாட்டுகளில் எது உண்மை என்பதை மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். எனினும், நான் ஐ.நாவின் விசாரணையை எதிர்கொள்ளவும் தயாராகவுள்ளேன்.

தமிழ் மக்களுக்கு இன்றைய காலகட்டத்தில் மாற்றுப் பலமான தமிழ்க் கட்சி ஒன்று தேவை. அதனால்தான், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைவதற்கு எனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளேன்" என்றும்அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் இருந்தவர்கள்தான் வெளிநாடுகளில் செய்தி இணையத்தளங்களை இயக்கி தமக்குப் பிடித்த அரசியல் தலைவர்களைப் பற்றி தமிழ்ப்பற்று எழுத்தாளர்கள் போல் எழுதுகின்றனர்.

அப்படியாயின் அவர்களையும் துரோகி என்றுதான் அழைக்கவேண்டும் என்றும் அந்தச் செவ்வியில் கருணா அம்மான் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# சாட்சியாளரிடம் எழுப்பப்படவுள்ள வினாக்களை முன்கூட்டியே வழங்குக

## மகிந்தவின் சட்டத்தரணியிடம் நீதவான் தெரிவிப்பு

(கொழும்பு)

சாட்சியாளரிடம் எழுப்பப்பட உள்ள நீண்ட வினாக்களை முன்கூட்டியே வழங்குமாறு முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவின் சட்டத்தரணிகளுக்கு நீதவான் பத்மன் சூரசேன தெரிவித்துள்ளார்.

பாரிய நிதி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் நீதவான் பத்மன் சூரசேன இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சியில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்கள் பந்துல குணவர்தன, காமினி லொக்குகே உள்ளிட்டவர்கள் விசாரணைகளில் பங்கேற்றிருந்தனர்.

மகிந்த ராஜபக்ஷ தரப்பு சட்டத்தரணிகள் நீண்ட கேள்விகளை சாட்சியாளரிடம் எழுப்ப விரும்பினால் அதனை கால நேரத்துடன் சாட்சியாளருக்கு வழங்க ஆவன செய்யுமாறு நீதவான் விசாரணைகளின் போது அறிவித்துள்ளார்.

வினாக்களுக்கு தேவையான ஆவணங்களை எடுத்துக் கொண்டு முன் ஆயத்தத்துடன் எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆணைக்குழுவிற்கு வருமாறு சாட்சியாளர் மஞ்சுள அலகிய வன்னவிற்கு உத்தரவிடப்பட்டது.

குறித்த தினத்தில் சாட்சியாளரிடம் நீண்ட கேள்விகளை எழுப்பும் மகிந்த தரப்பு சட்டத்தரணிகளும், அரச தரப்பு சட்டத் தரணிகளும் ஆணைக்குழுவினரும் பேச்சுவார்த்தை நடத்த உள் ளனர்.

இந்த பேச்சுவார்த்தையில் சாட்சியாளரையும் பங்கேற்குமாறு அழைக்கப்பட்டுள்ளது.

கேள்விகளுக்கு உரிய ஆதாரங்களுடன் பதிலளிப்பதற்கு கால அவகாசம் தேவைப்படுதனால் இவ்வாறு முன்கூட்டியே நீண்ட கேள்விகள் அடங்கிய விபரங்களை வழங்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)



நோத் சீ வரையறுக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக எஸ்.டி. பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். கூட்டுத்தாபனகட்டளைச் சட்டத்தின் 74ஆம் உறுப்புரையின் படி புனர்வாழ்வளிப்பு.மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





பிறப்பு
10.12.1922

இறப்பு
01.11.2014

## அமரர் அந்தோனிப்பிள்ளை சலினம்மா

நம்ப முடியவில்லை நீர் எம்மை பிரிந்து ஓராண்டானதை
வடியாத வெள்ளமாய் நிறைந்து கிடக்கின்றன உம் நினைவுகள்
உம் உருவம் கண்முன் வரும்போதெல்லாம்
கண்ணீரையும் துணைக்கு அழைக்கின்றன கண்கள்
உம் பிரிவானது சொந்தங்கள் மீண்டும் உம்மை
பார்க்க முடியாதோ என்று ஏங்க வைக்கின்றது
உம் நினைவுகள் வரும் போதெல்லாம்
எம் கண்கள் சிந்தும் கண்ணீரே உமக்கான காணிக்கை
உம் ஆன்மா இறை அமைதிபெற அனுதினமும் வேண்டுகின்றோம்.

பழைய சந்தை வீதி,
மாதகல்.

அன்புடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்.

(2212)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1961
09
03



மறைவு
2011
11
16

## திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி
(இடைப்பிட்டி, காரைநகர்)

திதி: ஷஷ்டி
01.11.2015

குஞ்சரித்தாய் குவலயத்தில்
குன்றனைய விளக்காகி
எம் குலத்தை வாழ வைத்து
எல்லோருக்கும் வழிகாட்டி
இவ்வுலகை இறையுலகை
இரண்டிலுமே பரம்சோதி
இணையடிகள் நிழலிலே
இன்புற்றாள் தவப்பேறே!
திருவடியில் சிவனருளால்
பெருமுத்தி அடைந்தாலும்
இருவிழிகள் நீர் சொரிய
இதயத்துள் நினைவேற்றி
திருத்தாயின் அடிதொழுவோம்
மனமலரால் அர்ச்சிப்போம்...
அருள் சொரியும் அன்னைமுகம்
அன்றாடம் பூஜிப்போம்

ஒன்றென்ன ஒருகோடி
ஆண்டோடிப் போனாலும்
என்றென்றும் எமதுள்ளம்
நீயுறையும் கோயிலம்மா
நன்றெமக்கு நல்கிடுவாய்
நாளும் ஒளியூட்டிடுவாய்...
நின்னடியை
சரணடைந்தோம்
நின்னருளால்
அமைதிகொள்வோம்.

(சீ-2580)

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்:
வெங்கடேஸ்வரா.

# வடமாகாண
# மரநடுகை மாதம்
# கார்த்திகை 1 - 30

ஐந்து மாவட்டங்கள் ஐந்து இலட்சம் மரக்கன்றுகள்



## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

**விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு**
**வடமாகாணம்**

(சி-2578)

யாவற்றிலும் நன்றோ, தீதோ என்பது கிடையாது. நம்எண்ணமே அதை அவ்விதம் தோற்றமளிக்கச் செய்கிறது. – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முஸ்லிம்களை வெளியேற்றியமைக்கு தமிழர்கள் தலைகுனிய வேண்டுமா?

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளால் 1990ஆம் ஆண்டு செப்ரெம்பரில் வெளியேற்றப்பட்டனர். திடீர் அறிவிப்போடு முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய போது அவர்கள் பட்ட வேதனை கொஞ்சமல்ல.

தங்களின் தேட்டம் அனைத்தையும் விட்டுவிட்டு வெறுங்கையோடு வெளியேறுவதென்பது எந்த வகையிலும் ஆற்றுப்படுத்த முடியாதது.

இவ்வாறு முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட போது தமிழ் மக்கள் அழுதனர். இருந்தும் காடேகும் இராமபிரானை தடுத்து நிறுத்த முடியாத அயோத்தி மக்கள் போலவே அன்று நாமும் இருந்தோம். இது எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு நன்கு தெரியும்.

அதேநேரம் முடிந்தளவு முஸ்லிம்களின் சொத்துக்களைப் பாதுகாத்து அவர்களிடம் மீளவும் ஒப்படைத்த தமிழர்கள் இந்த மண்ணில் இருக்கின்றனர் என்பதை முஸ்லிம் சகோதரர்கள் இன்றும் நன்றியுணர்வோடு நினைவு கூருவர்.

வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் சொத்துக்களை பாதுகாத்தால் அதற்கான தண்டனை என்ன? என்பதை தெரிந்திருந்தும் தமிழ் மக்கள் முஸ்லிம் சகோதரர்களின் சொத்துக்களை பாதுகாத்தனர் என்றால் அதற்குள் இருக்கக்கூடிய தியாகம் கொஞ்சமல்ல.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட போது அதனை உடனடியாகக் கண்டித்தவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள். அவரின் கண்டனம் தினகரன் பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

எனினும் அந்தக் கண்டனம் தொடர்பில் பேராசிரியர் சிவத்தம்பிக்கு அழுத்தம் ஏற்பட, அப்படி ஒரு கண்டனத்தை தான் வெளியிடவில்லை என்று பேராசிரியர் சிவத்தம்பி மறுப்புத் தெரிவிக்க அந்த மறுப்பும் தினகரனில் வெளிவந்தது.

ஆக, யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட போது, அதனைத் தடுத்து நிறுத்தும் திராணி தமிழர் எவரிடமும் இருக்கவில்லை. அதற்குக் காரணமும் உண்டு.

விடுதலைப் போராட்டம் மிக உச்சமாக நடந்து கொண்டிருந்த நேரம். 1990 ஒகஸ்ட் மாதத்தில் தீவகத்தை இராணுவம் முழுமையாக கைப்பற்றியிருந்தது.

கோட்டையில் அடைபட்ட இராணுவத்தை மீட்டெடுத்த இராணுவம் தீவகத்தில் அப்பாவிப் பொது மக்களைக் கொன்று தள்ளியது. இதனிடையே புலிகளின் முகாம்கள் மற்றும் தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் மீது விமானக்குண்டு வீச்சுக்களும் செல் தாக்குதல்களும் நடந்து கொண்டிருந்தன.

மிகப் பயங்கரமான நிலைமையில் யாழ். குடாநாடு தத்தளித்த போது, சாவகச்சேரியில் உள்ள முஸ்லிம் ஒருவர் படையினருக்குத் தகவல் கொடுத்ததாகவும் அதனாலேயே இலக்குத் தவறாமல் தாக்குதல் இடம்பெறுவதாகவும் புலிகள் கூறினர்.

முஸ்லிம்கள் ஒரு சிலரிடம் படையினர் துப்பாக்கிகளை வழங்கியுள்ளதாகவும் புலிகளின் குற்றச்சாட்டு நீள்கிறது.

இந்நிலையில் முஸ்லிம் மக்களை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றுவது என்று விடுதலைப் புலிகள் தீர்மானிக்கின்றனர். இந்தத் தீர்மானத்தில் சாமானிய தமிழ் மக்களுக்கு எந்தப் பங்கும் கிடையாது.

முஸ்லிம் மக்களின் வெளியேற்றம் கண்டு தமிழ் மக்கள் அழுதனர். இது இறைவன் அறிந்த உண்மை. இப்போது சொல்லுங்கள் முஸ்லிம்களை வெளியேற்றுவது தவறு என்று எந்தத் தமிழ் மகனாவது விடுதலைப் புலிகளிடம் கூற முடியுமா? அல்லது கூறியிருந்தால் கூறியவர் உயிரோடு இருந்திருக்கத்தான் முடியுமா?

சூழ்நிலை இதுவாக இருக்க, யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதன் 25 ஆவது ஆண்டு நினைவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் அரசியல்வாதி ஒருவர் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்காக தமிழ் மக்கள் தலைகுனிய வேண்டும் என்று கூறியதுடன் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து வெளியேற்றத்தைத் தடுத்திருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அன்புக்குரிய முஸ்லிம் சகோதரர்களே! 1995ஆம் ஆண்டில் புலிகளின் உத்தரவால் நாங்களும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறினோம் என்றால், உங்கள் விடயத்தில் தமிழ் மக்கள் தவறிழைக்கவில்லை என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

## பரிசளிப்பு விழா

யாழ்.சண்டிலிப்பாய் ஐடியல் அக்கடமி நிலையத்தின் பரிசளிப்பு தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை அக்கடமி நிறுவன மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நிர்வாக இயக்குநர் வி.என். பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

XXXXXXXXXXXXXXXX

யாழ்.வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.சுப்ரமண்ணியம் தலைமை யில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக ஜே/ 392 கிராம அலுவலர் சி.தவனேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-60)

XXXXXXXXXXXXXXXX

யாழ்.அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை முதல்வர் சு.மோகனராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், கௌரவ விருந்தினராக மாவட்ட காணிப்பதிவு அலுவலர் செல்வி ச.அனுஷாகரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.. (இ)

## வடக்கில் குற்றச்செயல்கள் குறைவடைந்து வருகின்றன

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

(கிளிநொச்சி)

2013ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதி வரை ஒப்பிடுகையில், வட மாகாணத்தில் குற்றச் செயல்கள் குறைவடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக பெண்கள், சிறுவர்களை கொலை செய்தல் மற்றும் துஷ்பிரயோகங்களை நோக்கும்போது, அவ்வாறான குற்றச்செயல்களில் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று பதிவான குற்றச் செயல்கள் பலவற்றுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக இயலுமை தமக்கு இருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மனித படுகொலைகள் குறைவடைந்துள்ளதாக அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் 31ஆம் திகதி வரை 391 படுகொலை சம்பவங்கள் பதிவாகியிருந்ததாகவும், 2015ஆம் ஆண்டு அதேகாலப் பகுதியில் 336 படுகொலைகள் மாத்திரமே பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நாட்டில் இடம்பெறுகின்ற பாரிய குற்றச் செயல்கள் வருடாந்தம் குறைவடைந்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

குற்றச் செயல்களை குறைப்பதற்கு நாட்டிலுள்ள அனைத்து தரப்பினரிடமிருந்தும் ஒத்துழைப்புக்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (செ-12)

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2015

"மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்"

–சீனப்பழமொழி–

## பலர் மனதைக் கவர்ந்துள்ள இயேசுவின் மலைப்பொழிவையே நாமும் முழு மனதோடு எமது வாழ்வாக்குவோமா?

இன்று திருச்சபை அனைத்துப் புனிதர்களையும் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றது. புனிதர்கள் என்பார் யார்? தங்களுடைய வாழ்வையும், பணியையும் இறைவனின் விருப்பத்துக்கேற்ப அமைத்துக் கொண்டவர்கள்தான் புனிதர்கள். இன்றைய பைபிள் பகுதியின் நற்செய்தியாகிய இயேசுவின் மலைப்பொழிவைத் தம் வாழ்வாக்கிய அனைவருமே புனிதர்கள்தான் எனலாம். இந்தநாள் நமக்குவிடுக்கும் அழைப்பு நாமும் புனிதராக வாழவேண்டும் என்பதே.

இயேசு மலைமீது இருந்து மக்களுக்கு அன்று மறையுரையாற்றினார்.

### பரமபிதா காட்டிய பாதை

மக்களுக்கு விளங்கக்கூடிய சுருக்கமான முறையில் மாபெரும் அர்த்தங்களை விளக்கிக்கூறி அவர்களுக்குப் புரியவைத்தார் இயேசு.

உரோம் நகரில் இவ்வருடம் ஆனி 12ஆம் திகதி இடம்பெற்ற மூன்றாவது உலக அருள்பணியாளர் தியானத்தில் கலந்து கொண்ட அருள்பணியாளர்களுக்கு திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது மறையுரையில் கூறியவற்றை இந்த இடத்தில் கவனத்தில் கொள்வோம்: இறைமக்கள் மீது 'அருள்பணியாளர்கள் இரக்கம் காட்டவேண்டும். விசுவாசிகள், மறையுரைகளை எட்டு நிமிடத்திற்குமேல் உன்னிப்பாக உணர்ந்து கேட்பது கடினம். எனவே உங்கள் இதயத்திலிருந்து நீங்கள் பேசவேண்டுமென்று இறைமக்கள் விரும்புகின்றனர், ஒரு கருத்து, ஓர் உருவம், ஓர் உணர்வு இவற்றையே ஒரு மறையுரை கொண்டிருக்கவேண்டும், மறையுரை என்பது ஒரு சொற்பொழிவோ அல்லது மறைக்கல்வியிலிருந்து எடுக்கப்படும் ஒரு பாடமோ அல்ல. அருள்பணியாளர்களாகிய நீங்கள் மறையுரைகளை ஒன்றுசேர்த்து தயார் செய்யுங்கள், இறையாட்சி பற்றி, இயேசுவின் மலைப்பொழிவு போதனை பற்றி, இதயத்தை மாற்றும் அன்பு பற்றி மறையுரை ஆற்றுங்கள், கொலை செய்யும் பயங்கரவாதத்தைவிட கடவுளின் அன்பு வல்லமை மிக்கது. திருச்சபை, இயேசு இல்லாத, இரக்கம் இல்லாத வெறும் அவையாகவே இருக்கக்கூடாது, திருச்சபை எப்போதும் அன்னையாகவே இருக்குமாறு செயற்படுங்கள். அருள்பணியாளர்கள் இறைவனின் கனிவான திருப்பணியாளர்களாக இருக்கவேண்டும், கனிவான திருப்பணி இறையருள் நிறைந்தது என்றும் திருத்தந்தை கூறினார்.

இயேசுவின் மலைப்பொழிவு வாழ்வின புதிய திட்டத்தை நமக்கு வழங்கி உலகின் போலியான விழுமியங்களிலிருந்து எம்மை விடுவிக்கினறது. இயேசுவின் மலைப்பொழிவுப் போதனை, நற்செயல்களுக்கு எம் உள்ளங்களை திறப்பதற்கும் வலியுறுத்துகின்றது. எளிய உள்ளத்தோர், துயருறுவோர், கனிவுடையோர், நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர், தூய்மையான உள்ளத்தோர், துன்புறுத்தப்படுவோர் ஆகியோர் பேறுபெற்றோர் என்று இயேசு மலைபொழிவுப் போதனையில் கூறியபோது, அது ஒரு புதிய கருத்துக் கோட்பாடாக இருக்கவில்லை, மாறாக மனித நிலைமையைத் தொட்டுக்காட்டுவதாக இருந்தது, இருக்கின்றது.

வன்முறையற்ற அகிம்சை வழியை இம்மலைப்பொழிவில் ஆணித்தரமாக இவ்வுலகிற்குச் சொல்லியுள்ள இயேசுவை தன் மானசீகத்தலைவராக ஏற்றுக்கொண்டவர் காந்தி. அவரைப் போலவே, மார்ட்டின் லூதர் கிங் ஜூனியரையும் அதிகம் கவர்ந்த பைபிள் பகுதி மலைப்பொழிவே என்கிறார்கள்.

'உலகின் புகழ்பெற்ற மனநல மருத்துவர்கள், அறிஞர்கள் கூறியுள்ள அனைத்து கருத்துக்களையும் ஒன்று திரட்டுவோம். அவற்றில் உள்ள தேவையற்ற வார்த்தைகளை எல்லாம் எடுத்து விடுவோம். மனநலம் பற்றி ஆடம்பர மற்ற, கலப்படமற்ற உண்மைகளை எல்லாம் திரட்டினால், அவற்றில் இயேசு போதித்த மலைப்பொழிவின் சில பகுதிகளை யாவது காணலாம்.




கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக இவ்வுலகம், ஓய்வின்றி, வீணாகச் சுமந்திருக்கும் ஏக்கங்களுக்கு, மலைப் பொழிவில் கிறிஸ்தவ உலகம் முழுமையான பதிலைக் கொண்டுள்ளது" என்று ஜேம்ஸ்.ரீ.பிஸகூர் என்ற புகழ்பெற்ற மனநல மருத்துவர் கூறியுள்ளார்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

அமெரிக்காவின் 33ஆவது அரசுத் தலைவராக இருந்த கென்றி ரூமன் Harry Truman சொன்ன கூற்றுகளில ஒன்று இது: 'மலைப்பொழிவு தரும் பாடங்களைப் பயன்படுத்தினால், தீர்க்கமுடியாத பிரச்சினைகள் என்று, அமெரிக்க ஐக்கிய நாட்டிலோ, உலகிலோ எதுவும் இருக்கமுடியாது" மலைப்பொழிவுப் போதனை, கிறிஸ்தவர்களின் புனித வாழ்வோடு தொடர்புடையதாக இருக்கின்றது. கடவுள் வலிமையானவர்களை நாணச் செய்ய பலவீனர்களைத் தேர்ந்தெடுக்கிறார். அதுமட்டுமல்ல கிறிஸ்தவம், சமயம் என்ற எல்லைகளைக் கடந்து, உலகத்தலைவர்களின் பெரும் அறிஞர்களின் மனதை கவர்ந்துள்ள இயேசுவின் மலைப்பொழிவை நாமும் முழு மனதோடு வாழ்வாக்குவோமா?








காங்கேசன்துறை பொலிஸ் பிரிவின் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கான கட்டடத்திறப்பு விழா நேற்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. இக்கட்டடத்தை பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன், பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜா, சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் ஆகியோர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.சாளின், கரணவாய் செய்தியாளர்)


உ

சாமியே சரணம் ஐயப்பா

அகில இலங்கை

சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்

நடாத்தும் 33 ஆவது ஆண்டு




# மகர ஜோதிப் பெருவிழா

கார்த்திகை மாதம் 1 ஆம் நாள் 17.11.2015 முதல் 48 நாட்களுக்கு சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு மண்டல பூஜை மகரஜோதிப் பெருவிழா நடைபெறும்.

கடந்த 33 ஆண்டுகளில் 132 தடவைகள் சபரிமலை புனித யாத்திரை சென்றுவரும் சபரிமலைக் குருமுதல்வர்

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி - ஆன்மீக அருள்ஜோதி"

**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் - J.P**



அவர்கள் தலைமையில் மலையாள முறைப்படி பூஜைகள் நடைபெறும்.

சாமியே சரணம் ஐயப்பா.

இடம்:- கமலா மோடிஹோல் - கொழும்பு -13

அனைவரும் வருக! ஐயப்பன் அருள் பெறுக!

(2203)

சுபஸ்ரீ- சாம்பசிவ
ஸ்ரீமணிகண்டசர்மா (B.Eng)
(ஸ்ரீசாஸ்தாபீட இளவரசன்)
077993 0140

பிரம்மஸ்ரீ நித்ய - சுதானந்த சர்மா
( IDM சங்கானை)
(நிர்வாகப் பொறுப்பாளர் - ஸ்ரீசாஸ்தாபீடம்)

## போராளிகள்...

பற்றாக்குறையே காணப்படுகிறது.

கடந்த சில மாதங்களிற்கு முன்னர் யாழ். நீதிமன்ற தாக்குதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் அனுராதபுரம் சிறைச்சாலையிலேயே அடைக்கப்பட்டிருந்தனர்.

இதனால் அவர்களை பார்வையிடுவதில் உறவினர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

தற்போது முழுநாட்டினையும் அச்சுறுத்தும் பிரச்சினைகளில் ஒன்று போதைப் பொருள் பாவனையாகும். இது சிறைச்சாலைகளிலும் காணப்படவே செய்கின்றது.

குற்றம் இழைத்துள்ளவர்களை திருத்துவதற்காக சிறைகளில் அடைக்கும் போது அவர்கள் போதைவஸ்து பாவனையார்களாக அல்லது அடிமைகளாக வெளியே வரும் நிலை மாற்றப்பட வேண்டும்.

மேலும் சிறைகளில் எவ்வித விசாரணையுமின்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்கைதிகள் விடுவிக்கப்படல் வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் உயர் பதவிகளில் உள்ள நிலையில் இவர்களிற்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதானவர்களினை தடுத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயம்.

தமிழ் அரசியல் கைதிகளினை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்காவிட்டால் அவர்கள் மீண்டும் போராட்டத்தினை முன்னெடுக்க வாய்ப்புண்டு.

ஆகையினால் சட்டமா அதிபர் திணைக்களம், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இவ்விடயத்தில் விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியம் என தெரிவித்தார் விஜயகலா மகேஸ்வரன். (செ-4)

## கசப்பான...

செளியன் தெரிவித்தார்.

பண்ணையில் அமைக்கப்பட்ட யாழ். சிறைச்சாலை கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டிருந்த நீதிபதி மேலும் உரையாற்றுகையில்,

சிறைச்சாலையில் உள்ள ஒவ்வொரு நபரும் நீதிமன்ற உத்தரவின் பேரிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்கள் நீதிமன்ற பாதுகாப்பிலேயே உள்ளனர் என்ற எண்ணம் ஒவ்வொரு சிறைச்சாலை உத்தியோகத்தருக்கும் இருக்கவேண்டும்.

இவர்கள் மறியல் சாலையில் தவறு செய்தால் கூட அன்புடனும் அரவணைப்புடனும் நடத்தப்பட வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்ட கைதிகள், குற்ற விசாரணை நடத்தப்படுகின்ற கைதிகள் தண்டிக்கப்பட்ட கைதிகள் என மூன்று வகையான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ் ஒவ்வொரு கைதிகளும் மனிதவுரிமைகளுடனும் அன்புடனும் நடத்தப்பட வேண்டும். இதனால்தான் வெலிக்கட சிறைச்சாலையில் ஒவ்வொரு கைதிகளும் மனிதர்களே என எழுதப்பட்டுள்ளது.

எங்களில் சோகமான பல வரலாறுகள் சிறைக் கூடங்களில் நடந்துள்ளன.

அந்த வரலாறுகள் மீண்டும் எழுதப்பட்டு விடக் கூடாது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் என எந்த இன மக்களாகவிருந்தாலும் எந்த பாகுபாடுமின்றியும் சிறைக் கைதிகள் கைதிகளாக மட்டுமே பார்க்கப்பட வேண்டும்.

சிறை உத்தியோகத்தர்களும் கைதிகள் மீது இனப்பாகுபாடு காட்டாது அவர்களது மனிதவுரிமைகளினை மதித்து நடக்க வேண்டும்.

1983ஆம் ஆண்டு 53 தமிழ் சிறைக் கைதிகள் கொல்லப்படார்கள், 2013 இல் 25 சிங்கள கைதிகள் கொல்லப்பட்டார்கள்.

இதேபோல் வவுனியாவிலும் 2013இல் 3 சிறைக் கைதிகள் கொல்லப்படார்கள் இத்தகை வரலாறுகள் இனிமேல் எழுதப்படக் கூடாது.

நீதிபதி அல்லது நீதவானின் உத்தரவில் இந்த கைதிகள் சிறை உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றார்கள். அவர்களை அதேபோன்று நீதவானிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடம் உள்ளது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் சில கசப்பான சம்பவங்கள் நடைபெற்றன. அவற்றை மறப்போம் மன்னிப்போம் என நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தார். (செ-4)

## மாவீரர் நினைவாக...

சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஐந்து மாவட்டங்களில் ஐந்து இலட்சம் மரக்கன்றுகள் என்ற இலக்குடன் ஆரம்பமாகவுள்ள இம்மரம் நடுகை எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கார்த்திகை மாதம் என்பது மரம் நடுகைக்கு உகந்த மாதமாகும். இது தமிழர்களின் கண்ணீரோடு போராட்டத்தோடு தொடர்புடைய மாதமாகும்.

தமிழ் மக்களின் நினைவுகளை கொண்டு சுமந்த இம்மாதம் பல தசாப்தகால போராட்ட வரலாறுகளை கொண்டமைந்துள்ளது என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார். (செ-4)

## தீபாவளிக்கு முன்னர்...

புதிதாக அமைக்கப்பட்ட யாழ்.சிறைச்சாலை திறப்பு விழா நேற்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறைக் கூடங்களில் அடைபட்டுள்ள தமிழ் கைதிகள் அரசியல் கைதிகளே. அவர்கள் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்பட வேண்டுமென இராஜாங்க அமைச்சர் விஜயகலா கூறியதனை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

தற்போதைய சூழ்நிலையில் இவர்களை எவ்வாறு விடுவிப்பது என்பது தொடர்பில் சட்டமா அதிபர், ஜனாதிபதி பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடவுள்ளோம்.

இதன் பின்னர்தான் அரசியல்கைதிகளின் விடுவிப்பு தொடர்பில் இறுதி நடவடிக்கை யெடுக்கப்படும்.

மேலும் தற்போது புதிதாக அமையப் பெற்றுள்ள சிறைச்சாலை நவீன வசதிகளை கொண்டமைந்தது என கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு பெரிதாக ஒன்றுமில்லை என இங்கு வந்த பின்னர்தான் தெரிந்தது.

இந்த நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இணைந்து செயற்பட்டால்தான் உண்மையான அபிவிருத்தியை அடைய முடியும்.

இனவாதத்தை பேச, குறுகிய அரசியல் இலாபத்தை தேட சிலர் முயற்சிக்கின்றனர்.

எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும் இனவாதத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களாகவே உள்ளனர்.

தமிழ் மக்களை நாங்கள் கைவிடவில்லை இன்றும் நினைத்துக் கொண்டுதான் உள்ளோம்.

நாம் இரண்டு இனங்களாக பிரிந்து வாழ வேண்டிய அவசியமில்லை.

மதங்களை பொறுத்தவரையில் பௌத்த இந்து விழுமியங்கள் ஒன்றுக்கொன்று ஒற்றுமை கொண்டனவாகவே உள்ளன.

ஆகையினால் நாம் ஏதோ ஒரு விதத்தில் ஒன்றுபட்டுள்ளோம்.

கடந்த காலங்களை மறந்து நாட்டின் அபிவிருத்திகளில் மூன்று இன மக்களும் ஒன்றிணைந்து உழைப்போம் என்றார் அமைச்சர். (செ-4)

## அரச நிறுவனங்களில்...

அரசாங்க நிறுவனாங்களிலும் இலவச WiFi வசதிகளை ஏற்படுத்துவதற்கு எண்ணியுள்ளதாக அந்த முகவர் நிறுவனத்தின் முகாமையாளர் கவஸ்கார் சுப்ரமணியம் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் அமைச்சுகள் திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகக் கட்டடங்களில் இந்த வசதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய பிரஜையொருவர் அரச கட்டடத்தினுள் பிரவேசித்த பின்னர், அரசாங்க சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு தமது மடிக் கணனி அல்லது ஏனைய தொழில்நுட்ப சாதனங்களின் மூலம் இந்த WiFi வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் முகாமையாளர் கூறினார்.

நாட்டிலுள்ள 173 நிலையங்களில் இதுவரை இலவச WiFi வசதிகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (செ-12)

## யாழ்.சிறைச்சாலை கட்டிடம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனையின்கீழ் மகிந்தவின் சகோதாரரும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷவினால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டப்பட்ட யாழ்.சிறைச்சாலையினை சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாறப்பன திறந்து வைத்துள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் இச் சிறைச்சாலை திறந்து வைக்கப்பட்ட பின்னர் 10 கைதிகள் முதலில் சிறைச்சாலைக்குள் செல்ல விடப்பட்டதன் பின்னரே விருந்தினர்கள் கைதிகளுக்கு அடுத்ததாக உள்ளே வந்தனர்.

இந்நிகழ்வில் பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள், நீதவான்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## விசாரணைக்குழுவுக்கு 1157 முறைப்பாடுகள்

பாரிய மோசடிகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு பொதுமக்களிடமிருந்து 1157 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 900 முறைப்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு ஆராய்ந்துள்ளது.

எனினும் சுமார் 600 முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகார வரம்புக்கு உட்படாத முறைப்பாடுகள்என்று ஒதுக்கப்பட்டு ள்ளது.

எஞ்சியவற்றில் 300 முறைப்பாடுகள் தொடர்பில் ஆரம்ப கட்ட விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

இவற்றில் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களில் நடைபெற்ற ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளும் உள்ளடங்கியுள்ளன.

கடந்த 2010-ம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் 2015 ஜனவரி வரையான காலப் பகுதிக்குள் நடைபெற்ற மோசடிகள் தொடர்பாக விசாரிக்கும் அதிகாரம் மட்டுமே குறித்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு முந்தைய வருடங்களின் மோசடிகள் தொடர்பில் ஆராய ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்றும் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (செ-11)

## சரணடையும்...

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப் புலிகள் சரணடைவதற்கு அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் இந்தியாவின் ஆதரவுடன் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் பிரகாரம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் சரணடைவதற்கு வலியுறுத்தும் ஒரு நகர்வு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், சரணடையும் விடுதலைப் புலிகளை ஏற்றி வருவதற்கு ஒரு கப்பலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இந்த இரண்டு நகர்வுகளுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானும் சாதகமாகப் பதிலளிக்கவில்லை. இதன் விளைவாகவே, வெள்ளைக்கொடியுடன் சரணடைய முனைந்த போது மரணங்கள் ஏற்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

## புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி ஆனைக் கோட்டை பொது நூலகத்தில் நேற்று ஆரம்பமான புத்தகக்கண்காட்சி எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இடம்பெறவுள்ளது என வலி தென்மேற்கு பிரதேச சபை பொது நூலக நூலகர் அறிவித்துள்ளார். (இ-5)

## தனியார் வகுப்புக்களுக்கு...

இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போதே, தனியார் மேலதிக வகுப்புகள் நடத்தப்படுகின்றமை குறித்து முறைப்பாடுகள் பல கிடைத்துள்ளன.

இதனால் மாணவர்களின் பாடசாலை வரவு குறைவடைகிறது.

இதனை தடுப்பதற்கான யோசனை விரைவில் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு, பின்னர் நாடாளுமன்றத்தில் சட்ட மூலமாக சமர்ப்பிக்கப்படும் என்றும் கல்வியமைச்சர் தெரிவித்தார். (செ-12)

## அவன்கார்ட்...

ஆயுதங்கள் மற்றும் அவற்றின் ஆவணங்கள், ரக்னா லங்கா நிறுவனத்துடன் ஆயுதப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதா போன்ற விடயங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக லெசில் டி சில்வா கூறியுள்ளார்.

இந்த விசாரணைகள் தொடர்பான இறுதி அறிக்கை எதிர்வரும் சில தினங்களில் தயாரித்து முடிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## புதிய சட்டங்களை...

னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து வழமையான சட்டங்களின் பிரகாரமே விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அரசியலமைப்பில் அவ்வாறே தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறின்றி குறித்த விசாரணைகளுக்காக புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டால் அது அரசியலமைப்புக்கு விரோதமானதாகும்.

இவ்வாறு புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமாயின் அது தொடர்பில் பொது மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தி அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் சரத் என் சில்வா தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (செ-12)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அசைவ உணவகத்துக்கு உதவியாளர், றொட்டி- கொத்து றொட்டி தயாரிக்கத் தெரிந்த ஆண்கள் தேவை (2205)

தொடர்பு:- 0771258072



## வீடு வளவு விற்பனைக்கு

சங்கானை வல்லை வீதியில் சிவபிரகாசம் மகா வித்தியாலயத்துக்கு அருகாமையில் 2 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. (2207)

தொடர்புகளுக்கு:- 0775800847



## நடமாடும் மிருகவைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைகளுக்கு

தொடர்பு: 077 973 8802, 021 224 2502

(2191)



## தையல்

இந்தியாவில் 8 வருட கால அனுபவம் வாய்ந்த பெண் றெய்லரால் சாறியிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும். (2217)

இடம் :- குமாரசாமி வீதியிலிருந்து பிரம்படி வீதி கொக்குவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு :- 0766399277



## Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)

*சிறுவர்களிற்கான கற்கைநெறி

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்: KRC



## அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

V2 TRAVELS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960 |

இன்றுடன் பதிவுகள் நிறைவடைகின்றன

அலுவலர்களின் நன்மை கருதி இரவு 8 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும் (C-2589)


## சிறுபான்...

வகையிலும், அவர்களை பலப்படுத்தும் வகையிலும் இவர்களது செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு வட மாகாணத் தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போது வெளிவிவகார அமைச்சர மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையின் கடந்த ஆட்சியில் மிகவும் மோசமான வகையில் சிறுபான்மை இன மக்கள் பாதிக்கப்பட்டனர். பௌத்த நாடு என்ற பெயரில் மிகவும் மோசமான முறையில் சிறுபான்மை மக்கள் அடக்கப்பட்டு வந்தனர்.

அதேபோன்று மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் திட்டமிட்ட இன அழிப்பும், அடக்குமுறையும் நடைபெற்றன.

பெரும்பான்மை ஆதிக்கத்தை தூண்டிவிடும் வகையிலும், அவர்களை பலப்படுத்தும் வகையிலும் இவர்களது செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் நாட்டில் இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த கடந்த ஆட்சி தவறிவிட்டது.

ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் மூவின மக்களையும் ஒன்றிணைத்து தேசிய ஒற்றுமையுடன் கூடிய பயணத்தை முன்னெடுக்க மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் விரும்ப வில்லை.

கடந்த ஆட்சியில் ஜனநாயகம், நல்லிணக்கம் எவையும் சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை.

அதன் தாக்கம் மிகவும் மோசமானதாக அமைந்தது. ஆனால் இப்போது அவ்வாறான ஒரு நிலைமை இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (செ-12)


## அடிப்படைச் சம்பளத்துடன் ரூ.60,000க்கு மேற்பட்ட மாதாந்தம் சம்பாதியுங்கள்

நிலையான தொழில் ஒன்று உங்கள் நகரத்திலே..

மில்லிக் லங்கா தனியார் நிறுவனத்துடன் இணைந்து டயலொக் நிறுவனத்தின் புதிய சேவை ஒன்றை மேம்படுத்தல் (சிம் காட் விற்பனை செய்வது தொடர்பாக அல்ல) மற்றும் அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு செயற்திறன் உள்ளவரிடம் வெற்றிடங்கள்

**தேவையான தகுதிகள்**

★ 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள்/ ஆண்கள் இருதரப்பினரும் விண்ணப்பிக்கலாம்.

★ காப்புறுதி உற்பத்திகளை விற்பனை செய்யும் அனுபவம் மேலதிக தகுதி ஒன்றாகும்.

**விண்ணப்பதாரிகள் எதிர்பார்க்கப்படும் பிரதேசங்கள்**

வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், (பருத்தித்துறை, கோப்பாய், மானிப்பாய்) (C-2587)

தொடர்புகளுக்கு 0765301896 0765301929



## திருமண வரவேற்புபசார அழைப்பிதழ்




அன்புடையீர்!

02-11-2015 திங்கட்கிழமை திருமண பந்தத்தில் இணையும்

**சிரஞ்ஜீவி : சோ.சந்திரசேகரசர்மா**

**சௌபாக்யவதி : லலிதாம்பிகை**

தம்பதிகளின் திருமண வரவேற்பு உபசார வைபவம் 03-11-2015 செவ்வாய்க்கிழமை மாலை 04 மணி முதல் சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில்-ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

சுபம்

(2200)

சிவன் கோயில்
குடவாயிற் கோட்டம்
மயிலணி - சுன்னாகம்

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்
ஸ்ரீமதி. நா. சோமாஸ்கந்தக் குருக்கள்
குடும்பத்தினர்



A/L 2016 Day Classes

## பௌதிகவியல்

R.குகன்

கடந்தகால, மாதிரி வினா-விடை வகுப்புக்கள் (திங்கள் - வெள்ளி)

பிரிவு I :- 9.30 - 11.30

பிரிவு II :- 11.45 - 1.30

## LIGHT

ஆரம்பம் 02-11-2015

Short note Classes
திங்கள், செவ்வாய், வியாழன் 1.30 - 2.30

Theary Classes
சனி, ஞாயிறு 3.30 - 5.30

(C-2583)

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.


NEW SCIENCE WORLD
Navalar Road -Brown Road Junction.
Jaffna.



UK - SWISS - AUSTRALIA - SINGAPORE - MALAYSIA

விரும்பிய எந்த நாட்டுக்கும் சென்று இலட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்க

## உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் & விசா ஏற்பாட்டுடன்



UK Certified **Hotel Management** Leading to University of Sunderland UK

வெளிநாட்டுப் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து அனுமதி பெற

**SPOT ADMISSION**

| | |
|---|---|
| 16-11-2015 திங்கள் 2 மணி | யாழ் சிகரம் விரிவுரை மண்டபம் |
| 17-11-2015 செவ்வாய் 9 மணி | மன்னார் RDH மண்டபம் |
| 18-11-2015 புதன் 9 மணி | வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல் |
| 18-11-2015 புதன் 2 மணி | கிளிநொச்சி சோலைவனம் விடுதி |

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்

பதிவுகளுக்கு 0773 616 798

SIKARAM School of Hospitality & English (C-2585)

**School of Hospitality & ENGLISH**

275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)



## SUNJEY'S MULTI MARKETING CENTER

SMMC

Sunjey's Multi Marketing Center என்னும் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதை முன்னிட்டு எதிர்வரும் தீபாவளிப் பண்டிகை வரை அனைத்துப் பொருட்களுக்கும் 10% விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

குறிப்பாக இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அசல்தோல் (Pure Leather) சப்பாத்துக்களை 6 மாத உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு :

இந்தியாவில் இருந்து சட்டபூர்வமான எந்தப் பொருட்களும் விமானம் மூலம் 10 நாட்களில் பெற்றுக் கொடுக்கப்படும். (நிபந்தனைக்கு உட்பட்டது)



கந்தன் கருணை

முருகன் அடியார்களுக்கு

## கந்தசஷ்டியை முன்னிட்டு யாழ்.நகரில் இருந்து முதன் முறையாக ஆறுபடை வீடு தரிசனம்

தரிசனம் 10 நாட்கள்.... புறப்படும் திகதி 11/11/2015

ஆறுபடை வீடுகளில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முருக படைத் தரிசனத்துடன் கடைசி 2 நாட்கள் திருச்செந்தூரில் நடைபெறும் உலகப் பிரபல்யம் பெற்ற சூரன் போர் காட்சியை கந்த அடியார்கள் காண ஓர் அரியசந்தர்ப்பம். மேலும் போகும் வழியில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களையும் தரிசனம் செய்யலாம்.

**20% விசேட கட்டணக் குறைப்புடன் 75.000/= SL. Rs**

**சென்னையில் ஒருநாள் சொப்பிங்குக்கு ஒதுக்கப்படும்**

எங்கள் கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டவை

→ இருவழி விமான கட்டணம்
→ இருவழி விமான நிலையத்துக்கான போக்குவரத்து கட்டணம்
→ மூன்று நேர உயர்தர சைவ உணவுகள்
→ இருவர் தங்கக்கூடிய அறை, இணைந்த குளியலறை
→ 2 தண்ணீர் போத்தல்/ காலை, மாலை தேநீர்
→ இந்தியாவில் 9 நாள்களும் யாத்திரைக்கு தனி குளிரூட்டப்பட்ட வாகனம் பயன்படுத்தப்படும்

முக்கிய குறிப்பு:

எதிர்வரும் 3-ம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் முழுத்தொகையையும் கட்டி உங்கள் பயணத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**Sunjey's Multi Marketing Center & Sunjeya Tourisum**

No: 713 Hospital Road, Jaffna.

0212217070, 0777474111, 0773545115

(C-2581)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 01.11.2015 தொலைபேசி : 021 222 3378
நாதம் 38




# தமிழினியை உயிரோடு பார்க்காத தமிழ் அரசியல்வாதிகள்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

ஆலடி மாநாட்டில் எல்லோரும் அமர்ந்திருக்கின்றனர். வாத்தியார் வைத்திலிங்கம் கையில் ஒரு பேப்பருடன் ஆலடி மாநாட்டிற்கு வருகிறார்.

**கங்காணி:** வாத்தியார் என்ன சங்கதி பேப்பர் என்ன சொல்லுது?

**வாத்தியார்:** அவள் பிள்ளை தமிழினி இறந்து போயிற்றார்.

**பண்டிதர்:** கடவுளே இளம் பிள்ளை எத்தனையோ கஷ்ட துன்பங்களை அனுபவித்துப் போட்டுது.

**கங்காணி:** என்ன வருத்தம்.

**வாத்தியார்:**கன்சராம்

**விதானையார்:** தமிழினி பற்றி எனக்கு நல்லாத் தெரியும். அந்தப் பிள்ளை வருத்தத்தோட மிகவும் கஷ்டப்பட்டு இருந்தது. ஒருத்தரின்ர உதவியும் கிடையாது. அந்தப் பிள்ளை இருந்த வீடுகூட அடிப்படை வசதி இல்லாதது.

**மூப்பர்:** ஏன்? விதானையார் எங்கட அரசியல்வாதிகள் ஒருத்தரும் போய்ப் பார்க்கவில்லையோ

**விதானையார்:** விடுதலைப்புலிகளின்ர மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளராக தமிழினி இருந்திருந்தால் எங்கட அரசியல்வாதிகள் அந்தப் பிள்ளையின்ர காலைக் கழுவி தங்கட தலையில தெளித்திருப்பினம். என்ன செய்யிறது. எல்லாவற்றையும் இழந்து ஒருதற்ற உதவியும் இல்லாமல் அந்தப் பிள்ளை இருந்தபோது ஒருத்தரும் எட்டிப் பார்க்கவில்லை.

**மூப்பர்:** விதானையார் உங்கட கதையைக் கேட்க எனக்குப் பெரிய கவலையா இருக்குது. விடுதலைப்புலிகளின்ர ஆசியோட கூட்டமைப்பு அமைத்து பாராளுமன்றத்துக்குப்போன ஒவ்வொருவரும் ஒரு பத்தாயிரம் ரூபா கொடுத்திருந்தாலும் அந்தப்பிள்ளை நிம்மதியாக சீவியம் நடத்தியிருக்கும்.

**கங்காணி:** அப்ப தமிழினியின்ர செத்தவீட்டிற்கும் எங்கட அரசியல்வாதிகள் போகவில்லையோ.

**விதானையார்:** நல்லா விட்டினம். 'தமிழினியின்ர செத்தவீடு எங்கட அரசியல்வாதிகளின்ர விளம்பரக் களம் அல்லோ. இதுகளில விளம்பரம் செய்தால்தானே அடுத்த தேர்தலிலும் வெல்லலாம்.

**பண்டிதர்:** அதுசரி விதானையார். அந்தப் பிள்ளையின்ர வீடு வாசலைக் கண்டபோதாவது



## தமிழினியை உயிரோடு பார்க்காத தமிழ் அரசியல்வாதிகள்

எங்கட அரசியல்வாதிகளுக்கு குற்ற உணர்வு ஏதேனும் ஏற்பட்டிருக்குமோ.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா இதென்ன கதை. அரசியல்வாதிகள் எண்டால் புண்ணியம், நீதி, நியாயம், மனச்சாட்சி எல்லாவற்றையும் துறந்தவர்கள். அவர்களிட்ட போய் குற்ற உணர்வு என்று எதையும் பார்த்தால் நாங்கள் தான் மடையர்கள்.

தமிழினியின்ர இறுதிக் கிரியையில கலந்து கொண்டு தங்களை இனங்காட்டுவது, தேவையெண்டால் தமிழினி இறப்பதற்கு முன்னதாகியும் தமிழீழம் பற்றித்தான் என்னுடன் கதைத்தார் என்று சில வார்த்தைகளை இயற்றிவிடுவது அவ்வளவுதான்.

**கங்காணி:** ஒன்று மட்டும் சொல்லுறன் அரசியல்வாதிகளாக இருந்தாலும் அவர்களிட்ட நீதி நியாயம் இருக்கவேணும். இல்லையெண்டால் எல்லாம் கஷ்டம்தான்.

**பண்டிதர்:** சரி, சரி அந்தப் பிள்ளை இறந்து போயிற்று. அந்தப் பிள்ளையின்ர ஆத்மா சாந்தியடைய ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம்.

(பண்டிதரின் அறிவிப்போடு ஆலடி மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து நின்றனர்.

மாடுண்டு கன்றுண்டு மக்கள் உண்டென்று மகிழ்வதெல்லாம் கேடுண்டு எனும்படி கேட்டு விட்டோம் இனிக்கேள் மனமே ஓடுண்டு கந்தை உண்டு உள்ளே எழுத்து ஐந்தும் ஓத உண்டு தோடுண்ட கண்டன் அடியார் நமக்குத் துணையுண்டு.

பட்டினத்தாரின் பாடலை வாத்தியார் பாட தமிழினிக்கான அஞ்சலி செலுத்தி முடிக்கப்பட்டது)

**கங்காணி:** வாத்தியார் என்ன? மாநாட்டிற்கு பிந்திப் போனியள். எங்காவது போய் வந்தனீங்களோ.

**வாத்தியார்:** ஓமோம் என்ர சொந்த இடம் அனலைதீவுதானே. எங்கட அனலைதீவுக்கும் அயற்கிராமமான எழுவைதீவுக்கும் எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவின்ர தலைமையில மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் நடமாடும் சேவை நடத்தினவியள். அதுதான் அங்க போன னான்.

**பண்டிதர்:** அட சங்கதி அப்படியே!

**விதானையார்:** பண்டிதர் ஐயா. முதல்வர் விக்னேஸ்வரன் ஐயாவின்ர தலைமையில அனலைதீவு எழுவைதீவு ஆகிய இடங்களில நடமாடும் சேவை நடத்தியதை உண்மையில பாராட்டவேணும்.

இப்படியான கிராமங்களுக்கு சேவை வழங்கினால் தான் அந்த மக்கள் அடிப்படை வசதிகளோடையாவது வாழுவினம்.

இதுபோன்ற நடமாடும் சேவைகளை எல்லா இடங்களிலும் ஏற்பாடு செய்தாக வேணும்.

அரசாங்கம் தரலாம் விடலாம். வடக்கு மாகாண சபையால வழங்கக்கூடிய சேவைகளை எங்கட மக்களுக்கு வழங்குவது கட்டாயமல்லோ.

இப்படியான நடமாடும் சேவைகளை கிராமங்களுக்குச் சென்று வழங்கும் போது அந்த கிராம மக்கள் எங்கட வடக்கு மாகாண அரசு மீது நம்பிக்கை கொள்வர். அதால முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவின்ர தலைமையில நடந்த நடமாடும் சேவை தொடர்பில ஆலடி மாநாடு தனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறது.

**மூப்பர்:** என்ன இருந்தாலும் தமிழர்களுக்கான அரசியல் தலைமை என்பது சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறதைக் காண முடிகிறது. கொழும்பில இயங்குகிற தமிழ் அரசியல் தலைமை அரசாங்கத்திற்கு சப்போட்டாச் செயற்படுகுது.

வடபுலத்தில அரசியல் தலைமை என்பது ஆர் தலைவர் என்று சொல்ல முடியாத அளவில தான் இருக்கு. யாராவது முன் வந்து நேர்மையானவர்களையும் சேர்த்து ஒரு புதிய அரசியல் தலைமையை உருவாக்க வேணும்.

**கங்காணி:** மூப்பர் சொல்லுறது நூறுவீதம் உண்மை. தமிழர்களுக்கு ஒரு தனித்துவமான அரசியல் தலைமை தோற்றுவிக்கப்படாவிட்டால் எங்களுக்கு மிகப்பெரிய ஆபத்துக்கள் ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

**பண்டிதர்:** தமிழர்களின்ர அரசியல் தலைவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன்தான். எல்லோரும் ஒன்றுசேர்ந்து விக்னேஸ்வரன் ஐயா தலைமையில தமிழ் அரசியல் தலைமையைக் கட்டியெழுப்ப வேணும்.

இதைச் செய்வது கட்டாயமும் காலத்தின் தேவையும். இப்படிப் பண்டிதர் கூற அதனை அங்கீகரித்து ஆசீர்வதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலித்தது. மணியோசையுடன் ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்




# போர்க் குற்றவாளிகளுக்கு தண்டனை இல்லை

தமிழர்கள் பொதுவில் மாலை மரியாதைகள், புகழுரைகளில் மயங்கிப் போவது இயல்பு. இது தமிழர்களின் மரபணுவுடன் கலந்துவிட்ட விடயம்.

ஏனைய இனங்களில் இத்தகைய சிறுமைத்தனங்களைப் பார்க்க முடியாது. அதனால் அரசியல், நிர்வாகம் ஆகியவற்றில் அவர்களின் செயற்பாடுகள் கனதியாக இருப்பதைக் காணமுடியும்.

தமிழ் அரசியல்வாதிகளைப் பார்க்கும்போது விழாக்களிலேயே அவர்களின் காலம் கடந்து விடுகிறது.

விழாக்கள்,மாலை மரியாதைகள் பொன்னாடைகள் போதைக்குறைக்கு கௌரவ, மரியாதைக்குரிய, மாண்புமிகு இப்படியான சொற்பதங்களால் அரசியல்வாதிகள் திக்குமுக்காடி எவர் மீதும் நடவடிக்கை எடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.


இதன் காரணமாக பொதுமக்கள் அரசியல்வாதிகளைச் சந்தித்துத் தங்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூற முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றனர்.

தென்பகுதியைப் பொறுத்தவரை சிங்கள அரசியல்வாதிகள் பொதுமக்களுடன் அந்நியோன்னியமாகப் பழகுகின்றனர். மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்குப் பரிகாரம் தேடுகின்றனர். ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அரசியல்வாதிகள் தங்கள் அலுவலகங்களில் இருந்து பொதுமக்களைச் சந்திக்கின்றனர்.

ஆனால் எங்கள் தமிழர் தாயகத்தில் அலுவலகத்தில் இருக்கின்ற அரசியல்வாதிகளைக் காண்பது அபூர்வமாகி விடுகிறது. இதுமட்டுமன்றி எங்கள் அரசியல்வாதிகள் மாலை மரியாதைக்காக அலைந்து திரிவதனால் அதிகாரிகளும் தங்கள்பாட்டில் செயற்படும் நிலைமையைக் காணமுடிகிறது.

அரச உயரதிகாரிகளுக்கு எந்த நாளும் விழாக்கள், கொண்டாட்டங்கள் என்றால் நிர்வாகம் எங்ஙனம் இயங்கும் என்பதை ஒருகணம் சிந்தித்தாக வேண்டும்.

இருந்தும் அரசியல்வாதிகள் தங்கள் பதவிகளுக்காக அரச உயரதிகாரிகளின் கால்களைத் தொட்டு வணங்க, அரச அதிகாரிகள் தமிழ் அரசியல்வாதிகளைப் பார்த்து நான் இல்லையென்றால் இவன் பாராளுமன்றம் போயிருக்க முடியாது என்று சொல்லும் அளவிலேயே நிலைமை உள்ளது.இதற்கு எங்களின் தேர்தல் முறைமைகளும் விருப்பு வாக்கு நடைமுறைகளும் உள்ளன.



இலங்கையில் எவ்வளவுதான் தேர்தல் ஒழுங்குகளைச் செய்தாலும் ஒரு அரசாங்க அதிபர் நினைத்தால் தான் விரும்புகின்ற வேட்பாளரை பாராளுமன்ற உறுப்பினராக ஆக்க முடியும் என்பது பல இடங்களில் நிரூபணமாகியுள்ளது.


எனது காலத்தில் சிலர் என்னை வற்புறுத்திய தன்பேரில் விருப்பு வாக்குக் குறைந்த ஒருவரை பாராளுமன்ற உறுப்பினராக ஆக்கினேன் என்று யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச அதிபராக இருந்து ஓய்வுபெற்ற ஒருவர் கூறினாராம்.


ஆக, இலங்கையின் எப்பாகத்திலாவது அரச அதிபரினால் பாராளுமன்ற உறுப்பினராக்கப்பட்டவர்கள் எந்தக் காலத்திலும் அரச அதிகாரிகளைக் கட்டுப்படுத்தவோ ஒழுங்குபடுத் தவோ முடியாது. இத்தகைய நிலைமைகளை எங்கள் நாட்டு நடைமுறையில் நாம் காண முடிகின்றது.

அதிகாரிகள் ஒருபுறம் பாராளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர் கள் மறுபுறமாக விழாக்க ளில் போட்டி போட் டுக் கலந்து கொள் கின்றனர்.

இந்த மாலை மரியா தைகள் என்ற படோபகா ரங்களையும் தூக்கியெறிந்து விட்டு எங்கள் கடமை, எங்கள் பணி என்பதை மனச்சாட்சியோடு செய்கின்ற அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இருக்கின்றனர் என்பதையும் மறுதலித்துவிட முடியாது.

## தமிழர்களுக்குப் புதிய அரசியல் தலைமை தேவை





எதுவாயினும் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படாதவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக வருகின்றபோது, அவர்கள் நிச்சயம் பொதுமக்களுக்கு எதிராகவே செயற்படுவர். இத்தகையதொரு போக்கில் தமிழ் அரசியல் தலைமை சுயலாபம் என்ற நோக்கோடு செயற்படத் தொடங்கிவிட்டது.



ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவை ஆணையாளர் இலங்கையில் நடந்த போர்க் கொடூரங்கள் பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருந்த போதிலும் விலைபோன எங்கள் தமிழ் அரசியல் தலைமை எங்கள் இனத்திற்கு எதிராகக் கருத்துக்கூறி எல்லாவற்றையும் நாசமறுத்தது.

இலங்கை அரசுக்கு உதவி செய்யும் நோக்கோடு ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இருந்தும் தீர்மானம் நிறைவேறி சில வாரங்கள் கூட கடந்து போக முன்னதாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் போர்க்குற்றம் தொடர்பில் தண்டனை வழங்கப்படமாட்டாது என்று இலங்கை அரசு கூறியுள்ளதாயின் போரால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் நிலைமை என்னவாகிறது என்பது தெரிகிறதல்லவா.

ஐக்கிய நாடுகள் சபை என்ற உலக அமைப்பின் தீர்மானத்திற்கு என்ன நடக்கிறது என்பதை இலங்கையில் இருந்தேனும் உலக நாடுகள் கற்றுக் கொள்ளவேண்டும்.

போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை நடைபெறாத நிலையில் மகிந்தவுக்கும் கோத்தபாயவுக்கும் தண்டனை வழங்கப்படமாட்டாது என்று இலங்கை அரசு அறிவிக்குமாயின், இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படும் போர்க்குற்ற விசாரணை எவ்வாறு அமையும் என்பதை நாம் சொல்லி எவரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்காது.

போர்க்குற்ற விசாரணைக்கு முன்னரே மகிந்தவுக்கும் கோத்தபாயவுக்கும் தண்டனை இல்லை என்று அறிவிக்கும் இலங்கை அரசு போர்க்குற்ற விசாரணையை நடத்தினால் அது தமிழ்மக்களுக்கே ஆபத்தாக அமையும் என்ற உண்மையையும் இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கும் போது அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு அடுத்த எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையைப் பெற்ற இரா. சம்பந்தர் என்ன சொல்கிறார் என்றால் எதுவுமேயில்லை.

ஆக; தமிழ் அரசியல் தலைமை, இலங்கை அரசுடன் எழுதா யாப்பாக செய்து கொண்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே எல்லாம் நடந்து போகிறது. போருக்குப் பின்பும் விடுதலைப்புலிகளைத் தண்டித்தாகவேண்டும் என்பதில் எங்கள் தமிழ் அரசியல் தலைமை உறுதியாக இருக்கின்றது.

என்ன செய்வது மாற்றுத் தலைமையின் தேவை என்றோ ஏற்பட்டுவிட்டாலும் அதனை உருவாக்குவதற்கு எவரும் இல்லாத காரணத்தால் தமிழ்மக்களின் வாக்கு யானையின் தலையில் விழுந்த மண்ணாகிப் போகிறது.

எது எப்படியாயினும் புதியதொரு தமிழ் அரசியல் தலைமையை தமிழ் மக்கள் உருவாக்கத் தவறினால் தமிழ்மக்கள் வன்னிப்போரில் சந்திக்காத பேரழிவை அணுஅணுவாக சந்திப்பர் என்பது சர்வ நிச்சயம்.

விதுரன்







ஒரு ஊரில் மூன்று குட்டிப் பன்றிகள் இருந்தது.

ஓய்வு நேரங்களில் நன்றாக சாப்பிட்டு தூங்குவது இவைகளுக்கு ரொம்ப பிடிக்குமாம்.

இப்படியே நாட்கள் கடந்தது.

இன்னும் சிறிது நாட்களில் குளிர் காலம் வந்துவிடும் என்பதால் மூன்றுமே தங்களுக்கென வீட்டைக் கட்டிக் கொள்ள விரும்பியது.

உடனே முதல் பன்றி வைக் கோல் வைத்து வீட்டைக் கட்டி முடித்தது.

இரண்டாவது பன்றி குச்சிகளை வைத்து கட்டிமுடித்தது.

மூன்றாவது பன்றியோ செங்கல் வைத்து வீட்டை கட்டி முடித்தது.

மூன்று பன்றிகளுக்கும் ஒரே சந்தோஷம் தங்களுக்கென ஒரு வீடு இருப்பதை எண்ணி.

ஓரிரு நாட்கள் கழித்து அந்தப் பக்கமாக ஒரு நரி வந்ததாம்.

அது முதல் பன்றியின் வீட்டுக் கதவைத் தட்டியதாம்.

உடனே பன்றி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துப் புரிந்து கொண்டது தட்டுவது யாரென்று.

அதனால் கதவைத் திறக்க முடியாது என்றதாம்.

அப்போது நரி சொன்னதாம்,

நீ கதைத் திறக்கவில்லை என்றால் உன்னால் முடிந்தால் செய்து பார் என்றதாம்.

நான் உன்வீட்டை ஊதியே இடித்துவிடு வேன்.

பிறகு உன்னை சாப்பிட்டும் விடுவேன் என்றதாம். உடனே பன்றியோ சற்றும் பயப்படாமலும்,

நரி சொன்னதுபோல் வீட்டை ஊதியே இடித்துவிட்டதாம்.

ஆனால், பன்றியோ பயந்து கொண்டுவேகமாக இரண்டாம் பன்றியின் வீட்டுக்குள் ஓடியதாம். அங்கே சென்றதும் இந்த நரி அங்கேயும் வந்து முன்னதாக சொன்னது போல் இங்கேயும்சொன்னதாம். இவர்களும் உன்னால் முடியாது.

முடிந்தால் செய்து பார் என்றார் களாம்.

அதுவும் சொன்னதுபோல் வீட்டை இடித்து விட்டதாம்.

இடித்தும் இந்த இரண்டு பன்றிகள் பயந்து ஒடுவதைக் கண்டு சிரித்துக் கொண்டே ஆணவத்துடன் பின்னாலேயே நடந்து போனதாம்.

அந்த இரண்டுபன்றிகளும் மூன்றாவது பன்றியின் வீட்டிற்குள் நுழைந்து வேகமாகக் கதவைத் தாளிட்டுக் கொண்டதுகளாம்.

அப்போது ஒன்றும் தெரியாத அந்த மூன்றாவது பன்றியிடம் நடந்தவற் றிப் பற்றி இவ்விரண்டும் கூறியதாம்.

அந்த நேரத்தில் நரி இங்கும் வந்து அதேபோலவே சொல்லி மிரட்டியதாம்.

உடனே மூன்றாவது பன்றியோ, அவ்விரண்டு பன்றிகள் சொன்னது போலவே சொன்னதாம்.

உடனே நரி ஊ........ ஊ........ வென வேக மாக ஊதிப் பார்த்ததாம்.

ஆனால் பாவம் இப் படி செய்து செய்து அதற்கு இருதயம் பலவீனமாகிப் போய் இறந்தே போனதாம்.

மூன்று பன்றிகளும் உயிர் தப்பியதை எண்ணி பெரு மூச்சு விட்டனவாம்.

## சைக்கிளிங்...

### சைக்கிள் பயிற்சியை மேற்கொள்வதால் கிடைக்கும் நன்மைகள்.

✦ சைக்கிள் ஓட்டுவதற்கு முன்பாக, மிதமான உணவையும் குடிநீரையும் எடுத்துக்கொள்ள வேண்டும். உணவு மற்றும் தண்ணீர் அதிகமானால், வேக மாக சைக்கிள் ஓட்டும்போது வாந்தி வரவும் வாய்ப்பு உண்டு.

✦ முதலில் மெதுவாகத் தொடங்கி, மிதமாக, வேகமாக, மிக வேகமாக என படிப் படியாகத் தான் சைக்கிளின் வேகத்தை அதிகப்படுத்த வேண்டும். சராசரியாக, மணிக்கு 20-25 கிலோ மீட்டர் வேகத்தில் ஓட்டுவது சிறந்தது.

✦ காலை மற்றும் மாலை நேரங்களில் சைக்கிள் பயிற்சி செய்வது சிறந்தது. ஏனெனில், நண்பகல் நேரத்தில் பயிற்சி மேற்கொள்ளும்போது, அதிக வெப்ப நிலை காரணமாக, உடல் எளிதில் சோர்வடைந்துவிடும்.

✦ இதயத் துடிப்பை அதிகப்படுத்தி, இதயத்தை வலுப்படுத்தவும், எலும்பு மற்றும் மூட்டுகளை வலுவாக்கவும், தசைகளை வலிமைப்படுத்தவும் சைக்கிளிங் உதவுகிறது.

✦ கையுறைகள் அணிந்து சைக்கிள் ஓட்டுவதால், மேல் உடலின் அனைத்து எடையையும் உள்ளங்கையில் சமன் செய்ய உதவும். தளர்வான உடைகள், தரமான காலணிகளை அணிந்துகொண்டு சைக்கிள் பயிற்சி செய்ய வேண்டும்.

✦ ஓய்வு நேரங்களில் சைக்கிள் பயிற்சியை மேற்கொள்ளலாம். இதன்மூலம் புதிய இடங்களையும் இயற்கைக் காட்சிகளையும் ரசிக்கும் வாய்ப்பும் அனுபவமும் கிடைக்கும்.

✦ சிறு வயது முதலே சைக்கிளிங் செய்வதால், உடல் பருமன் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

✦ நாம் சாப்பிட்ட உணவுப் பொருட்களில் இருக்கும் அதிகமான கலோரிகளை எரிக்கும் திறன், சைக்கிள் ஓட்டுவதால் கிடைக்கிறது.



✦ முன் பாதத்தால் மிதித்துத்தான் சைக்கிள் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். அப்போது தான், கால் தசைகள் கூடுதல் பலம் பெறும்

✦ தினமும் ஒரு மணி நேரம் சைக்கிள் ஓட்டுவதால், கை, கால் தசைகள் உறுதி பெறும்.

✦ உடலின் இரத்த ஓட்டத்தைச் சீராக வைக்கவும், இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களைக் கட்டுக்குள் வைக்கவும். உடல் வெப்பத்தையும் வியர்வையையும் வெளியேற்ற சைக்கிள் பயிற்சி உதவுகிறது.

## வைக்கோல் திருவிழா

'மாத்தி யோசி... மகிழ்ச்சி கிடைக்கும். உலகமும் கவனிக்கும்' என்கிறார்கள் ஜப்பான் விவசாயிகள்.

ஜப்பானின் மாநிலங்களில் ஒன்று, நிகாடா (Niigata). ஜப்பானின் மிக நீளமான தீவும் கூட. இங்கே, ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படும் 'வாரா ஆர்ட் ஃபெஸ்ட்டிவல்' (Wara Art Festival) என்கிற வைக்கோல் உருவத் திருவிழா, உலகம் முழுவதும் இருந்து சுற்றுலாப் பயணிகளை வரவைக்கிறது.





இங்குள்ள விவசாயிகள், நெல் அறுவடை முடிந்ததும் குவியும் வைக்கோலை மொத்தமாக எரிப்பார்கள். இதனால், சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாக புகார் எழுந்தது. என்னதான் செய்யலாம் என யோசித்தபோது தோன்றியது தான், இந்த வைக்கோல் உருவத் திருவிழா.

உள்ளூர் கலைஞர்கள் பலர் களத்தில் இறங்கி?, வைக்கோலில் தங்கள் கை வண்ணத்தைக் காண்பித்தனர். பிரமாண்டமான விலங்குகளின் உருவங்களை உருவாக்கி, திருவிழாவாக நடத்தினார்கள். அது இணையத்தில் வெளியாகி, வைரல் ஆனது. கடந்த எட்டு ஆண்டுகளாகக் கலக்கி வருகிறது.

ஒகஸ்ட் இறுதியில் தொடங்கி, நவம்பர் வரை இந்தப் பிரமாண்டமான வைக்கோல் உருவங்கள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் இதைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் பிரமாண்டமாகி வருகிறது.





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## இந்திய அணியுடனான போட்டியில் தென்னாபிரிக்காவின் அடிஎப்படி?

## திருவிழாக்களால் அதிக நன்மை யாருக்கு?

## அனிருத் மியூசிக் பற்றி?

**அருமை** — **பளை**

**உண்மையிலேயே கடவுள் இருக்கிறாரா?**

கடவுளுக்கு பயந்தோ, இல்லையோ **CCTV** கமராவுக்கு பயந்துதான் பல தப்புகள் நடக்காமல் இருக்கின்றன.

**தரன்** — **கோண்டாவில்**

**குட்டிக் கதை ஒன்று?**

போனைப் பாவிப்பது எப்படி என கற்றுக் கொடுத்துக் கொண்டு **அம்மா உங்களுக்கு எதுவுமே தெரியாது** என கிண்டல் செய்த அருணை வீட்டுவாசலில் யாரோ வந்து நிற்கிறார்கள் யார் என பார் என்றாள் அம்மா. ஓடிப்போய் கதவு திறந்தவன் அம்மா யாரோ வந்திருக்கிறாங்க என்றான். வந்திருப்பது அவனின் தாய் மாமன், மாமி என்பதை தெரியாமல்.

**தர்ஷிகா** — **யாழ்ப்பாணம்**

**தூக்கத்தில் நான் காணாமல் போய் விடுகிறேன் விழித்ததும் வந்துவிடுகிறேன் அது எப்படி?**

நிறையப் பேர் இப்படித்தான் சொல்லித்திரிகிறார்கள் தாங்கள் செய்யும் தவறுகளில் இருந்து தப்புவதற்கு.

**வி.என்.குமார்** — **புலோலி**

**திருவிழாக்களால் அதிக நன்மை யாருக்கு?**

திருடர்களுக்கு

**வே.அகிலேஸ்வரன்** — **மருதங்கேணி**


**உங்கள் மனைவி உங்களிடம் எதைக் கண்டு மயங்கினார்?**

எதைக் காணக் கூடாதோ அதைக் கண்டு தான். (என் சமூகப் பணியைச் சொன்னேன். உள்ளங்கையால் கொடுப்பது புறங்கைக்கு தெரியக் கூடாது என்பார்களே)

**சுகிர்தமலர்** — **உரும்பிராய்**

**இன்றைய முதியோர் இல்லங்கள் பற்றி?**

இல்லங்கள் ஒவ்வொரு முதியவரையும் சிறப்பாகத்தான் பார்க்கின்றன. ஆனால் அவர்களின் மனநிலை பட்டோலை விரிச்சு சாமரை வீசினாலும் புள்ளை குட்டியோட இருக்குமாப் போல வருமே? என்றுதான் இருக்கிறது.



**கோபி** — **மந்திகை**

**வித்தியாவின் படுகொலைக்கு தீர்வுகிடைக்குமா?**

கிடைக்கும்.எப்போதும் சட்டத்தில் இருந்து யாரும் தப்பிக்கமுடியாது. குற்றவாளிகளை இனம் கண்டு கண்டிப்பாக சட்டம் தன் கடமையைச் செய்யும். நல்லவர்கள் தண்டிக்கப்பட வோ குற்றவாளிகள் தப்பிக்கவோ சட்டம் ஒரு போதும் இடமளிக்காது.

**கிருஷா** — **வரணி**

**உங்க மனைவி நாய், பூனைக்கு காலம் தவறாமல் பணிவிடைசெய்யிறாறாமே?**

போன பிறப்பில உங்க புருசன் நாயாவும் அதற்கு முன் பிறப்பில் பூனையாவும் பிறந்திருக்கிறாரு என ஒரு ஜோதிடர் சொல்லிட்டாராம். அதுதான் இந்தப்பணி விடை. "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்பது அவருக்கும் பொருந்தும்.



நம்ப தலைவர் முகத்தில் என்ன இவ்வளவு பெரிய காயம்?
பட்டாசு வெடிக்கும்போது செல்ஃபி எடுத்திருக்கார்!

*அன்பு வாசகர்களே!*

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

**அனு** — **வரணி**

**இந்திய அணியுடனான போட்டியில் தென்னாபிரிக்காவின் அடி எப்படி?**

எவ்வளவு அடிச்சாலும் வாங்கிறான் ரம்ப நல்லவன் என்று சொன்னது டோனி காதில கேட்டுவிட்டது போல.

**சமீதரன்** — **நயினாதீவு**

**உங்களால் மறக்க முடியாத சம்பவம்?**

திருமணம் முடித்து முதல் கிழமையில் நானும் மனைவியும் வெளியூர் சென்றிருந்தோம். திருமணத்திற்கு வராத நண்பன் ஒருவன் பஸ் தரிப்பிடத்தில் எங்களை கண்டு விட்டு டேய் மச்சி உசாவ காதலிச்சு கலியாணமும் முடிச்சிட்டியாடா என்றான்.

நான் தரதரவென முழித்தேன் என் மனைவி என்னை வெறிகொண்டு பார்த்தாள். நான் சுதாகரித்துக்கொண்டு நண்பனைப் பார்த்து நீங்க யாரு என்று கொண்டு நீ வா காவ்யா என என் மனைவியின் தோளை அணைத்துக் கொண்டு நகர்ந்தேன்.

**சுபாங்கி** — **சிறுப்பிட்டி**

**எமது கலாசாரம் மேலை நாட்டுடன் இரண்டறக்கலக்கிறதே?**

அவர்கள் அபிவிருத்தி அடைந்து விட்டார்கள் அதனால் கீழே இறங்குகிறார்கள். நாங்கள் அபிவிருத்தி அடைந்து வருகிறோம் அதனால் மேலே ஏறுகிறோம் நான் ஆடைகளைச் சொன்னேன்.

**அனிருத் ரசிகன்**


**அனிருத் மியூசிக் பற்றி?**

இளைஞர்களுக்கு பிடித்திருக்கிறது.ஆனால் இன்னும் ஐம்பது வருடங்கள் கழித்து காலத்தால் அழியாத கானங்கள் எனும் தலைப்பில் இப் பாடல்களை போடலாமா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்

**சக்தி** — **பருத்தித்துறை**

**தற்காலத்தில் பெண்களை உபயோகப் பொருளாக பார்க்கிறார்களே?**

அப்படியென்றால் "நீங்கள் அழைத்த இலக்கம் தற்பொழுது உபயோகத்தில் இல்லை" என சொல்ல வேண்டும் என எண்ணுகிறீர்களா?





## கவிதைக் கலசம்

### புதுவாழ்வு தேடி...

நண்பியே என் உயிர் நண்பியே
எனைப் பேசாதே என்றாய்
மௌனமாய் இருந்தேன்
என்னை தவிக்க விட்டு புறப்பட்டாய்
புது வாழ்வு தேடி..
ஒவ்வொரு நிமிடமும்
உயிருள்ள கணங்கள்
ஒவ்வொரு வார்த்தையும்
வாழ்க்கையின் படிகள்
என்றாய் ஆனால் நீயோ
என் வார்த்தையைக் கேட்டும்
கேளாதவளாய் செவிடன் காதில்
ஊதிய சங்கைப் போல்
புறப்பட்டாய் புது வாழ்வு தேடி....
அறிவுரை கூறியே
அன்பாகப் பழகினேன்
அருகதை அற்றவனாய்
அடித்தாற் போல்
பேசி விட்டாய் பேசிய
வார்த்தைகள் நெருப்பாய்
சுட்டன பெண்ணா நீ?
என்று மனதில் ஒரு கேள்வி
நீ பிடித்த முயலுக்கு
மூன்று காலென புறப்பட்டாய்
புது வாழ்வு தேடி......
நட்பு என்றால் நாம் என்றாய்!
கற்பு என்றால் கண்ணகி என்றாய்!
கவிதை என்றால் வைரமுத்து என்றாய்!
கண்ணுள்ள குருடன் என்றால் "நான்" என்றாய்
ஏன்?எதற்காக? உன்னுடைய உணர்வுகள்
என்னைப் புரிந்தது இவ்வளவு தானா நண்பியே...
நட்புக்கு அழகு "பிரிதல்" அல்ல "புரிதல்" என்றாய்
அன்று ஆனால் இன்று என்னை தவிக்க விட்டு
புறப்பட்டாய் புதுவாழ்வு தேடி........

முல்லைவர்மன், முள்ளியவளை

### இமயம் தொட

எப்போது சுயநலம்
உன் பேனா முனையில்
குடிகொள்கிறதோ- அப்போதே
உன் அழிவை நீயே தேடுகிறாய்
என்றே பொருள் படும்
உன் எழுத்தால்
ஏழை வாழ்வை உயர்த்து
உன் வங்கிக் கணக்கை
உயர்த்தாதே!
சிந்தி... செயற்படு...

மாலை. நா.கஜேந்திரன்

### புகலிடக் கோரிக்கை

கலங்கரை விளக்குதனை தேடி
புறப்பட்டு விடுகிறது
புகலிடக் கோரிக்கை கப்பல்
கப்பம் கேட்டு வந்த நாடுதனை
தொப்புள் கொடி உறவென்றெண்ணி
உள்நாட்டு யுத்தம் தமை உலுக்கியெடுக்க
உயிரைப் பிடித்துக் கொண்டு
புறநானூற்றை சற்றுப் புரட்டிப் பார்த்து
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று
புறப்பட்டுவிடும் புகலிடக்கோரிக்கை
கரைகளுக்கு என்றும் எட்டாத கோரிக்கை
கடல் மாதாவிற்கு மட்டும் எட்டுவது ஏனோ?
கரைளை வந்த தன் நகல்தனை
அலைவந்து தழுவுது அடைக்கலம் தந்ததாய்
எனி அடக்கம் தான் என்று அறியாத
கடல் அன்னை

ஸ்ரீயோதா
மண்டைதீவு

### நான் வெட்கப்படவில்லை

நான் வெட்கப்படவில்லை
நிர்வாணமாக்கிக் கொண்டிருக்கிறேன்
அதற்காக நான் வெட்கப்படவில்லை
ஏனென்றால் விதவைகளாய்க்கிடந்த
வெள்ளைத் தாள்களுக்கு
கவிதை எனும் அழகிய ஆடைகளை
அணிவித்துக்கொண்டிருப்பதால்...
நிமிர்ந்து பார்க்கும்போதுதான்
புரிந்து கொண்டேன்
பூக்கள் எல்லாம் தன்னை வளர்த்த
செடிகளுக்குக் குடை பிடித்திருந்ததை....
என் நிர்வாணப் போர்வையால்
சமூகத்தின் மூடக்கொள்கைகள்
மூட்டை கட்டப்பட்டிருந்ததை
புதியதோர் சமுதாயத்தை- என்
கவிதைப்பூக்கள் அலங்கரித்திருந்ததை
இதுபோதும்
பேனாவாகப் பிறந்து நான்
நிர்வாணமானதற்காய்
நான் வெட்கப்படவில்லை

ஆர்.எஸ்.ஆனந்தன், தும்பளை

## மௌனத்தின் தேடல்- 272



### இயற்கைச் சொத்து

அள்ளி விளையாடுங்கள்
ஆசைதீர
வரும் காலத்தில்
மணல் தரைகளை
அழிந்தே போகலாம்
இப்போது உணர்வீர்கள்
இயற்கையின் மகிமையை
மணல் அகழும்
அறிவற்ற மடையரே
நாளை உன் பிள்ளை மகிழ
செயற்கை மணலா
பரிசளிக்கப்போகிறீர்கள்

சூ.அஜித் சுலக்ஷன்
மண்டைதீவு

### பூமியின் கோயில்

மண்ணுக்காக யாரும்
உயிர்விடக் கூடாது
ஏன் பூமிமாதா
உங்களுக்காகத்தான்
உயிர் வாழ்கின்றாள்
ஒரு குழி நிலம்
சொந்தம் இல்லாத வரையும்
வழி அனுப்பும் வரை
வாழவைக்கும் பூமிமாதாவின்
பாசம் புரிந்துவிட்டால்
நீங்கள் கட்டுவது கோயில்
என்று அனைவரும் உணரவேண்டும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### வேதனை நெஞ்சை அடைக்கின்றது

மணல்களையும் துகள்களையும்
சிதறடித்து சீரழிக்கும் காற்று
இவை ஒன்று சேர்ந்து
மலையானால்...
காற்றென்ன, புயலாலும்
அசைக்கமுடியாதென்பதை
புரியாத சிறுவர்களே!
சிலர் நிலைமை புரியாது..
மணல் விளையாட்டை விளையாடி
வாழ்வை சீரழிப்பதை
நினைக்க
வேதனை நெஞ்சை
அடைக்கின்றது

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### செல்லுங்கள் பள்ளிக்கு

தப்பு செய்தவர்களைத்
தட்டிக்கேட்ட ஆளில்லை
உயிர்களையும் உரிமைகளையும்
இழந்து நடுவீதியில் தவிக்கும்
ஏழைகளின் பிள்ளைகள்
உணவுக்கும் கல்வி கற்பதற்கும்
வழியறியாது மண் தூற்றி
விளையாடுகின்றனர்
பிள்ளைகளே துணிந்தெழுந்து
செல்லுங்கள் பள்ளிக்கு

துரை
தென்மட்டுவில்

### சகோதரத்துவம்

சொந்தம் என்பது பனித்துளி போல்
ஒரு நொடியில் மறைந்து விடும்
உறவு என்பது கடிகாரம் போல்
சுற்றிக்கொண்டேயிருக்கும்
பார்த்து பார்த்து பூர்த்தி
செய்த அன்னையில்
அன்புக்கு நிகராக உனை வளர்க்கும்
அக்காவின் உறவை விட
வேறு ஏதும் பெரிதுண்டா?
அக்கா என்பவள்
அன்னையின் மறுவடிவம்

லி.டயானி
மறவன்புலோ மத்தி

### சிந்தியுங்கள் சிறுவர்களே

பண்பும் பாசமும் எழில்
வண்ணமுகப் புன்சிரிப்போடும்
மண்ணள்ளித் தூவி
மனம் மகிழும் சிறுவர்கள்
உண்மை அன்பால்
உலகத்தை வியக்கவைப்பர்
கண்ணியம் மிக்க ஒழுக்க
விழுமியங்களைத் காத்து
எண்ணும் எழுத்துங்கற்று
ஏற்றமுடன் வாழ முயலுங்கள்

இ.ஆராதனா
மட்டுவில் தெற்கு

### தேடல்

கல்தோன்றி மண் தோன்றா
காலத்து முன்தோன்றி
மூத்த இனிய தமிழ்மொழியை
அந்த நாளிலிருந்து பேசிய
சந்ததியின் வழி வந்தவர்கள்
இந்த நாளிலும் சிறிதும்கூட
மண்பற்றை மறக்கவில்லை
பண்பாடும் மாறவில்லை
கற்றது கைமண்ணளவு
கல்லாதது உலகளவு என்று
இன்றும் கூறப்படும் கூற்று
உண்மை தானாவென்று
கையளவு மண்ணெடுத்து
கைவிரித்து எண்ணுகின்றான்
தமிழ்மொழியின் தொன்மையையும்

க.நாகராசா
நுணாவில்

## மௌனத்தின் தேடல் -273



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 04.11.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மனவெளி

**வன்முறையற்ற சமுதாயத்தை சிறுவர்களிடமிருந்து தொடங்குவோம்... சிறுவர்களுக்கு சரீர தண்டனை கொடுப்பது தவறு என்ற விடயப் பரப்பில் தொடர்ச்சியாக நிபுணர்கள் மற்றும் வாசகர்களின் கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதன் தொடர்ச்சியில் சத்திர சிகிச்சை நிபுணர் தயாளன் அம்பலவாணர் அவர்களின் நேர்காணல் இவ்வாரம் வெளி வருகின்றது.**

முதலில் சாந்திகம் இவ்வாறான விழிப்புணர்வுக் கட்டுரைகள் எழுதுவதையிட்டும் அதற்கு வலம்புரி பத்திரிகை இடத்தைக் கொடுத்து உதவுவது பற்றியும், மகிழ்வடைகின்றேன். இன்னும் இவ்வாறான விடயங்கள் வெளிவர வேண்டும் என்றும் ஆர்வப்படுகின்றேன்.

உடல் ரீதியான வலி எவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஒரு வைத்தியர் என்றமுறையில், எனது தொழில் ரீதியாகப் பார்க்கையில் எங்களிடம் வருபவர்கள் தங்களுடைய வலியைத் தீர்ப்பதற்காக வருகின்றார்கள். அந்த ரீதியில் மாணவர்களுக்கு பாடசாலையில் உடல் ரீதியான வலிகளை ஏற்படுத்துவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கின்றது.

உடல் ரீதியான தண்டனை என்பது பாடசாலைகளில் மிக முக்கிய பிரச்சினையாகவுள்ளது. வடமாகாண அமைச்சிலும் இவ்விடயம் தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய அமைப்பு வெளியிட்ட சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்திலும் உடல் ரீதியான தண்டனைகள், சிறுவர் உரிமைக்கு எதிரானவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரீரத் தண்டனை கொடுத்தல் என்பது ஒரு பெரிய பிரச்சினையாகும். எனது பார்வை மனித நிலையிருந்து தொடங்கி, பெற்றோர், ஆசரியர், வைத்தியர், சமூக அங்கத்தவர்கள் எனச் செல்கின்றது. எனது வைத்தியத் தொழிலில் மக்கள் பலவிதமான வலிகளில் வாடுவதைப பார்க்கின்றேன். எனது கடமையும் அவர்களுடைய வலிகளை நீக்க முயல்வதாகும். எனவே வேண்டுமென்றே இன்னுமொரு பிள்ளைக்கோ மனிதருக்கோ வலியை உண்டாக்குவது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. அநேகமானவர்கள் இவ்வாறுதான் உணர்வார்கள் என நம்புகின்றேன். எனவே பிள்ளைகள் மீது வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகின்ற வலிகளை, சரீரத் தண்டனைகளை நாம் ஏற்றுக் கொள்ளாமல் விடலாம் அல்லவா?

பள்ளைகள் மீதான சரீரத் தணடனைகள் வீடுகளிலும் பாடசாலைகளிலும் நடக்கின்றன. இங்கு, பாடசாலைகளிலுள்ள பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன். நான் பெற்றோர் என்ற முறையிலும் வடமாகாண சபையில் கல்விச் சீர்திருத்தக் குழுவில் இருப்பதாலும் இப்பிரச்சினை பெற்றோரிடத்தும் ஆசிரியர்களிடத்தும் எவ்வாறு பரவியிருக்கின்றது என்பதை அறிவேன். வடக்கில் பல பகுதியில் உள்ள பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டனைகள் பல வடிவங்களில் கொடுக்கப்படுகின்றன. கன்னத்தில் அடித்தல்,காதைத் திருகுதல், உதைத்தல், தலையில் அடித்தல் போன்றவை சில உதாரணங்களாகும். பல மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கும் நிலையும் ஏற்படுகின்றது. ஒரு மாணவனுக்கு அடியின் காரணமாக செவிப்பறைகூடப் பழுதடைந்திருக்கின்றது. சில மாணவருக்கு கைகளால் பலமாகக் குத்தப்பட்டதால் இரத்தம் சிந்தியதுமுண்டு. இவற்றையெல்லாம் நியாயப்படுத்த முடியுமென்று நாம் நினைக்கின்றோமா?




உடல்ரீதியானவன்முறை, உளரீதியான தாக்கங்களை ஏற்படுத்தி சிறுவர்களில் நெடுங்காலம் நிலைத்து நிற்கக் கூடிய பாதிப்புக்களை ஏற்படுத்தும். ஒரு கட்டத்தில் சிறுவர்களே, இவ்வாறான வன்முறைகள் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியன என்று எண்ணக்கூடும்.

சிலர் சரீர தண்டனை இல்லாவிட்டால் பிள்ளைகள் பாழாய்ப் போய் விடுவார்கள் ஒழுக்கங் கெட்டுப் விடுவார்கள் என்று வாதிடுவார்கள். இவர்கள் சரீர தண்டனை பிள்ளைகளுக்கு சரி பிழைகளை தெரிய வைக்கின்றது என்கிறார்கள். சரீரத்தண்டனைக்கு எதிராக வாதிடுபவர்கள் ஒழுக்கத்துக்கு எதிரானவர்கள் என்ற கருத்தும் இருக்கின்றது. ஆனால் சிறுவர்களை நல்வழிப்படுத்த சரீர தண்டனையைத் தவிர பலவழிகள் உள்ளன.

பாடசாலையில் பலவித காரணங்களுக்காக சரீர தண்டனைகள் கொடுக்கப்படுகின்றன. பின்னர் திரும்பத் திரும்பச் செய்யப்படுகின்ற தவறுகளுக்கு தண்டனைகளின் வலுவும் அதிகரிக்கப்படுகின்றது. சரீர தண்டனைகள் மாணவர்களை திருத்துமென்பது உண்மையானால் மீண்டும் மீண்டும ஒரே மாணவனுக்கு வகுப்பில் ஆசிரியர்கள் அடிக்க வேண்டிய தேவை இருக்காது. ஆனால் அதே மாணவர்கள் திரும்ப திரும்ப ஆசிரியர்களால் சரீர த்ண்டனைக்கு உட்படுத்தப்படுவது அனைவரும் அறிந்ததே. பெற்றோர்களோ, ஆசிரியர்களோ உடல் ரீதியாக தண்டனை கொடுக்காமலேயே பல பொருத்தமான உதாரணங்களைக் காட்டுவதன் மூலமும் அன்பு, பொறுமை,ஆர்வத்தைத் தூண்டுதல், ஊக்கப்படுத்துதல் போன்ற சாதகமான முறைகளைப் பிரயோகிப்பதன் மூலமும் பிள்ளைகளை நல்ல நிலைக்குக் கொண்டு வர முடியும். அவற்றின் பிரதிபலிப்புக்கள் நல்லதோர் சிறுவர் உலகைக் கட்டியெழுப்பும். மாறாக சரீர தண்டனைகள் சிறுவர்களின் உணர்வை,சுயபார்வையை, அழிக்கின்றது.

சிறுவயதில் சரீர தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள், பெரியவர்களாகி தங்களுடைய பிள்ளைகளையும், மாணவர்களையும் தண்டிக்கின்றார்கள். சரீர தண்டனையால் தாம் நல்ல நிலைக்கு வந்ததாக கூறுபவர்கள் உண்டு. சிறுவயதில் சரீர தண்டனையளிக்கப்படாமலேயே வாழ்வில் மிக உயர்ந்த நிலைக்கு வந்து வெற்றி பெற்றவர்களுக்கு பல உதாரணங்களிருக்கின்றன.

பெற்றோரும் ஆசிரியரும்,கோபம் மற்றும் மன அழுத்தம் காரணமாகவே பெரும்பாலும் அடிக்கின்றார்கள். ஆசிரியர்கள் நாளாந்தம் ஏற்படுகின்ற பிரச்சினைகளால் நெருக்கீடுகளுடன் இருக்கலாம். சரீர தண்டனை, பெரும்பாலும், கொடுப்பவரின் மன நெருக்கீட்டை வெளியேற்றும் ஒரு கருவியாக அமைகின்றது.

ஆசிரியர்கள்தமக்கு மாணவர்கள் மரியாதை தருவதில்லை எனப்பெரும்பாலும் உணர்கின்றார்கள். இது மாணவர்களின் குற்றமாகுமா? மரியாதை என்பது வென்றடைவதாகும். வற்புறுத்திக் கேட்பதல்ல. அந்த நிலையை அனைவரும் அறிந்து அவற்றுக்கேற்ப அணுகுமுறைகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். மாணவர்களின் கற்றல் அனுபவம் அதிகம் சிநேகபூர்வமானதாகவும் விரும்பக் கூடியதாகவும் இருக்குமாயின் அது ஒழுக்கமான நடத்தையை ஏற்படுத்தும். ஆசிரியர்களின் வன்முறையற்ற அணுகுமுறை இங்கு முக்கியமானதாகும்.

கற்பித்தல் என்பது பெரு மதிப்புக்குரிய தொழிலாகும். ஆசிரியர்களுக்கு நிச்சயமாக ஆதரவும், வளங்களும் தேவைப்படுகின்றன. அதிபாகளும்கல்வித்திணைக்களமும் ஆசிரியர்களுக்கு வேண்டிய அனுசரணைகளைப்கொடுக்க வேண்டும்.ஆசிரியர் பயிற்சியின் போது வகுப்பு முகாமைத்துவத் திறன்கள் அவர்கள் கற்றிருக்கின்றார்கள். ஆனால் பல வேளைகளில் பயன்படுத்துவதில்லை. ஆசிரியர்கள் எதிர்காலச் சமூகத்தை வடிவமைப்பவாகளாவர். அதனால் தான் அவர்கள் இதனைச் சரியான முறையில் செயற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

சரீர தண்டனை எமது கலாசாரத்திலும் பாரம்பரியத்திலும் ஒரு பகுதியாக இருக்கின்றது என்பது சல ஆசிரியர்களின் வாதம். மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி கதைக்கும் எமது சமூகம் சரீர தண்டனைக்கு எந்த வகையில் ஆதரவளிக்க முடியும்?

**பெற்றோரின் பங்கு**

உடல் ரீதியான தண்டனைகளுக்கு ஆசிரியர்கள் தரும் ஒரு காரணம் ஒழுக்கமற்ற நடத்தை. சிறுவர்களின் நடத்தைக்கு ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாது பெற்றோருக்கும் பொறுப்பு இருப்பதை பெற்றோர் உணர வேண்டும். பெற்றோரும் உடல் ரீதியான தண்டனைகளின்நீண்டகால விளைவுகளை அறிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளுடன் தமது நேரத்தை செலவழிப்பதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளை தெரிந்து கொள்ளலாம். பாடசாலையில் பிள்ளையின் கல்வி மற்றும் பழக்க வழக்கங்களை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களோடு ஒத்துழைக்கும் அதேநேரம் பிள்ளைகள் உடல் ரீதியான தண்டனைக்கு உட்படும் பட்சத்தில் பெற்றோர்கள் பயமின்றி அதற்கு எதிராகப் பேச முன்வர வேண்டும்.

**கல்வித் திணைக் களத்தின் பங்கு**

2005இல் உடல் ரீதியான தணீடனைகளை முற்றாகத் தடை செய்யப்படக்கோரி கல்வித் திணைக்களம் சுற்றறிக்கை ஒன்றை பாடசாலைகளுக்கு அனுப்பியிருந்தது. இது மிகவும் வரவேற்க வேண்டிய விடயமாகும். பாடசாலைகள் அதை நடைமுறைப்படுத்துவதை கல்வித்திணைக்களம் உறுதிப்படுத்த வேண்டும். வகுப்பறை முகாமைத்துவத் திறன்களை விருத்தி செய்வதற்கு ஆசிரியர்களுக்கு உதவவேண்டும். ஆசிரியர்களுக்கு தேவையான வளங்கள் அனைத்தும் கிடைக்கச் செய்வது கல்வித் திணைக்களத்தின் கடமையாகும்.

**சமூகத்தின் பங்கு**

எமது சமுதாயம் மனித உரிமை மீறல் பற்றி கதைக்கும் இந்நேரத்தில் சிறுவர் உரிமைகளையும் மதிப்பது முக்கியமாகும். உடல் ரீதியான தண்டனைகள் பற்றியபழைமையான ஆதாரமற்ற கருத்துகளை விடுத்து வன்முறை குறைந்த சமூகத்தை நாம் அபிவிருத்தி செய்யவேண்டும். வீட்டிலும் பாடசாலைகளிலும் நடக்கும் வன்முறைகளை மாற்றுவதன் மூலமே இதனை அடையலாம்.

முப்பது வருட போராட்டத்தின் பின்னர்,எமது பிள்ளைகள் வன்முறையற்ற உலகிலே வாழவேண்டுமென்று நாம் அனைவரும் விரும்புவோம் என்பதில் ஐயமில்லை. இதனை நாம் நமது பாடசாலைகளில் உடல்ரீதியான தண்டனைகளை அகற்றுவதிலிருந்து ஆரம்பிப்போம்.


வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.


**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham

# போலியைத் தவிர வேறொன்றும் இல்லை!





கோழிமுட்டை தெரியும். 'போலி முட்டை' தெரியுமா? முட்டை மட்டுமில்ல, போலி முட்டைக்கோஸையும் சேர்த்துத் தெரிஞ்சுக்கலாம். எப்போதோ மார்க்கெட்டில் இறக்கிவிட்டு கல்லா கட்டிக்கொண்டிருந்த 'பிளாஸ்டிக் அரிசி' விஷயம் சமீபத்தில்தான் அடங்கியிருக்கிறது. அதே வரிசையில் சமூக வலைதளங்களில் 'பரபர' ஷேர் ஆகிக்கொண்டிருக்கும் ரெண்டு அயிட்டங்கள்தான் போலி முட்டையும், போலி முட்டைகோஸும்!

அச்சு அசல் முட்டையாகவும், முட்டைகோஸாகவும் எப்படி அவ்வளவு நேர்த்தியாக வார்த்தெடுக்கிறார்கள்? கல்சியம், ஸ்டார்ச், ரெசின், ஜெலட்டின் மற்றும் சில இரசாயனங்கள்ளக்கொண்டு 'போலி முட்டைகள்' தயாரிக்கப்படுகின்றன. குழிப்பணியாரத்துக்கு மாவு ஊற்றுவோமே? அதுபோன்ற அமைப்பில் உள்ள ஒரு மோல்டில் மஞ்சள் கரு ஊற்றப்படுகிறது. 'சுவியம்' உருட்டுவதுபோல, செயற்கையான இந்த மஞ்சள்கருவைச் சுற்றி, சில இரசாயனங்களின் உதவியால வெள்ளைக்கருவை உருவாக்குகிறார்கள். பின்னர் சிலமணி நேரங்கள் காயவைத்தால், போலி முட்டை ரெடி! தயாரிக்கும் சீனர்கள், 'உலகமே செயற்கையா மாறிக்கிட்டு இருக்கு. ரெண்டு முட்டையால என்ன ஆகிடப் போகுது?' என ஜஸ்ட் லைக் தட் கடந்துபோகிறார்கள்.

முட்டைகோஸ் எப்படி? இது ஜப்பானின் அரியவகைக் கண்டுபிடிப்பாம். செய்முறை வீடியோ யூடியூபில் இருக்கிறது. எண்ணெய் சட்டியில் போண்டா மாவை உருட்டிப் போடாமல், தண்ணீராக்கி ஊற்றினால் என்னாகும்? அதுமாதிரி, செயற்கையான இரசாயனக் கலவையை, அகலமான பாத்திரத்தில் நிரப்பப்பட்டிருக்கும் தண்ணீரில் ஊற்றுகிறார்கள். இரசாயனமானது பச்சை நிறத்தில், வீசப்பட்ட புரோட்டா மாவு போல பரவுகிறது. இப்படிப் பலமுறை இரசாயனங்களை ஊற்றி, லேயர் லேயராக உருவாக்கிக்கொள்கிறார்கள். அத்தனையையும் குறுக்கும் நெடுக்குமாக வைத்துச் சுருட்டினால், பந்து போன்ற ஒரு அமைப்பு உருவாகும். அதற்கு மேல், முட்டைக்கோஸின் வெளிப்புறத்தோற்றம் போன்ற கனமான ஒரு செயற்கை இலையைக்கொண்டு மூடினால், முட்டைக்கோஸும் ரெடி! முட்டைக்கோஸை நறுக்கும்போது பொரி போல் உதிரும். இதுவும் அப்படியே! அதனால், எளிதில் கண்டுபிடிக்க முடியாதபடி மிக நுணுக்கமான வேலையைப் பார்த்திருக்கிறார்கள்.

# பொம்மையில்லை பொம்மையில்லை உண்மை!

பார்பியை படத்துல பார்த்திருப்பீங்க, சீரியலில் பார்த்திருப்பீங்க, போட்டோவுல பார்த்திருப்பீங்க, ஏன் கடையிலகூட பார்த்திருப்பீங்க. அழகா நடந்து பார்த்திருக்கீங்களா, குதர்க்கமா பேசிப் பார்த்திருக்கீங்களா? ஒரு தடவை பார்த்தா, ஒன்றரை மணி நேரம் குழப்பமா இருக்கும். பார்க்கிறீங்களா? பாருங்க...

இந்த ரியல் பார்பி பெண்ணின் பெயர் வலேரியா லுகிநோவா. உக்ரைன் நாட்டின் முன்னாள் மிஸ்.டைமண்ட். இப்போ இணையத்தள பிரபலம். வலேரியா பிறந்தது அப்போதைய சோவியத் யூனியனின் மோல்டாவியான் எனும் இடத்தில். வலேரியாவின் அம்மா இராணுவத்தில் பணிபுரிந்தவர். அப்பா வீடு கட்டும் மேஸ்திரி. வலேரியாவும் ஓர் இளநிலைப் பட்டதாரி.



சில வருடங்களுக்கு முன்னால் பிளாஸ்டிக் சர்ஜரிகள் மூலம் தன் உருவத்தை பார்பி பொம்மை போலவே மாற்றியிருக்கிறார் வலேரியா. ஏன் இப்படி எனக் கேட்டால், "பார்பி பொம்மைகள் என்னைப் பொறுத்தவரை பெர்ஃபெக்ட் ஆனவை. ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என மனிதர்களால் உருவாக்கப்பட்ட மாதிரிகள்தான் பார்பி. எனவே, என்னை பெர்ஃபெக்டாக மாற்றிக்கொள்ள நினைத்தேன். பார்பி போலவே மாறினேன். இப்பொழுதுதான் நான் மிகவும் தன்னம்பிக்கையாக உணர்கிறேன்" என பதில் வருகிறது.

'தன் வயிற்றை சின்னதாக மாற்ற விலா எலும்பையே இந்தம்மா எடுத்திடுச்சு'னு புரளியைக் கிளப்புகிறார்கள். ஆனால், வலேரியாவோ "நான் மார்பக சர்ஜரியைத் தவிர வேறு எந்த சர்ஜரியையும் செய்யவில்லை. கண்களுக்கு லென்ஸ் உபயோகிக்கிறேன். முகச்சாயம் பூசிக்கொள்கிறேன். அப்படித்தான் இந்த பார்பி லுக்கை மெயின்டெய்ன் செய்கிறேன்" எனப் பதறுகிறார். முக்கியமான விஷயம் வலேரியா, தான் ஏலியன்களுடன் பேசுவேன். ஏலியன்கள் மனிதர்களைவிட பல மடங்கு அறிவியல் ரீதியாக முன்னேற்றம் அடைந்தவர்கள் என்கிறார். மேலும், "எனது ஆத்மாவிற்கு வயதாகிவிட்டது.

நான் என் உடலைவிட்டு வெளியில் பயணிக்கும்போது, என்னை ஓர் ஆத்மாவாக மட்டுமே உணர்கிறேன்.

நான் பெண் என்ற உணர்வு ஒருமுறைகூட அந்த நேரத்தில் எனக்கு வந்தது கிடையாது" என வலேரியா பேசுவதைக் கேட்டால் நமக்கு மயக்கம் வந்துவிடும்.

இப்படி உருவத்தில் மட்டுமல்லாது, சிந்தனையிலும் வித்தியாசமாகத் தெரியும் வலேரியாவுக்கு சமூக வலைத்தளங்களில் பத்து இலட்சத்துக்கும் மேலான ரசிகர்கள் இருக்கிறார்கள்!

# டோனியை வீழ்த்தும் ஐந்து எதிரிகள்

ஐ.சி.சி நடத்தும் சர்வதேச தொடர்களின் மூன்று கோப்பைகளையும் கைப்பற்றிய உலகின் ஒரே கப்டன் என்ற பெருமைக்கு சொந்தக்காரரான டோனி, தற்போது தனது கப்டன் ஷிப் கரியரில் கிட்டத்தட்ட கிளைமாக்ஸ்க்கு வந்திருக்கிறார்.

இந்த ஆண்டில் டோனியின் தலைமையில் இதுவரை இந்தியா ஒரு தொடரைக் கூட வெல்ல முடியவில்லை. "டோனியை ஓரங்கட்டுங்கள், இளம் பாய்ச்சலை புகுத்துங்கள்...!" என ஆளாளுக்கு டோனியின் மீது சொற்கற்களை வீச ஆரம்பித்து விட்டனர். வழக்கமாக தன் மீதான விமர்சனங்களுக்கு தனக்கே உரிய பாணியில் பதிலடி கொடுக்கும் டோனியால், இந்த முறை சமாளிக்கவே முடியவில்லை.

டோனியை வீழ்த்துவது ஐந்து முக்கிய எதிரிகள் தான் அவற்றை ஒவ்வொன்றாக பார்க்கலாம்...



### 1. சொதப்பும் ஓப்பனிங்

ஒரு படத்துக்கு எப்படி முதல் நாள் ஓப்பனிங் வசூல் முக்கியமோ அதை விட முக்கியமானது முதல் விக்கெட்டுக்கான ஓப்பனிங். ரோஹித் ஷர்மா - தவான் ஜோடியால் இணைந்து ஐம்பது ஓடடங்கள் கூட குவிக்க முடிவது இல்லை. இருவரில் யாராவது ஒருவர் சிறப்பாக விளையாடுகிறார், மற்றொருவர் விரைவில் அவுட் ஆகி விடுகிறார். இதனால் "ஒன்டவுன்" துடுப்பாட்டககாரருக்கு களத்தில் நீண்ட நேரம் நின்று ஆட வேண்டிய அழுத்தம ஏற்படுகிறது. முதல் விக்கெட் சீக்கிரமாக விழுந்து விடுவதால் அடுத்த பத்து ஓவர்கள் வரை, ஆக்ரோஷமாக எதிரணி பந்துவீசுவதால் ரன்ரேட் மந்தமாகிவிடுகிறது. தவிர சில சமயங்களில் ஈரப்பதமான மைதானங்களில் வலிமை வாய்ந்த வேகப்பந்து வீச்சை எதிகொள்ள முடியாமல், பத்து ஓவருக்குள்ளாகவே இரண்டு - மூன்று விக்கெட்டுகள் விழுந்துவிடுகிறது.

### 2. தடுமாறும் மிடில் ஆர்டர்

நான் குறிப்பிட்ட இடத்தில் களமிறங்கினால் மட்டுமே ஸ்கோர் செய்வேன் என்ற வீரர்களின் வீண்பிடிவாதம் இந்தியாவுக்கு பெரிய பின்னடைவு. டோனியால் ஒன்று முதல் ஏழு வரை எந்த இடத்தில் இறங்கினாலும் அதற்கேற்ப திறமையாக விளையாட முடியும். அப்படிப்பட்ட நெகிழ்வுத்தன்மை தற்போதைய துடுப்பாட்ட வரிசையில் சுத்தமாக இல்லை. ரஹானேவை தவிர எந்தவொரு வீரருக்கும் நிலைத்து நின்று ஆடும் திறன் அறவே இல்லை.

### 3. மோசமான ஃபினிஷிங்

"உன்கிட்ட ஓப்பனிங் எல்லாம் நல்லாத்தான் இருக்கு... ஆனால் ஃபினிஷிங் சரியில்லேயப்பா" என கிரிக்கெட் உலகம் இந்தியாவை கலக்கியபோதுதான் யுவராஜூம், டோனியும் நண்பேண்டாவாக இணைந்து "நாங்க இருக்கோம்" என பல போட்டிகளில் இந்தியாவை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றனர். ஆனால் 7-8 ஆண்டுகள் கழித்தும் கூட டோனிக்கு மாற்றாக / பினிஷிங் டச் கொடுக்க ஒரு நல்ல வீரர் கூட உருவாக்கப் படவில்லை. 32-35 வயது என்பது பொதுவாக எந்தவொரு கிரிக்கெட் வீரருக்கும் சோதனையான காலகட்டம். அந்த கட்டத்தை எல்லாம் டிராவிட், சச்சின் போன்ற வீரர்கள் தங்களை சிறிதே மாற்றியமைத்துக் கொண்டு மீண்டும் சாதனை படைத்திருக்கிறார்கள்.

டோனி ஒரு துடுப்பாட்டக்காரராக கடுமையான காலகட்டத்தில் இருக்கிறார். முன்பு போல இறங்கியவுடன் பெரிய ஷாட்டுகளை தெறிக்க விட முடியவில்லை என்பதால் மூன்றாம், நான்காம் நிலையில் இறங்கி, விக்கெட் விழாமல் பாட்னர்ஷிப் உருவாகக எண்ணுகிறார். ஆனால, அணியில் நெகிழ்வுத் தன்மை இல்லாததால் கப்டன் பதவி மட்டுமன்றி ஃபினிஷிங் பொறுப்பை யும் சுமக்க தத்தளிக் கிறார். "என்னால் மட்டுமே ஃபினிஷிங் வேலையை செய்ய முடியாது, ரெய்னா போன்றோர் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என பிரஸ்மீட் வைத்தே மென்மையான வார்த்தைகளால் சொல்லியிருக்கிறார்.

### 4. சொத்தை "வேகப்பந்து"

லைன் அண்ட் லெநத சரியாக வீச முடியாமலும், 135 கி.மீ வேகத்தை கூட எட்ட முடியாமலும் தவிக்கிறது இந்திய வேகப்பந்து. அணியில் சீராகவும், சிறப்பாகவும் பந்துவீசக்கூடிய முகமது ஷமி, காயத்தில் இருந்து இன்னும் குணமாகவில்லை.

இறுதிக்கட்ட ஓவர்களில் ஓரளவு சிறப்பாக வீசும் புவனேஸ்வர்குமாரை தவிர, இந்தியாவில் வேறு நல்ல வேகப்பந்து வீச்சாளர்களே இல்லை என்பதால் துடுப்பாட்டக்காரர்களுக்கு கூடுதல் நெருக்கடி ஏற்படுகிறது.

### 5. அணித் தேர்வாளர்கள்

கப்டன் கேட்கும் வீரர்களையும் தராமல், திறமையான வீரர்களையும் அணியில் சேர்க்காமல் முரண்டு பிடித்து வருகிறது அணித் தேர்வு வாரியம். "டிரா விட், சேவாக், ஜாகீர் என உலகின் தலைசிறந்த வீரர்களுக்கு உரிய மரியாதையை கொடுக்கவில்லை.

சீனியர், ஜூனியர் வீரர்கள் சரிவிகிதத்தில் கலந்திருந்த கால கட்டத்தில் நல்ல கப்டனும் கிடைத்ததால்தான் இந்தியா 2011 இல் உலகக்கோப்பையை வெல்ல முடிந்தது. டிவில்லியர்ஸ், மில்லர், அப்ரிடி, சேவாக், யுவராஜ், மக்ஸ்வெல் போன்ற ஹிட்டர்கள் இருந்தால் தான், எதிரணி பந்து வீச்சாளரின் மனநிலையை ஆட்டம் காண வைக்க முடியும். அப்படியொரு ஹிட்டர் இந்திய அணிக்கு உடனடி தேவை. அனுபவமும், துடிப்பும் கொண்ட அணியை தேர்வு செய்வது அணித் தேர்வாளர்களின் முக்கிய கடமை.

இப்படி அகோர அம்சங்களுடன் இந்திய அணி இருக்க, கப்டன் டோனியால் மட்டுமே இந்திய அணியை அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற வைக்க முடியுமா என்ன?

"துடிப்பான நூறு இளைஞர்களை தாருங்கள் இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன்!" என்பது விவேகானந்தர் வாக்கு. டோனி ஒரு கப்டனாக கேட்பதெல்லாம் "11 துடிப்பான வீரர்களை தாருங்கள் எத்தனை கோப்பை வேண்டுமானாலும் வென்று காட்டுகிறேன்" என்பதே. ஏனெனில் கிரிக்கெட் தனிநபர் போட்டியல்ல, அது ஒரு குழு விளையாட்டு. தனிநபர் துதி பாடுவது வெற்றிக்கு உதவாது.

# அடிமைகளாக்கப்படும் ஆபிரிக்க குழந்தைகள்!

# கொக்கோ தோட்டங்களில் நடப்பது என்ன?

ஆசியாவில் தற்போது கொக்கோ பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இதற்கு பின்புலத்தில் காட்பரீஸ் போன்ற கார்ப்பரேட்கள் இருப்பது வெளிப்படை. கொக்கோவை இங்கு திடீரென அறிமுகப்படுத்துவதற்கு இரு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, நிலநடுக்கோட்டுக்கு தெற்கு வடக்காக 20 பாகை வரையுள்ள பகுதிகளில்தான் கொக்கோவை விளைவிக்க முடியும். இரண்டாவது, 2050 ஆம் ஆண்டுக்குள் கொக்கோவின் தேவை இருமடங்கு அதிகரிக்கும் என்கிற கணிப்பு. இத்தேவையை ஈடுசெய்ய புதிய விளை நிலங்கள் தேவைப்படுகினறன.


உடனடி இலாபம் கருதி உழவர்கள் பணப்பயிர் சாகுபடியில் இறங்கி, பின்பு அவதியுறுவது, உலகளாவியத் தொடர்கதை. பாமாயில், ஜெட்ரோபோ போல பல சான்றுகள் தமிழ்நாட்டிலும் உண்டு. உண்மையில், இத்தகைய பணப்பயிர்கள் நமது நிலத்துக்கு வருவதற்கு முன்னர் நம்மைவிட ஏமாந்த பல ஏழைநாடுகளுக்குச் சென்றுவிட்டுத்தான் வந்திருக்கின்றன. அந்த நாடுகளில் என்ன நடந்தது அல்லது நடந்து கொண்டிருக்கிறது என்பதை முதலில் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அப்போதுதான் அதே கதையை கார்ப்பரேட்கள் நம்மிடமும் தொடங்கும் போது நாம் விழிப்புடன் இருக்க முடியும். இந்த விழிப்புணரவு தான் இத்தொடரின் முதன்மை நோக்கம்.

### கொக்கோ மர்மம் உடைந்தது!

கொக்கோவின் தாயகமான அந்தீஸ் மலையில் கி.மு 3 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே 'மாயன்' நாகரிகத்தின் சடங்குகளில் கொக்கோவில் செய்யப்பட்ட பானங்களுக்குத் தனி இடம் இருந்திருக்கிறது.

நிகார குவா நாட்டுக்குச் சென்றி ருந்த கொலம்பஸுக்கு கொக்கோவின் சுவை பிடித்துப் போனதால், இதனை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றார். அங்கு



காயங்கள்-தழும்புகள்

நீண்டகாலம் இதன் தயாரிப்பு முறை மர்மமாக வைக்கப்பட்டு பணம் குவிக்கப்பட்டது. பிறகு, இந்த மர்மம் உடைபட்டு பொதுமக்களுக்கும் தயாரிப்பு நுட்பம் பரவ... சொக்லேட் சுவைப்பித்து மக்களிடையே அதிகரித்தது. இதனால், இதைப் பயிரிடுவதற்கான நிலத் தேவையும் அதிகரித்தது.

நிலம் என்றாலே ஐரோப்பாவுக்கு தமது காலனியான ஆபிரிக்காதானே நினைவுக்கு வரும். வளமான மேற்கு ஆபிரிக்கக் காடுகளுக்கு கொக்கோ பயணமானது.

இன்றைய உலகத்தில் ஆண்டுக்கு ஆறு இலட்சம் தொன் கொக்கோ உற்பத்தியாகிறது. அதில், மேற்கு ஆபிரிக்காவின் பங்கு மட்டுமே 70% ஆகும். 'ஐவரி கோஸ்ட்' நாடும கானாவும் இதில் முதன்மையானவை.

### கொக்கோவுக்காக பரதேசிகளாகும் குழந்தைகள்!

கடந்த 30 ஆண்டுகளில் சொக்லேட்டின் சந்தை 131% உயர்ந்துள்ளதோடு ஆண்டுக்கு 2.9% வளர்ச்சி கண்டும் வருகிறது. இவ்வளர்ச்சியால் ஆபிரிக்க உழவர்களுக்கு பணம் குவிந்திருக்கும் என நீங்கள் நினைத்தால் உங்களைப் போல் அப்பாவி எவருமில்லை. மாறாக, இந்த கொக்கோ தோட்டங்கள் ஆபிரிக்கக் குழந்தைகளைக் கடத்திச் சென்று விற்கும் புதிய அடிமைச் சந்தைகளை உருவாக்கி இருக்கிறது என்பதுதான் அதிர்ச்சிகரமான செய்தி.

கொக்கோ அதிகம் பயிரிடும் ஐவரிகோஸ்ட்டின் கொக்கோ தோட்டங்களில் அண்டை நாடுகளிலிருந்து கடத்தி வரப்படும் சிறுவர்கள் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டு வேலை வாங்கப்படுகிறார்கள் என்கிற

> நாம் ரசித்து ருசித்து சாப்பிடும் சொக்லேட்டில் எத்தனை ஆபிரிக்க சிறுவர்களின் கண்ணீர் இருக்கிறது என்று தெரியுமா?

தகவலை சில ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டது, பி.பி.சி. செய்தி நிறுவனம். அருகிலுள்ள மாலி போன்ற ஏழை நாடுகளிலிருந்து ஆசைமொழிகளைக் கூறி சிறுவர்கள் கடத்தப்பட்டு ஐவரி கோஸ்ட், கானா நாடுகளின் கொக்கோ தோட்டங்களுக்கு விற்கப்படுகிறார்கள். தெருவில் விளையாடும் சிறுவர்களையும் கடத்தல் கும்பல்கள் கடத்தின. இச்சிறுவர்கள் அனைவரும் ஒன்பதிலிருந்து பன்னிரண்டு வயதுள்ளவர்கள். இவ்வாறு பத்தாயிரதத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள். இது தவிர, இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்தத் தோட்டங்களில் கொத்தடிமைகளாக வேலை பார்க்கின்றனர்.

இவ்வாறு கடத்திக் கொண்டு வரப்படும் சிறுவர்கள், கொக்கோ தோட்டத்திலேயே ஒரு கொட்டகையில் அடைத்து வைக்கப்பட்டு ஒரு நாளைக்கு பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேல கடுமையாக வேலை வாங்கப்படுகிறார்கள். சிறுவர்களின் உயரத்தைவிட உயரமான கொக்கோ கனிகள் நிரம்பிய மூட்டையை சுமக்க வைக்கிறார்கள். மறுத்தால் அடி உதை தான். தழும்புகளும் காயங்களும் இல்லாத சிறுவர்களை இத்தோட்டங்களில் காணவே முடியாது. தப்பிக்கும் வாய்ப்பும் இச்சிறுவர்களுக்கு இல்லை. காரணம், இவர்கள் கையில் பணம் கிடையாது என்பது. மற்றொன்று தமது நாட்டுக்கு திரும்பும் வழிவகையும் எப்படி என்று தெரியாது.

### இரக்கமற்ற கார்ப்பரேட்கள்!

இச்செய்திகள் வெளியாகி உலகத்தின் மனசாட்சியை உலுக்கின. சொக்லேட் விற்பனைக்கு எதிரான கண்டனக் குரல்கள் எழும்பின. சிறார் தொழிலாளர்களைப் பயன்படுத்துவது என்பது ஐ.நா.சபையின் தீர்மானத்துக்கு எதிரானது. அதிலும் சிறுவர்கள் கடத்தி வரப்பட்டு கொத்தடிமைகளாக்குவது என்பது அசிங்கம். தங்கள் மேல் பழி வந்ததும் உடனே சொக்லேட் நிறுவனங்கள் இதனை மறுத்தன.

இவையெல்லாம் ஆபிரிக்க மக்களுக்குச் சொந்தமான சிறு சிறு தோட்டங்களில் தான் நடக்கின்றன என்று பதில் சொல்லி அவை தப்பிகக் பார்த்தன.

"இந்த கார்ப்பரேட் நிறுவனங்கள்தான் சிறு உழவர்களிடையே கொக்கோவைப் பயிரிட ஊக்குவித்து வந்தன.

ஆனால், விளைச்சல் பெருகப் பெருக அவை விலையைக் குறைத்து விட்டன. இது உழவர்களிடையே நெருக்கடியை ஏற்படுத்தியது.

எனவே செலவீனங்களைக் குறைக்க இதுபோன்ற நீதிக்குப் புறம்பான வழிகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர். தற்போது கொக்கோவுக்கு அவை வழங்கும் விலையை விட 10 மடங்கு கூடுதல் விலையைத் தந்தால் இந்த சிக்கல் தானாகவே தீர்ந்து விடும்" என்கிறார் ஐவரிக் கோஸ்ட்டின் பிரதமர்.

### காடுகளை அழிக்கும் கொக்கோ!

ஓரினப்பயிராக வளர்க்கப்படும் கொக்கோ ஆபிரிக்க மண்ணுக்குச் செய்திருக்கும் அழிவுகளும் ஏராளம். கொக்கோவுக்காக உலகின் பழைமையான மழைக்காடுகள பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. அழிக்கப்பட்ட இப்பகுதிகளில் பாரம்பரிய கொக்கோவை விடுத்து கானா நாட்டின் கொக்கோ ஆய்வு நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வீரிய ஒட்டு கொக்கோ பயிர் அறிமுகப்படுத்தப்பட்டது. வழக்கமான வீரிய பயிர்களைப் போல இதுவும் விளைச்சலைப் பெருக்கினாலும்வழக்கத்தைப்போலவே மண்ணிலிருந்த நுண்சத்துக்களைத் துடைத் தழிக்க... செயற்கை உர நிறுவனங்கள் மகிழ்ச்சி அடைந்தன.

கொக்கோ உழவர்களின் இத்துயரங்களைக் கேட்டு மனதை ஆற்றிக்கொள்ள, ஒரு கோப்பைக் கோப்பி குடித்தால் தேவலாம் போலிருக்கிறது. ஆனால், கோப்பி என்றவுடன் இதே ஆபிரிக்காவிலுள்ள எதியோப்பியாவின் நினைவு வருகிறதே!

ஜூனியர் விகடன

# மரத்துப்போன இதயங்கள்...!

என்ன செய்யிறது இப்ப...

எனக்குத் தெரியாதுங்க ஆனா இந்த உபத்திரம் வேண்டாம்.

அவையிட்ட எப்பிடி சொல்லுறது. என்னப்பத்தி என்ன நினைப்பினம். தப்பாவெல்லோ நினைப்பினம்.

அப்போ நான் முக்கியம் இல்ல. அவயள் தான் முக்கியம் என்ன உங்களுக்கு... வெடுக் வெடுக் என விழும் செல்வதிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாத பாலங்கள் போல செய்வதறியாது பரிதாபமாய் நின்றான் தேவராயன்.

தேவராயன் சத்தமில்லாமல் பேசுவதும் கேட்கட்டுமே என்று செல்வதி சத்தமாய்ப் பேசுவதும் அந்த அறையை விட்டு அருகில் இருந்த அறைக்கும் கேட்கக் கேட்க கொஞ்சம் கொஞ்சமாக நொறுங்கிக் கொண்டு இருந்தது அந்த வயோதிப நெஞ்சங்கள்.

கொஞ்சம் பொறு பார்வதி என்ன பிரச்சினை எண்டு கேப்பம். இரண்டு மூணு நாளா எங்களப்பத்தித்தான் கதையடிபடுது.

பரவாயில்லை எங்களுக்கு ஏன் வீண் வம்பு. பேசாம இருங்க நடக்கிறது நடக்கட்டும்.

இப்பிடியே சொல்லிக் கொண்டு நீயும் இரு என்னையும் அடக்கிவை என்று குமுறிய நெஞ்சை அடக்கியபடி நடராஜன் இருக்கையில் அமரும் முன்னம் கதவு தட்டுப்படும் சத்தம் கேட்கிறது.

ம், வந்துட்டான் அவன் தான் போல. போய்க் கதவத்துற என்ன சொல்லுறான் எண்டு கேப்பம்.

பார்வதி கதவைத்திறக்க அவள் மகன் வாசலில் நின்றான். பின்னால் அவன் மனைவி வெல்வதியும் வந்து நின்றாள்.

என்னடா பிரச்சினை என்ற தாயின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் தத்தித் தத்திப் பேசினான்.

ஆ, அம்மா...அது, வந்து

என்ன வந்து போய் எண்டு கொண்டு கெதியாச் சொல்ல வந்தத சொல்லுங்கவன் என்று செல்வதி ஊக்கம் கொடுத்தாள்.

என்னடா ஏதும் பிரச்சினையா

ஓமம்மா.

என்ன பிரச்சினை எங்களாலையா என்று முன்னால் நடராஜன் வர...

அப்பா நான் வேலைக்குப் போயிடுவன் எண்டு தெரியும் தானே. அப்புறம் இவள் தனிய இருப்பாள். உங்களையும் பார்த்து க்கொண்டு வீட்டையும் பார்த்துக் கொண்டு வர்றவங்களையும் கவனிச்சுக் கொண்டு எல்லாத்தையும் தனியா தலைல போட்டுக்கொண்டு பாவம் கரைச்சல் படுறாள்.

அவளுக்கு எவ்வளவு வேல எல்லாம் இருக்கும். பாவம் நீங்களும் வயதாகிக் கொண்டு போறிங்கள். கண்டிப்பா உங்கள நல்லா பார்த்துக்கணும். இந்த நிலமேல அவள் பாக்க மாட்டாள். அது தான் உங்கள... சொல்லி முடிக்கும் முன்னமே.

வீட்ட விட்டுப் போகச்சொல்லுறியோடா. அதற்கு என்னடா காரணம் சொல்லுற உப்புச்சப்பில்லாத காரணங்கள் என்று மள மள என்று பேசிக்கொட்டினார் நடராஜன்.

அப்பா, அம்மா நான் சொல்லுறதக் கேளுங்கோ. நீங்க இருக்க முடியாது. இங்க இருக்க முடியாது. இங்க நிறையப் பிரச்சினைகள் இருக்கு. சொன்னா உங்களுக்குப் புரியாது. அதனால உங்கள வேற இடத்துக்கு கொண்டு போய் விடப் போறன். அங்க சந்தோசமா இருக்கலாம்.

சந்தோசமா இருக்கிறத விடு. எதோ பலமா கதை நடக்கேக்கையே எனக்குத் தெரியும். உன்ர மனிசிக்கு சும்மா சும்மா எங்களோட வம்பு வளக்கிறது தான் வேல... நடராஜன் கொதித்தார்.

என்ன கதையெல்லாம் வேறமாதிரிப் போகுது. அளந்து பேசுங்கோ என்று கத்திப் பேசினாள் செல்வதி.

கொஞ்சம் பொறு நான் தான் பேசிக்கொண்டு இருக்கிறன் எல்லோ.

பாத்தியோடி பெரியாக்கள் எண்டும் மரியாத இல்லாம கைநீட்டிப் பேசுறத...

என்னங்க விடுங்களன் என்று சாந்தப்படுத்த முயன்றார் பார்வதி.

போடி பைத்தியக்காரி. நீ குனியக் குனிய இவயள் குட்டுவினம். நம்மள ஏறி மிதிப்பினம். பார்த்துக் கொண்டு இருக்கேலுமே... சரி விடுவம் இப்போ என்ன சொல்ல வாற நீ!

நான் பேசிட்டன் அப்பா நீங்க ரெடி எண்டால் உடனே போகலாம்.

எங்க...

அது, அப்பா கைதடில இருக்கிற...

பேந்து பேசன். என்ன பேச்சு வரலையோ, உன்னால எங்களப் பாத்துக்க முடியாம போச்சுது. என்ன நாங்க உனக்குப் பாரமாப் போயிட்டம் என்ன அதுமாதிரி நானும் அண்டைக்கு நினைச்சு இருந்தால், ம் விடு.

அப்பா...

பேச்ச விடு. அவள் சொல்லி நீ ஆடுற, நல்ல பொண்ணுடா அவ, நீ பிடிச்சிருக்கு எண்டதும் எதுவும் விசாரிக்காம கட்டி வைச்சன். அவ எங்கள உன்னட்டை இருந்து பிரிக்கப் பாக்குறா. எங்களுக்கு நீ செலவு செய்யுறது அவளுக்கு பிடிக் கல போல. என் ரெண்டு கண்ணு மாதிரி உன்னையும் உன் அண்ணனையும் வளத்தன். நல்லா படிப் பிச்சன். வெளிநாடு போனா நல்லா வந்துடுவான் எண்டு நினைச்சு கஷ்டப்பட்டு அனுப்பி வைச்சன். அவன் அங்க ஒருத்தியப் பாத்ததும் அங்கேயே பிறந்த மாதிரி எங்கள மறந்துட்டான். நீ என்னடானா எள்ளில இருந்து எலிப் புளுக்கையைப் பிரிக்கிற மாதிரி காரணம் தேடித் தேடிப் பிரிக்கிற... ஒண்ணு நினைச் சுக்கோ இதே நிலைமை நாளைக்கு உனக்கும் வரலாம். உன் பொண் பாட்டிக்கும் வரலாம். இப்போ எல்லாம் நாங்க உங்களுக்குக்கட்டுப்படுற பொம்மையாயிட்டம். வயசாச்சு தானே அதான் உங்களுக்கு பாரமா கிட்டம். எப்பிடித்தான் தூக்கி எறிய மனசு வருதோ! இது இப்ப ஒரு பெசனாவே போயிட்டுது.

அப்பா...

நீ பேசவேண்டாம். பார்வதி தேவையானதை எடுத்துக்கொண்டு வா நாங்க போகலாம். மதிக்காத வீட்டில் நமக்கென்ன வேல... மன முடைந்த நடராஜன் கொட்டித்தீர்த்த வார்த்தைகள் அவை.

அத்தோடு அந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்தது. மகனுக்கு அப்படியே விட்டு விடுவதில் விருப்பமில்லை. ஆனால் என்ன நடக்கிறது பாப்பம் எண்டு இழுத்துப் பிடித்தாள் செல்வதி.



வீட்டை விட்டு வெளியேறிய பின்னர்...

இப்போ என்ன செய்றது.

பாப்பம் என்ர நண்பன் ஒருத்தன் இங்கதான் இருக்குறான். அவனிட்ட கேட்டுப்பாப்பம் ஏதும் வீடு கிடைக்குமா எண்டு.

சிறிய பை ஒன்றில் ஆடைகளைத் திணித்துக் கொண்டு வீதியில் வீடு தேடிக்கொண்டு நடராஜனும் பார்வதியும் நகர்ந்து கொண்டு இருந்தனர்.

இது வரதன் வீடுங்களா?

ஓம்... வரதனின் மனைவி... நல்ல பிரகாசமான முகம்

நிக்கிறாரா?

ஓம் நிற்கிறார் வாங்க உள்ள...

உள்ளே போகின்றனர். அருமையான வீடு. சின்னது தான் ஆனால் சொர்க்கத்திற்கு வந்தது போன்ற உணர்வு, குளுகுளு ஏசி, பிறிச், எல்.ஈ.டி.ரி, பெரிய ரேடியோ, சோபா, மரக்கதிரைகள், பெரிய மேசைகள் என்று வீடு முழுவதும் ஒரே விலை உயர்ந்த பொருட்கள். பணத்தில் வாழுகின்றவர்கள் என்று தோன்றிற்று நடராஜாவுக்கு. அவ னுக்கு கிடைச்ச பிள்ளைகள் மாதிரி எனக்கு அமையலையே ஒரு பெரும் மூச்சு.

வாடா உக்காருடா. எப்பிடி இருக்க?

ம்... இருக்கிறேன். நேர விசயத்துக்கு வாறன்.

சொல்லு...

எனக்கொரு வீடு வேணும். நீ எங்கையோ சின்ன வீடு இருக்கு எண்டியே அது இப்போ இருக்கா?

என்னடா திடீர் எண்டு. உன்ர மகனோட ஏதும் பிரச்சினையோ!

சரி, என்ர காணியில ஒரு சின்ன வீடு இருக்கு உனக்குத் தெரிஞ்சு இருக்கும். கொஞ்சத் தூரம் போகணும். கரண்ட் இல்ல... யாரையும் இருத்துவம் என்டா ஒரு த்தரும் வரேல்ல.

அதால உனக்குத் தரலாம். நாலஞ்சு தென்னை இருக்கு. இப்ப ஒரே பத்தையாக் கிடக்கும். உனக்கு ஓம் என்றால் சரி.

**சிறுகதை**

பரவாயில்லை எனக்கு தங்க இடம் கிடைச்சா போதும்.

அவன் முகம் மாறுவது தெரிந்தது. ஏதும் சொல்ல நிணைப் பானோ.

வாடகை எல்லாம் தருவன். ஆனா இப்போ கேக்காத.

ஐயோ அது இல்லடா.

மனையாளை பாக்கிறான். கபிலன் ஓட்டோவக் கூப்பிட்டு விடு. போன் எடுத்து நம்பரை அழுத்த அடுத்த 10 நிமிடத்தில் ஓட்டோ வந்து நின்றது. அதற்குள் ரியெல்லாம் குடித்து முடிந்துவிட்டது.

வீட்டைப் பார்த்தனர். ரொம்ப பழைய குடிசை மாதிரி பாதி கறையான் தின்றுகொண்டு இருந்தது. ஆபத்துக்கு பாவம் இல்லை.

வேலயிருக்கு நான் போகட்டுமா? ஓம் நீ போ.

இந்தாடா சாவி.

வாங்கிக்கொண்ட பின்னர் வாசல் வரை வந்து வரதனை வழியனுப்பி விட்டார் நடராஜன். அந்த வீட்டை கொஞ்சம் மெரு கேற்றி முன்னால் புற்களை அகற்றி முடிக்க சாயங்காலம் ஆகிப் போய் விட்டது.

அடுத்து என்ன பிழைக்க வேண்டுமே. வாழ வழி வேண்டுமே. ஓடி ஓய்ந்த வயதில் மீண்டும் ஓட வேண்டிய சமயம் இது. நடராஜன் ஓடத் தொடங்கினார்.

வேலை ஒன்று வேண்டும். யாழ்ப்பாணம் முழுவதும் அலைந்து பாத்தாயிற்று. வயதாகிப்போனதால் அவரை ஏற்க மறுத்தனர்.

வீட்டுக்கு வந்ததும் கவலை வாட்டி எடுத்தது. பார்வதி என்ன செய்வது தெரியாமல் குழம்பி தவித்தார்.

அருகே பாடசாலையொன்று இருந்தது. இவர்களின் குழப்பத்திற்கு வழி சொல்லி தந்ததும் அது தான். அடிக்கடி காற்று போய்விடும் சைக்கிள்களால் காற்றுப்பம் கேட்டு சிலர் வந்து போனது பார்வதி மனதில் அது பற்றிய சிந்தனைகள் தோன்றிட காரணமாகி விட்டது.

என்னங்க... சொல்லு.

உங்களுக்கு சைக்கிள் ஒட்ட தெரியும் தானே.

முன்னம் எல்லாம் சைக்கிள் பழுதானா அவரே எல்லாத்தையும் செய்து விடுவதை பார்த்திருக்கிறார்.

கர்ப்பூரம் மாதிரி பத்திக் கொண்டது அவள் சிந்தனைகள்.

எனக்கு விளங்கிட்டுது. நீ சொல்ல வாறது நாளைக்கே நான் சைக்கிள் வேல செய்யுறத்துக்கான ஆயுதங்களை வாங்க வேணும்.

சைக்கிள் பற்றிய முன்னனுபவம் இருந்ததால் சாதாரணமாகவே வேலைகளைச் செய்தார் நடராஜன். என்ன வயதுதான் கொஞ்சம் பாடாய் படுத்தியது. முதுகு வலி , மூட்டுவலி என்று ஒவ்வொருநாளும் இரவு தூக்கம் தொலையும். பார்வதி வருந்துவார். விட்டுத் தள்ளு என்று வீரம் பேசுவார் நடராஜன்.

நாட்கள் நகர நகர நடராஜன் வேலையும் கூடியது. வருமானமும் போதுமாக இருந்தது. சேமிக்க ஆரம்பித்ததுடன் வரதனின் வீட்டு வாடகை, அவன் தந்த உதவித் தொகை எல்லாம் கொடுத்து விட்டார். அவர்கள் சந்தோசத்திற்குப் பங்கம் வந்தது. நெஞ்சு வலிக்கிறது என்று நள்ளிரவு புலம்பியாடி மார்பைக் கசக்கிய அந்தத் தருணத்தை பார்வதியால் மறுக்கவே முடியாது. அந்த உத்தம உயிர் பிரிந்ததும் அன்று தான். அப்படியே மரணித்து விடவும் துணிந்து இருந்தார் பார்வதி. பெரிதாய் இழந்து விட்ட தவிப்பு.

மரணச் சடங்கில் அதுவரை வந்திராத மகன் சேவை பெரிது. எல்லாவற்றையும் முன்னின்று செய்தான்.

அது கடமையாயிற்றே...

காலங்கள் ஓடின. எல்லாம் கனவுகள் போல் நடந்து முடிந்துவிட்டவடு. மறுபடியும் மகன் காப்பான் என்று எண்ணுவது தப்பு. அவனுக்கு எப்போதும் சுமை என்றாகிவிடக்கூடாது என்பதில் அத்தனை உறுதி பார்வதி மனதில்... இங்கேயே வாழ்ந்து மறைவதில் கொஞ்சம் சந்தோசம். அவர் விட்ட உயிர் இங்கேதான் வாழ்கிறது என்ற நினைப்பு... என்னுயிரும் இங்கேதான் பிரிய வேண்டும்.

தனியே விடுவதில் மகனுக்கு விருப்பம் இல்லை. தாய்ப்பாசம்.

இல்லை...அதை முன்னமே கொச்சைப்படுத்திவிட்டான். இப்போ நான் யாரோ அவன் யாரோ...

பார்வதி அம்மாளின் கடைசி வார்த்தைகள்...

இங்கிருந்து போ... அடிக்கடி வா... இது நீ என்னைப் பார்க்க வேணும் என்பதற்காக அல்ல... மரத்துப்போன இந்த உடலை விட்டு கனத்துப்போன இந்த உயிர் வெறுத்துப் பிரிந்து போய்விட்டதா என்று அறிய மட்டும்.

பு.பிரசாந்,
அல்லைப்பிட்டி.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: நான் மலரோடு தனியாக
திரைப்படம்: இரு வல்லவர்கள்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன், பி. சுசீலா
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்




நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்
நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்
நீ இல்லாமல் யாரோடு உறவாட வந்தேன்?
உன் இளமைக்குத் துணையாக தனியாக வந்தேன்
நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்
நீ வருகின்ற வழிமீது யார் உன்னைக் கண்டார்?
உன் வளை கொஞ்சும் கைமீது பரிசென்ன தந்தார்?
உன் மலர்க்கூந்தல் அலைபாய அவர் என்ன சொன்னார்?
உன் வடிவான இதழ்மீது சுவை என்ன தந்தார்?
உன் மலர்க்கூந்தல் அலைபாய அவர் என்ன சொன்னார்?
உன் வடிவான இதழ்மீது சுவை என்ன தந்தார்?
நீ இல்லாமல் யாரோடு உறவாட வந்தேன்?
உன் இளமைக்குத் துணையாக தனியாக வந்தேன்
நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்
பொன்வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத
நான் வளைகொண்ட கையாலே மெதுவாக மூட
பொன்வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத
நான் வளைகொண்ட கையாலே மெதுவாக மூட
என் கருங்கூந்தல் கலைந்தோடி மேகங்களாக
நான் பயந்தோடி வந்தேன் உன்னிடம் உண்மை கூற
என் கருங்கூந்தல் கலைந்தோடி மேகங்களாக
நான் பயந்தோடி வந்தேன் உன்னிடம் உண்மை கூற
நீ இல்லாமல் யாரோடு உறவாட வந்தேன்?
உன் இளமைக்குத் துணையாக தனியாக வந்தேன்
நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
**எஸ். சாந்தன் மருதடி காரைநகர்**
**அப்பா தவலிங்கம்**
**அவர்களுக்காக**
**தங்கை லோஜிதா-பருத்தித்துறை**
**விஜயன்,நெல்லியடி.**
**அனு எஸ். பாரதிதாசன்**
**பிருந்தாவனம்,அல்வாய்**
**நிறோஜினி,பருத்தித்துறை.**

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## வீட்டில் பூச்சிகள் -குறும்பட விமர்சனம்

எப்போதும் புகைபிடிப்பது புகைபிடிப்பவருக்கும் அவர்கள் பக்கத்தில் இருப்பவர்களுக்கும் சூழலுக்கும் பாரிய தலையிடியினை தருவதொன்று. விட்டில் பூச்சிகள் குறும்படம் புகைபிடிப்பதன் பிரதிபலன்களை ஆழமாகவும் வித்தியாசமாக சொல்ல முயன்றுள்ள ஓர் குறும்பட முயற்சியாகக் கொள்ளலாம். தனிகை குறும்படம் மூலம் பலருக்கு அறிமுகமாகிய சசீகரனின் ஆரம்பகாலப் படைப்புகளில் ஒன்றான விட்டில் பூச்சிகள் உள்ளடக்கம் சார்ந்து கவனிக்கப்படத்தக்க குறும்படமாக அமைந்திருக் கின்றது.

வயது வித்தியாசம் கூடிய அண்ணன் தம்மி, இருவருக்கும் இடையில் அன்பு மிதமிஞ்சியிருக்கின்றது. இருவரும் பரஸ்பரம் தங்களது அன்பினை பரிமாறிக் கொள்கின்றனர். அது பல்வேறு காட்சிகளில் இயல்பாகச் சொல்லப்படுகின்றது. அதன் காட்சிப்படிமங்கள் சில இடங்களில் செயற்கையாக உருமாறியிருக்கின்ற போதும் நடிகர்களின் யதார்த்தம் மீறாத நடிப்பில் அவை செயற்கைத் திறன்களை களைய முயல்கின்றது.

குளக்கட்டில் இருந்து யோசிக்கும் தம்பியின் பார்வையில் குறும்படத்தின் கதை நகருகின்றது. தனக்கும் அண்ணனுக்கும் இடையிலான மகிழ்ச்சி, கொண்டாட்டம் தம்பியின் வாய்வழியாகச் சொல்லப்படுகின்றது. அதே நேரத்தில் அண்ணாவிடம் தனக்கு பிடிக்காத விடயம் ஒன்று இருக்கின்றது. அது புகைபிடித்தல் என்று சொல்லப்படுகின்றது. அண்ணா தன்மீது அதீதமான அன்பு வைத்திருந்தாலும் தான் பலமுறை அதனை நிறுத்த




சொன்னபோதும் பிடிவாதமாக புகைபிடிப்பதனை விடாமல் தொடர்ந்தும் புகைபிடிக்கின்றார் அண்ணா என்று தம்பியின் குரல் பார்வையாளர்களுக்குச் சொல்கின்றது. அண்ணாவிடம் எப்போதும் சேர்ந்து திரிந்து விளையாடுகின்றான் தம்பி.

இப்படி சேர்ந்து தம்பியுடன் விளையாடும்போது விபரீதம் ஒன்று நிகழ்கின்றது. தந்தை பதறியடிக்க அந்தக்காட்சி நிறைவுக்கு வருகின்றது. அதற்கு அடுத்தபடியாக மருத்துவ நிலையக்காட்சிகள் காட்டப்படுகின்றன. மருத்துவர் அண்ணாவினை வெளியேற்றிவிட்டு தந்தையுடன் உரையாடுகின்றார், மருத்துவ நிலையமாக திரையில் காட்டப்படும் இடங்களும் வசனங்களும் செயற்கையாக இருக்கின்றன. மருத்துவ கதாபாத்திரம் சொல்லும் முக்கியமான விடயம் மகனுக்கு புற்றுநோய் என்பதுதான்.

அடுத்த காட்சிகள் சோகமாக இருக்கும் அண்ணா, தம்பியை கமரா ஒளிப்படம் பிடிக்கின்றது. இருவருக்கும் இடையிலான உரையாடல் உருக்கமாக இருகின்றது. அந்த நேரத்தில் முக்கியமான ஸ்பாயிலர் படத்தில் உடைகின்றது. புற்றுநோயினை அடைந்திருப்பவர் தம்பியான சிறிய பையனே. இந்த முக்கியமான விடயத்தினை மறைத்துக்கொண்டே படத்தின் திரைக்கதை பின்னப்பட்டுள்ளது. புகைபிடிப்பவருக்கு புற்றுநோய் என்று பார்வையாளர்களை நினைக்கவைத்துவிட்டு புகைபிடிப்பவருக்கு அருகிலிருக்கும் தம்பிக்கே புற்றுநோய் என்ற விடயத்தினை ஒப்பேற்றுகின்றது. புகைபிடிப்பதலிருக்கும் முக்கியமான அபாயமாக இருப்பது அருகில் இருக்கும் நபர்களின் நிலைமையே. புகைபிடிப்பவர்களைவிட அதன் புகையை சுவாசிப்பவர்களின் நிலைமை மிகமோசமாகவே கருத்துக்கணிப்பில் இருக்கின்றது. இதனை சமயோசிதமாக திரைக்கதையில் புகுத்தி வழமைக்கு மாறான ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய குறுங்கதையை இயல்பாக படம்படித்து குறும்படமாக்கியுள்ளார் சசீகரன்.

இறுதிக்காட்சியில் அண்ணன் பாத்திரம் தனது குற்றவுணர்சியில் அதிகம் துன்பமடைகின்றது. ஒருபோதும் இனிமேல் புகைபிடிக்கப்போவதில்லை என்ற முடிவுக்கு வருகின்றார். தம்மியை அணைத்துக்கொண்டு சட்டைப்பையில் இருக்கும் சிகரெட் பெட்டியினை தூக்கி வீசுகின்றார். தூக்கிவீசும் காட்சி படத்துக்குள் வலிந்து திணிக்கப்பட்டுள்ளது. நிஜமாகவே தம்பி தன்னுடைய புகைப்பழகத்தினால் புற்றுநோயினை அடைந்துள்ளார் என்றால் சிகரெட் பெட்டியுடன் தம்பியினை அணுகியிருக்கமாட்டார்.

இப்படத்தில் உள்ள தொழில்நுட்ப விடயங்களும் ஒளிப்படங்களின் தரமும் பார்வையாளர்களை ஒவ்வாமைக்கு உட்படுத்தலாம். ஆனால் அதன் நெகட்டிவ் கட்டுமானங்களை படத்தின் உள்ளடக்கம் முறியடித்துவிடுகின்றது.

**-அனோஜன் பாலகிருஷ்ணன்-**

# ஈழத்துக் கவிதைகள்

## அகங்களும் முகங்களும்-1

வெறுங் காற்றில் கலந்திடுமோ...
முன்பு தமிழ்நாட்டில் ஒரு கீழ் வெண்மணி
இன்று பீகாரில் இன்னொன்று.
சாதி வெறிக்கேது திக்கு?
தெற்கிலே பற்றியது
வடக்கிலும் தீ நாக்குவளைத்தது.
பீகாரின் ஒரு கிராமத்தில்
சாதி வெறியர் எளியவர்களுக்கு
எரி கொள்ளிகளால் பதில் சொல்லியுள்ளார்.
கோயிலில் தீவட்டி ஏந்திய கைகள்
தாழ்த்தப் பட்டவரின் குடிசைகள்
கொளுத்த தீவட்டியோடு ஊர்வலம்போயின.
கொள்ளிவாய்ப் பேய்கள் சுற்றிவர
குழுமி நின்று உமிழ்ந்த தீ
பற்றிப் பிடிக்க குடிசைகளுள் துயின்ற
பதினான்கு உயிர் வெண் மணிகள்-
பிஞ்சுப் பாலகர், நேற்றுத் தான்
மஞ்சம் நுகர்ந்த மணமக்கள், முதியவர்-
பச்சை உடம்போடு பஸ்மீகரமாயின.
ஹரிஜனங்களை அவிர்ப் பொருளாக்கி
சாதி வெறியர் வேள்விகள் செய்ய
சந்நிதானங்கள், கோயில்கள், பீடங்கள்
குத்துக் கல்லாய் குந்தியிருந்து
ஸ்லோகம் சொரிந்தன.
ஆட்சி பீடங்களில் மாறி மாறி ஆள்வோர்
அமர்ந்தனர் போயினர்
'கீழ் வெண்மணிகள்' போயாவிட்டன?
சாதிவெறியரின் ஏவலால்
மன்னுயிர் தின்ற தீயே நீயும்
விண்ணெழுந்து வெறுமனே போகுதியோ?
தீயே!
ஆதிவேடன் பண்டொருநாள்
கல்லோடு கல்லுரசக் கனன்றதீயே,
உன்னை இங்கழைக்கிறோம்
மீள்க.
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக
சாதி வெறியை ஊதிவளர்த்த
தீயவர் கையில் நீ சேரற்க.
அக்கினியே! இடம்மாறு.
அஞ்சி ஒடுங்கி அடங்கி வாழும் இந்த
ஏழை எளியவரிடம் வந்து குடியேறு.
அவர்கள் கண்களில் ஜுவாலி,
நெஞ்சங்களில் ஞான நெருப்பாய் எரி.
சொற்களில் சுடு சரமாகு.
செயல்களில் ஆலைக் கனல்பெருக்கு.
மெய்ந் நெருப்பாக மேதினி எங்கும் திரிக.
ஆதிஜோதியே! அனற் கொழுந்தே!
நின்னை வேண்டினோம்
இந்த எளியவர் வாழ்வு வெளிச்சமுறும் பொருட்டாக.
தீயே உன்னை அழைத்தனம்
தீயவரைச் சென்றுதீண்டுதற்காக.
சாதி இன, மத நிற வெறி
எந்தெந்த மூலை முடக்கிலே காணினும்
அவற்றை
நீக்கமற எரித்து நீறாக்கும் பொருட்டாக.

சு.வில்வரத்தினம்
அகங்களும் முகங்களும் இதழில் இருந்து
(1985)

சினிமா செய்தி

# விவேக் மகன் இழப்பிற்கு தங்கள் இரங்கலை தெரிவித்த பிரபலங்கள்



தன் நகைச்சுவையால் ஒட்டுமொத்த தமிழகத்தையும் சிரிக்க வைத்தவர் விவேக். ஆனால், அவரின் தனிப்பட்ட வாழ்க்கையில் பல சோகங்களை சந்தித்து வருகிறார்.

இவரின் மகன் பிரசன்னா மூளைக்காய்ச்சலால் சிகிச்சை பலனின்றி இறந்தார். இச்சம்பவம் எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இதை தொடர்ந்து பல திரைப்பிரபலங்கள் தங்கள் இரங்கலை தெரிவித்தனர். நடிகர் அஜித் நேரிலேயே சென்று அஞ்சலி செலுத்தினார். விஜய்யும் தன் இரங்கலை விவேக் குடும்பத்தினருக்கு தெரிவித்ததாக கூறப்படுகின்றது. இதுமட்டுமன்றி பல திரைப்பிரபலங்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



**Dhanush** @dhanushkraja Follow

My heartfelt condolences to @Actor_Viveksir and his family. May his son's soul rest in peace.

8:12 PM - 29 Oct 2015

722 1,249

**Jayam Ravi** @actor_jayamravi Follow

Shattered to see @Actor_Viveksir & his family endure this tragedy. Praying for strength for them to overcome their loss. RIP Prasanna

9:53 PM - 29 Oct 2015

158 344

**Arya** @arya_offl Follow

Shocked to hear about the sudden death of @Actor_Viveks son #Prasannastrength to the family nd friends #RIP

5:38 PM - 29 Oct 2015

260 418

**khushbusundar** @khushsundar Follow

Sleep evades. .thoughts r with #Vivekn family..at times pain is so deep tat u don't want 2 face the reality..I am in tat mode now.. 💔💔💔💔

11:55 PM - 29 Oct 2015

50 150

# நானும் ரௌடிதான்

U/A

## திரைவிமர்சனம்



நானும் ரௌடிதான்' என உதார் சீன் போட்டுக்கொண்டிருக்கும் ஒருவன், ஒரு காதலுக்காக நிஜமாகவே ரௌடியானால்..? அம்மாவுக்கு, விஜய் சேதுபதியை பொலிஸ் ஆக்கவேண்டும் என ஆசை.

ஆனால், கெட்ட பொலிஸாக இருப்பதைவிட நல்ல ரௌடியாக இருக்கலாம் என்பது விஜய் சேதுபதி பிளான். பெற்றோரைக் கொன்ற ரௌடி பார்த்தீபனைப் பழிவாங்கத் துடிக்கிறார் நயன்தாரா.

இவரைக் கண்டதும் விஜய் சேதுபதிக்குக் காதல். ஆனால், பார்த்தீபனைக் கொன்றால் மட்டுமே தன் காதல் கிடைக்கும் என நயன் டீல் போட, விஜய் சேதுபதி என்ன செய்தார், பார்த்தீபன் என்ன ஆனார் என்பது காமெடி மிக்ஸர் க்ளைமாக்ஸ்! ஆரம்பம் முதல் இறுதி வரை காமெடி பரேடு. சீன் பிடிப்பதைவிட நச்சுகிச்சு வசனங்களால் சாதா சீனைக்கூட ஸ்பெஷல் ஆக்கியிருக்கும் இயக்குநர் விக்னேஷ் சிவனுக்கு சபாஷ். விஜய் சேதுபதி-நயன்தாரா இடையிலான அந்த "பிராண்ட் நியூ லிப்லாக் உரையாடலுக்கு' இன்னொரு சபாஷ்!

சின்ன இடைவேளைக்குப் பிறகு ஃபுல் ஃபார்ம் விஜய் சேதுபதி. "சம்பவம் நடக்கிறப்ப யாரும் குறுக்கப் பேசக் கூடாது' என ரௌடி பந்தாவுடன் உலாத்துவதும், "பேபி... ஆர் யூ ஓ.கே.? என நயனிடம் கிறங்குவதும், அதகள க்ளைமாக்ஸில் பார்த்தீபனிடம், "ஸ்டெடியா நில்லுங்க சார்.

கண்டிப்பா குத்திடவா!' என உளறுவதுமாக... செம வாத்தியாரே! "நயன்தாரா இவ்ளோ அழகா... நயன்தாரா இவ்ளோ திறமைசாலியா? என காட்சிக்குக் காட்சி அசரடிக்கிறார்.

"யார்கிட்டயும் சொல்லிறாதீங்க' என கொஞ்சிக் கெஞ்சுவதும், டைட் டி-ஷர்ட் - ஸ்கர்ட் களிலேயே (தீபாவளி ஹாட் பெஷன் நயன் ஸ்கர்ட்!) கொள்ளை அழகைக் கொட்டுவதுமாக... பின்னிட்டீங்க நயன். அதுவும் "இதழ் முத்த க்ளோஸப் காட்சியில் உதட்டு அசைவுகளிலேயே அபிநயங்களைக் கொட்டியிருக்கும் அந்த க்யூட்னெஸ்... சான்ஸே இல்லை!

காமெடி சரவெடி வெடித்திருக்கிறார் ஆர்.ஜே பாலாஜி. பச்சைவேட்டி கட்டிக்கொண்டு, "நான் ஸ்கெட்ச் போடுவேன்...

நீ அவனைப் போடுவ. அப்புறம்...' என்ற அதகளம் முதல் "இது அட்டகாசப் புலி... ஆவேசப் புலி...என சைடு கேப் டிரெண்டிங் வரை தெறி காமெடி. பார்த்தீபன் ஒரு பக்கம் தௌசண்ட் வாலா வெடிக்க, ஆனந்த்ராஜும் மன்சூரலிகானும் மறுபக்கம் மத்தாப்பு கொளுத்துகிறார்கள்.

படம் முழுக்க காமெடி களேபரங்கள்தான். ஆனால், அதை எல்லாம் ரசிக்க லாஜிக்கை லக்கேஜாக நினைத்து தியேட்டர் வெளியிலேயே விட்டுவர வேண்டும் என்பதுதான் நெருடல். பின்பாதி நீளத்தை, யோசிக்காமல் குறைத்திருக்கலாம். "நானும் ரௌடி தான்...' பாடலில் அதிரவும், "தங்கமே...' பாடலில் உருகவும்வைக்கிறது அனிருத் இசை.

பேயைப் பார்த்துப் பம்மிக்கொண்டிருக்கும் தமிழ் சினிமா ரசிகர்களைக் கட்டிப்போட்டு மிரட்டி மிரட்டிச் சிரிக்கவைக்கிறான் இந்த ரௌடி!

43/100

# கபாலி படத்தின் அதிகப்படியான காட்சிகள் மலேசியாவில்



ரஜினிகாந்த் நடிக்கும் கபாலி படத்திற்கான முதல் பாதி ஷூட்டிங் சென்னையில் நடந்து முடிந்ததைத் தொடர்ந்து, மொத்த டீமும் மலேசியாவில் முகாமிட்டிருக்கிறது.

ஒரு மாதம் முழுவதும் மலேசியாவில் படப்பிடிப்பு நடைபெறவிருக்கிறதாம்.

கபாலி படத்திற்கான 75 சதவிகித காட்சிகள் மலேசியாவின் சில்லாங் மற்றும் மலாகா பகுதியில் தான் நடைபெறவிருப்பதாக சொல்லப்படுகிறது. இதற்காக சிறப்பு அனுமதியுடன் மலேசியாவில் பிஸியாக ஷூட்டிங் வேலையில் இருக்கிறது கபாலி குழு.

கேங்ஸ்டராக ரஜினி நடிக்கும் இப்படத்தில் ராதிகா ஆப்தே ரஜினியின் மனைவியாகவும், தன்ஷிகா மகளாகவும் நடிக்கிறார்கள். மெட்ராஸ் ரஞ்சித் இயக்கும் இப்படத்தில் ரித்விகா எதிர்நாயகியாக நடிக்கிறார்.

கபாலி பட தயாரிப்பாளர் தாணு இப்படத்தை 2016 கோடை விடுமுறைக்கு வெளியிட திட்டமிட்டுவருகிறாராம்.

# வடக்கிலிருந்து படைகளை முற்றாக அகற்ற வேண்டும்

வடக்கிலிருந்துபடைகளை முற்றாக விலக்க வேண்டும் என்பதில் தமிழர்கள் உறுதியாகவுள்ளனர் என்பதை அரசதரப்பினர் நன்கு உணர்ந்திருந்தும் படைகளை விலக்குவதில் பாராமுகமாகவேயுள்ளனர்.

இனத்துவேசத்துடன் செயற்படும் சிங்களப் படைகள் தமிழருக்கு ஒரு போதும் பாதுகாப்பை வழங்க முடியாது என்ற கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் தமிழரின் இந்த நிலைப்பாடுள்ளது.

தமிழர்கள் அனைவருமே பயங்கரவாதிகள் என்ற சிங்கள அரசின் போக்கு மாறும்வரை தமிழரின் இந்த நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்படாது. சிங்களவர்களுடன் தமிழர்கள் இணைந்து வாழவழி வகைகளை ஏற்படுத்திக் கொடுக்காத ஆட்சியாளர்கள் நாட்டைப் பிரிக்க அனுமதிக்க முடியாது என்று கூறி தமிழினத்தையே அடக்கி ஒடுக்கி அழிக்கப்பார்க்கின்றனர்.

தமிழின அழிப்பில் கணிசமான அளவு வெற்றி கண்டுள்ள சிங்கள ஆட்சியாளர்கள் மீதமுள்ள தமிழர்களையும் அழித்தொழித்து விட்டு சிங்களவர்கள் மட்டும் வாழும் தீவாக இலங்கையை மாற்றும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழர்களின் பூர்வீக நிலங்களில் படைகளின் பிரசன்னத்தை அதிகரித்துள்ள அரசு அங்கு சிங்களவர்களை குடியேற்றும் பணிகளையும் மிக மிக துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றது.

வடக்கில் ஏற்கனவே பல பிரதேசங்கள் சிங்களமயமாக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களிலும் சிங்களக் குடியேற்றங்களை விஸ்தரித்துள்ளது. இன்னும் விஸ்தரிக்க திட்டமிட்டுள்ளது.

சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒத்தாசை வழங்குவதற்காக படைகளை வடக்கில் நிலை நிறுத்தியுள்ள அரசு,மக்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் பயங்கரவாதிகள் மீண்டும் உருவாகாமல் தடுக்கவுமே படைகளை அகற்றாமல் உள்ளதாக பசப்பு வார்த்தைகளை கூறி வருகின்றது.

சிங்களப் படைகளிடமிருந்து பாதுகாப்புக்கோரும் தமிழர்கள் அப்படைகளின் பாதுகாப்பை எதிர்பார்க்க மாட்டார்கள். இதைப் பலமுறை தமிழர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழரின் பூர்வீக நிலங்களில் நிலை 'கொண்டுள்ள படைகள் மக்களின் இயல்புவாழ்க்கைக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் முக்கிய காரணியாக விளங்குகின்றன.

போர்க்காலத்தில் பாரிய நெருக்கடிகளை தமிழர்கள் எதிர்கொள்ள படைகளே முக்கிய காரணம் என்பதாலும் போரின் பின்னரும் அப்படைகளின் நெருக்கடிகள் தொடர்வதாலும் படை விலகலை வடக்கு மாகாண மக்கள் அதிகளவில் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.



தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் அவர்களால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி அபகரிக்கும் திட்டத்தை மகிந்த அரசு மேற்கொண்டது. இதற்கு படைகளையே கருவியாக பயன்படுத்தியதுஅரசு.

தமிழ் மக்களின் காணிகளை மீளக்கையளித்து மீள்குடியேற்றத்துக்கு அரசு அனுமதியளிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் வடபகுதியில் பல போராட்டங்களை மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் முன்னெடுத்திருந்தனர்.

## பெண்களைப் பாலியல் தொல்லைகளிலிருந்து மீட்டெடுக்க மைத்திரி அரசு முன்வரவேண்டும்

ஆனால், மகிந்த அரசு மக்களின் போராட்டங்களுக்கு மதிப்பளிக்கத் தவறிய அதேவேளை படைகளுக்காக காணிகளை சுவீகரிப்பதிலேயே அதிகளவு அக்கறையை செலுத்தியிருந்தது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வடபகுதியை வைத்திருக்க வேண்டும் என்பதிலும் சிவில் நிர்வாகத்தை அமுல் படுத்துவதில்லை என்பதிலும் மகிந்த அரசு உறுதியாக இருந் தது என்று கூற முடியும்.

முன்னாள் வடக்கு மாகாண ஆளுநராக இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியை தமிழர்களின் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல் அப்பதவியிலேயே வைத்திருந்ததையும் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடுகளுக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்கியதையும் குறிப்பிட முடியும்.

மகிந்தவின் ஆட்சியில் நாட்டின் வேறு எந்தப்பகுதியிலும் இல்லாத அளவுக்கு படைப் பிரசன்னம் வடக்கில் இருந்தது. தற்போதும் உள்ளது. இதை மகிந்த அரசு மறுக்கவில்லை. மாறாக அதை நியாயப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

போரால் அதிகளவு பாதிக்கப்பட்ட பிரதேசத்தை சேர்ந்த தமிழ் மக்களுக்கு தொந்தரவுகளை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டும் என்பதற்காகவே மகிந்த படைவிலக்கலை மறுத்து வந்தார்.

நிலைமை இவ்வாறு இருக்க, தமிழ் மக்கள் மகிந்தவைப் புறக்கணித்து மைத்திரி அரசு ஆட்சி அமைக்க ஒத்துழைத்தனர். ஆனால் ஆட்சிமாறினாலும் காட்சி மாறவில்லை.

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பங்கம் விளைவிக்கும் பணியில் இராணுவம் உள்ளிட்ட படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதனை அண்மையில் யாழ்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட உலகப் பெண்கள் விவகாரம் தொடர்பாக அமெரிக்கத் தூதர் கத்தரின் ரூசெல் உள்ளிட்ட குழுவினரிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் எடுத்துரைத்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள பல பெண்கள இராணுவத்தினரின் பாலியல் தொந்தரவுகளுக்கு உட்படுவதையும அச்சுறுத்தல்களுகுகு முகம்கொடுத்து வருவதையும் வெளிப்படுத்தியிருந்தார் முதலமைச்சர்.

வடக்கு மாகாணத்தில் போருக்கு முன்னரான காலப்பகுதியில் பெண்கள் தமது வாழ்வாதாரத்தில் சிறந்த நிலையில் இருந்தார்கள். ஆனால் போருக்கு பின்னரான காலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்குள்ளாகி வாழ்வாதாரத்தை தொலைத்துள்ளனர் என்பதையும் முதலமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு மாகாணத்தின் முதலமைச்சர் இந்த விடயத்தை வெளிப்படுத்தும் போது மக்கள் எத்தகைய இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர் என்பதை அமெரிக்கக் குழுவினர் நன்குணர்ந்திருப்பர்.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு சார்பான தீர்மானத்தைக் கொண்டு வந்து போர்க் குற்றவாளிகளை காப்பாற்றும் அரசின் முயற்சிகளுக்கு துணைபோன நாட்டின் குழுவினர்களுக்கு இதனைக் கூறுவதால் பயனில்லை என்ற ஆதங்கமும் தமிழருக்குள்ளது.

இருப்பினும் இனியாவது சர்வதேச நாடுகள் தமிழருக்கு கருணை காட்டட்டும் என்று கருதி தமிழ் பெண்களின் அவல நிலையை முதலமைச்சர் வெளிப்படுத்தியிருக்கலாம்.

எதுவாயினும்வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கூற்றின் ஊடாக ஒரு உண்மை மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. வடக்குப் பெண்கள் நிம்மதியை இழந்துள்ளனர் என்பதே அது.

அதேவேளை வடக்கிலிருந்து இராணுவம் உள்ளிட்ட படையினர் வெளியேற்றப்பட வேண்டும் என்ற பலவருடக் கோரிக்கையினையும் மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார் முதலமைச்சர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு வெற்றி பெற்றவுடன் மக்களைவிட்டு பிரிந்து தூர விலகிச் செல்லும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் வடக்கு மாகாண முதலமைச்சர் மக்களுடனேயே வாழ்ந்து மக்களின் தேவைகளை நன்கு அறிந்து அவர்களின் குரலாக ஒலிப்பதும் என்றோ ஒருநாள் விடிவை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை கொடுத்துள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சருடன் ஏனைய தமிழ் அரசியல் வாதிகளும் இணைந்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் போக்கஒருமித்து குரலெழுப்ப வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் எதிர்கால வாழ்க்கையாவது சுதந்திரமான நிம்மதியான வாழ்க்கையாக அமைய ஒத்தாசை வழங்க வேண்டும்.

பாதுகாப்பு வழங்குகின்றோம் என்ற போர்வையில் படையினர் தமிழ்ப் பெண்களுக்கு பாலியல் தொல்லைகளைக் கொடுப்பதை தடுத்து நிறுத்த வடக்கிலிருந்து படைகளை முற்றாக வெளியேற்ற பாடுபட வேண்டும். போரால் பாதிக்கப்பட்டமக்களுக்கு இந்திய அரசு கட்டிக்கொடுத்து பாவத்தைப் போக்க முற்பட்ட வீட்டுத்திட்ட வீடுகளை வழங்கக்கூட திருந்தாத ஜென்மங்கள் சில பாலியல் இலஞ்சம் கோரியதாக எழுந்துள்ள புகார்களை உரிய முறையில் விசாரித்து தயவு தாட்சண்யம் இன்றி தண்டனை வழங்கவேண்டும்.

தமிழ்ப் பெண்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பாலியல் வன்கொடுமைகளிலிருந்து மீட்க மைத்திரி அரசிடம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேணடும். ஐ.நாவிடம் முறையிடுவோம், சர்வதேசத்திடம் முறையிடுவோம் என்று அறிக்கை அரசியல் செய்யாதுமக்கள் பிரதிநிதிகளாகநடைமுறைக்கு சாத்தியமானமுயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

இனியாவதுஅரசியல் போட்டிகளை மறந்து மக்கள் பிரதிநிதிகள் என்ற நினைப்புடன் மக்களுக்கான பணிகளை முனனெடுக்கதமிழ் அரசியல் வாதிகள் முன்வர வேண்டும்.

காண்டீபன்

# facebook

# நண்பனின் மனைவி



ஒரு கையில் ட்ராலி, தோளில் ஷோல்டர் பேக், இன்னொரு கையில் குழந்தை. குழந்தையை இப்படி கொடுங்க நான் இரண்டு கைகளையும் நீட்ட, விருட்டென பின்னால் நகர்ந்து கொண்டாள். நெஞ்சில் குத்தியது நெருஞ்சி !

சங்கர் , பாவம் அவளுக்கு ஒண்ணும் தெரியாது... அவளே குழந்தை... அவ கையில் ஒரு குழந்தையோட வரா... பதினொன்னு இருபதுக்கு பிளேன் வந்துடும்... இமிக்ரேஷன் முடிய பண்ணிரெண்டு மேல ஆயிடும்... உன்னோட வீட்டுக்கு அழைச்சிட்டுப் போ... ஈவ்னிங்க் பாண்டியன்ல்ல டிக்கெட் போட்டாச்சு இல்ல..?

ம் ... போட்டாச்சு பாஸ்கர்... முதல் வகுப்பு ஏ.சி.தான்... ரிஸிவ் பண்ணி டிரையின்ல்ல ஏத்தி விட்டா போதும் சின்ன ஹெல்ப் ஹெல்ப ாபோனை வைடா ராஸ்கல் இது கூட செய்யலைன்னா என்னடா பிரண்ட்?

பாஸகர் என் பள்ளித் தோழன. என் தோலில் திட்டு திட்டாக இருந்த வெள்ளையைக் கண்டு மற்றவர்கள் ஒதுங்கி சென்ற போது ,அருவருப்பு இல்லாமல் என்னை அணைத்துக் கொண்டு நட்பு பாராட்டியவன்.

இரண்டு பேரும் ஒன்றாகத்தான் மெட்ராசுக்குப் படிக்க வந்தோம். இரண்டு வருடம் சேர்ந்து ஓடிய ஓட்டம் அதன்பின் தடம் மாறி ஓட ஆரம்பித்து விட்டது.

நான் கல்லூரியில் நுழைய அவன் இஞ்சினியரிங் கல்லூரியில் நுழைந்தான். அப்போது இந்தியாவில் பிரபலமாக ஆரம்பித்து இருந்த கம்ப்யூட்டரும் கற்க ஆரம்பித்தான்.முடித்தான். அப்படியே சிங்கப்பூர் போனான். அங்கே அஞ்சு வருடம் ,அங்கிருந்து அப்படியே அமெரிக்கா போய் விட்டான்.

கடிதங்களிலும் நட்பு தொடர்ந்தது. நான் செட்டியார் வேஸ்ட் பேப்பர் கம்பனியில் கணக்கு எழுதிக் கொண்டிருந்தேன். அமெரிககாவில் செட்டில் ஆகி கிரீன் கார்டடும் வாங்கி விட்டான் அவன.

கும்பகோணத்தில் பெண் பார்க்கப் போன போது என்னையும் அழைத்துப் போனான். போகும் போதே சொன்னான், சங்கர், பொண்ணு உனக்கும் புடிச்சிருந்தாதான் கல்யாணம் ஞாபகம் வச்சுக்கோ !

பெண் பார்க்கப் போன இடத்தில் பெண்ணில் சில சொந்தங்கள் என் முதுகு வழியாக இதயத்தில் குத்தின. அந்த வலியை மறைத்துக் கொண்டு பொண்ணு சுப்பர்டா... உன்னோட கலருக்கும் பர்ஸ்னாலிட்டிக்கும் அட்டகாச மேட்ச் என்றேன் பாஸ்கரிடம்.

பின்,திருமண நாளன்று மாப்பிள்ளைத் தோழனாக என்னை உட்காரச் சொன்னான். நான் உட்கார்ந்ததும் அவளின் சில சொந்தங்கள் என்னைப் பார்த்து முகம் சுளித்தன.சிலதுகள் வாய்விட்டே சொல்லின.

பாஸ்கர் மணவறையில் இருந்து எழுந்தே விட்டான். நாந்தான் அவனை சமாதானப் படுத்தி உட்கார வைத்தேன். அத்தனை எதிர்ப்புகளுக்கிடையே பாஸ்கரன் பிடிவாதத்தால், மாப்பிள்ளைத் தோழனாக உட்கார்ந்திருந்தேன்.

அமெரிக்கா திரும்பி, குழந்தைப் பிறந்ததும் எனக்கு போட்டோ அனுப்பியிருந்தான்.

சங்கர் குழந்தையின் முதல் போட்டோ இதுதான்... உனக்குதான் அனுப்பியிருக்கிறேன். என்று எழுதியிருந்தான்.

சத்தியம் அன்றிரவு நான் நெகிழ்ந்து அழுதேன்.

ட்ராலியை விடுங்க..!ஏற்பாடு செய்து இருந்த கார் வரை ட்ராலியை தள்ளி வந்தேன்.அவள் நான்கடி தள்ளியே நடந்து வந்தாள்.

லக்கேஜ்களை டிக்கியில் ஏற்றும் போது ,"என்னை ஏதாவது ஒரு நல்ல ஹோட்டல்ல இறக்கி விடுங்க.அங்க தங்கிக்கறேன்.."என்றாள். வீட்டுக்கு நான் இழுக்க அவள் என்னைப் புழுவைப் பார்ப்பது போல் பார்த்தாள். ஹோட்டல் ரிசப்ஷனில் அவளே பணம் கட்டி அறையைப் பதிவு செய்தாள். நான் சத்தமில்லாமல் நின்று கொண்டிருந்தேன்.

பாண்டியனுக்கு டிக்கெட் போட சொல்லியிருக்காறாமே? அது வீட்டுல இருக்கு நாளைக்கு நேரா ஸ்டேஷனுக்கு எடுத்துட்டு வந்திடுங்க, இல்ல உங்களுக்கு சிரமம்ன்னா இங்க ரிசப்ஷன்ல்ல கொண்டு வந்து கொடுத்துட்டுப் போயிடுங்க.

இல்ல எனக்கு சிரமம் இல்ல எடுத்துட்டு ஸ்டேஷனுக்கு வறேன்... வீடு திரும்பியதும் என் மனைவி கேட்டாள்.என்னங்க அவங்க எங்க... சாப்பாடு எல்லாம் ரெடி பண்ணி வச்சிருக்கேன்... வரலையா? என மௌனம் அவளுக்கு நிறைய விடயங்களைப் புரிய வைத்திருக்கும். என்னை வருத்தமாகப் பார்த்தாள்.

என்னங்க... விடுப்பா... நெருஞ்சி கருவேலம் இப்படி எத்தனையோ முள்ளுல இது ஒண்ணு... மறுநாள் இந்தப் பழங்கள் உள்ளே கம்பார்ட்மெண்டில் ஏறி உட்கார்ந்தவளிடம் நீட்டினேன். அவள் அதை கையை நீட்டிக் கூட வாங்கவில்லை. பக்கத்தில் வைத்தேன். ஸ்டேஷனில் அதற்கே உண்டான இரைச்சல்கள். அவள் மடியில் இருந்த குழந்தையைப் பார்த்தேன்.

அப்படியே பாஸ்கரை உரித்து வைத்திருந்தது போல் இருந்தது. பாஸ்காரனின் அதே வசீகரக் கண்கள்.நட்பு தேடும் கண்கள்.

ரயில் கிளம்ப..நான் கையாட்ட பதிலுக்கு அவள் சின்ன அசைவு கூட செய்யவில்லை.நான் பிளாட்பாரத்தில் நெடு நேரம் கையை ஆட்டிக் கொண்டே நின்று இருந்தேன்.

மறுநாள் கம்பனியில் நுழைந்ததுமே செட்டியார், உன் பிரெண்டு ரெண்டு தடவை பண்ணிட்டாம்பா"என்றார். நான் உட்கார போன போது போன் அடித்தது.


உனக்காதான் இருக்கும் எடு என்றார் செட்டியார். ரிஸிவரை எடுத்தேன். என்னடா... எப்படியிருக்கு என் குழந்தை? பத்திரமா ஏத்தி அனுப்பிட்டியா... உன் மனைவியிட சமையல் அவளுக்கு பிடிச்சுதா?

ரிஸிவரை காதில் பொருத்தி நெடு நேரம் மௌனித்திருந்தேன். என்னடா சங்கர் ? ஒண்ணுமில்லைடா ஷீ ஸ் சேப்குழந்தை அப்படியே குட்டி பாஸ்கர்தான்... என்கிட்ட அப்படியே தாவிடுச்சு எப்படின்னு தெரியலை... உன் மனைவிக்கு என் மனைவியோட சமையல் ரொம்ப பிடிச்சுப் போச்சு..ரொம்ப சந்தோஷம் அவளுக்கு... ரொம்ப தேங்ஸ்டா வைடா போனை நட்புக்கு என்னடா நன்றி"

அவன் ரிஸீவரை வைக்க, நான் விக்கி விக்கி அழ ஆரம்பித்தேன். குமுறிக் கொண்டு வந்த அழுகையை என்னால் நிறுத்த முடியவில்லை.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 533

சுரேன் குகதாஸ்





சாள்ஸ் நியூமன்

டில்ஷான் :- தேவையான MATCH தேவல்லாத MATCH எண்டு எப்டி தெரிஞ்சிக்குறது சனத் ஐயே?

சனத் :- நீ அடிக்கிறது பூராவுமே தேவல்லாத MATCH தான்.





பிரணவநாதன்




கில்லர் மான் ரதன்




கஜேந்திரகுமார் சதீஸ்




மனிதனின் மறுபக்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 05

## சிந்தனைக்கு...

எம்மவர்களை நாமே நோயாளி ஆக்குவதா?

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் பொழுது வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களின் பல உறவினர்கள் பிறநாடுகளில் வசித்து வருகின்றார்கள். அவர்கள் தாயகத்தில் இருக்கும் தமது உறவுகளைபார்க்கவரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கன்டோஸ் அல்லது சொக்லேட் கொண்டுவராமல் வருவதில்லை. இதன் காரணமாக பல்லாயிரம் கிலோ இனிப்பு வகைகள் ஆண்டுதோறும் எமது பிரதேசத்திற்குள் வந்துகுவிந்தவண்ணம் இருக்கின்றன. இவற்றை உண்டு பல்லாயிரம் மக்கள் நோயாளிஆகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை தடுப்பதற்கு என்னசெய்யலாம? சிந்தியுங்கள்.

Dr.சி.சிவன்சுதன்
பொதுமருத்துவநிபுணர்

## உங்கள் வீட்டிலிருக்கும் தாத்தா / பாட்டி அல்லது அம்மா/ அப்பாக்கு அடிக்கடி மனக்குழப்பம் / மறதித்தன்மை ஏற்படுகிறதா?



### இதற்கான அறிகுறிகள் என்ன?

- முக்கியமானது மறதித்தன்மை - பொதுவாகஅண்மையில் நடந்த விடயங்களை அவர்கள் மறந்துவிடுவர்
- தமது நாளாந்த வேலைகளை செய்வதில் சிரமப்படுவர்.
- அடிக்கடி கோபப்படுவர்
- பொருட்களை இனங்காண்பதில் சிரமம் ஏற்படும்.
- துன்பமோ/இன்பமோ சிறிய அளவில் ஏற்படின் அதை பெரிதாக எடுத்துக்கொள்வார்.
- காய்ச்சல் போன்ற நோய்கள் தொற்றும் போது மனக்குழப்பம் அதிகரித்து தன்னிலை மறப்பர்.

### இது எதனால் ஏற்படுகிறது?

- பொதுவாக வயது அதிகரிக்கும் போது மூளையில் சில மையங்களின் வினைத்திறன் குறைவதால் ஏற்படுகிறது.
- சிலருக்கு பாரிசவாதம் வந்தபின் ஏற்படுகிறது
- சிலருக்கு விற்றமின் குறைபாட்டால் ஏற்படுகிறது. (விட்டமின் B12)
- சிலருக்கு தைரோய்ட் ஓமோன் குறைபாட்டால் ஏற்படுகிறது.
- சிலருக்கு மூளையை சுற்றியுள்ள பாயம் கூடுவதால் ஏற்படும்.
- மனச்சோர்வால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இது ஏற்படலாம்.
- சிலவேளை மூளையில் கட்டிகளிருப்பினும் இவ்வாறு ஏற்படலாம்.

### இதை குணமாக்க முடியாதா?

- இது ஏற்பட மேற்கூறிய காரணங்கள் ஏதுமிருப்பின் அவற்றை சரிசெய்வதன்மூலம் குணமாக்கலாம்.
- காரணங்கள் புலப்படாவிடின் இம்மறதிதன்மை அதிகரிக்கும் வீதத்தை குறைக்க சில மருந்துகளை வழங்கலாம். ஆனால் இம் மருந்துகள் பெரிய அளவில் மாற்றத்தை கொண்டுவராது.

### இவர்களை வீட்டில் எப்படி பராமரிப்பது. இவர்களுக்கு கோபம் மற்றும் வெறுப்பு ஏற்படும் போது என்ன செய்யலாம்?

- கூடுதலாக குடும்ப உறுப்பினர்களின் மேலேயே ஏற்படுகிறது.
- எப்போதும் அவர்கள் இருக்கும் இடத்தை அமைதியாக பேணுங்கள்
- கதைக்கும் போது மெதுவாகவும் அன்போடும் கதையுங்கள்
- அவர்களை வேறேதும் வேலைக்குள் தூண்டி திசை மாற்றுங்கள்
- ஒருபோதும் அவர்களை தண்டிக்கவோ அல்லது மனம் நோகும் வண்ணம் பேசக்கூடாது.
- ஏதேனும் செய்யமுன் அதுபற்றி சிறு விளக்கமளித்தபின் செய்யுங்கள்.

### சடுதியாக மனநிலை மாற்றம் ஏற்படுவதை எவ்வாறு தவிர்க்கலாம்?

- இவர்கள் சிறு விடயங்களுக்கு அதிக மகிழ்ச்சி, துக்கம் போன்றவற்றை வெளிக்காட்டுவர்.
- இது புது இடங்களுக்குபோகும் போதும்/ புதிய மனிதர்களை சந்திக்கும் போதும் அல்லதுநோய் ஏற்படும் போதும் ஏற்படலாம்.

### மீண்டும் மீண்டும் ஒரே விடயத்தை அவர்கள்கேட்கிறார்களே. அதற்கு என்ன செய்வது?

- அவர்களின் கவனத்தை திசைதிருப்ப ஏதேனும் செய்யலாம்
- அவர்கள் மறந்துபோனால் மீண்டும் அதை ஞாபகப்படுத்த வேண்டாம்.

### அவர்கள்திடீரென சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறுகிறார்களே அதற்குஎன்ன செய்வது?

- வீட்டை சுற்றியுள்ள பகுதிகள் பாதுகாப்பானவையா என்பதை பரிசோதியுங்கள்.
- அவர்கள் குறிப்பிட்ட சில நேரங்களில் வெளியேறுகிறார்களாயின் அந்த நேரத்தில் அவர்களை திசை திருப்ப பாருங்கள்.
- அவர்கள் வெளியே செல்லும் போது அணிந்துசெல்லும் செருப்பு, தொப்பி, கண்ணாடி போன்றவற்றை ஒழித்து வையுங்கள்.
- உங்கள் பிரதேச பொலிஸாரிடமும் அயலவர்களிடமும் இதுபற்றி சொல்லிவையுங்கள். அவர்களிடம் இவரின் படத்தையும் கொடுத்து வையுங்கள்.

### அவர்களுக்கு ஏற்படும் நித்திரைக்குழப்பத்தை எப்படி குறைப்பது?

- மாலைவேளைகளில் நடை பயிற்சி கொடுத்தல்
- பகலில் நித்திரை கொள்வதை தவிர்த்தல்
- நித்திரைக்கு செல்லும் நேரத்தை மாறாமல் பேணுதல்
- மாலை வேளையில் புகைபிடித்தல் மற்றும் கோப்பி குடிப்பதை குறைத்தல்
- படுக்கைக்கு செல்லமுன் குளித்தல்
- நித்திரை கொள்ளுமிடத்தை அமைதியாக பேணல்

### இவர்கள் வீட்டுக்குள்ளேயே இடங்களை மறக்கிறார்களே அதற்கு என்ன செய்வது?

- அவர்களின் அறை சுவரில் தினமும் செய்யவேண்டிய கடமைகளை நேரத்துடன்பட்டியலிடுங்கள்.
- அறையில் கடிகாரம் மற்றும் நாட்காட்டி என்பவற்றை தொங்கவிடுங்கள்
- வீட்டின் அமைப்பை படமாய் வரைந்துவையுங்கள். போகுமிடங்களை அம்புக்குறி மூலம் காட்டுங்கள்.

### இவர்கள் தங்களை அறியாமலே சலம் போகிறார்களே அதற்கு என்ன செய்வது?

- ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்துக்கு ஒரு முறையும் சலத்துக்கு அழைத்து செல்லுங்கள்.
- இரவில் நீராகாரம் கொடுப்பதை குறையுங்கள்
- தூர இடங்களுக்கு அழைத்து செல்வதாயின் அங்குள்ள மலசலகூட வசதியை அறிந்துகொள்ளுங்கள். போகும் போதுமாற்று உடையையும் கொண்டுசெல்லுங்கள்.

### வேறென்ன விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்?

- சரியான நேரத்தில் உணவு வழங்க வேண்டும்
- அவர்கள் குளிக்கவோ அல்லது உடைமாற்றவோ மறக்கலாம். நீங்கள்ஞாபகம் வைத்து அதை செய்விக்க வேண்டும்.
- பொத்தான்கள் குறைந்த எளிமையான ஆடைகளை அணிவியுங்கள்.

Dr.க.சிவசுகந்தன்

## எம்மைமாற்றிக் கொள்ள...

திருமண நிகழ்வுகளிலும் மங்களகரமான நிகழ்வுகளிலும் அமங்கலமான பல நோய்களை ஏற்படுத்துகின்ற பானமான சோடா வகைகளை பரிமாறுவதை நிறுத்திக்கொள்ள எம்மால் முடியுமா? பரிமாறுவது இலகுவானது என்ற ஒரேகாரணத்திற்காகத்தான் அண்மைக்காலமாக இந்ததீயபழக்கத்திற்கு உட்பட்டுவருகிறோம். நாள்பார்த்து, நட்சத்திரம் பார்த்து, சகுனம் பார்த்து,சுபநேரம் பார்த்து, பொருத்தம் பார்த்து, அம்மிமிதித்து,அருந்ததிகாட்டும் இந்தசுபகாரியங்களின் போது ஒரு ஆரோக்கியபானத்தை (பழரசம், தேநீர், கோப்பி மற்றைய வகையான மென்பானங்கள்) ஏன் பரிமாறக் கூடாது?

அகத்தியா-

## உங்கள் கருத்து...

கடந்தவாரகேள்விக்கானஉங்கள் பதில்கள்

தாகம் எடுக்கும் பொழுது நீங்கள் உண்மையாக அருந்த விரும்புவது...

A. சுத்தமான நீர் என்பதற்கு 59 % ஆனவர்களும்,
B. தேநீர் அல்லது கோப்பி என்பதற்கு 20% ஆனவர்களுமம
C. செயற்கைபழரசம் அல்லது மென்பானம் என்பதற்கு 7% ஆனவர்களும்
D. மென்பானம், சோடா என்பதற்கு 13% ஆனவர்களும்
E. இயற்கையின் பழரசம் அல்லது இளநீர் என்பதற்கு 7% ஆனவர்களும், கருத்து தெரிவித்திருந்தார்கள்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் 078 207 5424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

## கேள்வி – பதில்

கேள்வி :- எனக்கு உடல் பருமனைக்கட்டுப்படுத்த விருப்பம். ஆனால் எனக்குபசியுடன் இருக்க முடியவில்லை. அதனால் உணவு உண்பதை கட்டுப்படுத்த முடியவில்லை. பசியைக் கட்டுப்படுத்தும் வழி என்ன?

பதில் :- உங்கள் உடல் பருமனைக் குறைக்க நீங்கள் பசியுடன் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. உங்கள் நிறையைக் குறைக்கும் முயற்சியில் பசி என்ற பிரச்சினையை வெற்றிகரமாக கையாள் வதற்கு பின்வரும் யுக்திகளைகையாண்டு பாருங்கள்.

1. நீங்கள் உட்கொள்ளும் உணவில் கலோரிகுறைந்தஉணவுகளைஉட்கொள்ளல் (மரக்கறி, பழவகைகளை அதிகளவு உட்கொள்ளல், மாச்சத்து, எண்ணெய் சேர்ந்த உணவுகளை குறைந்தளவில் உட்கொள்ளல்).
2. உணவின் கனஅளவு குறையாது பார்த்துக்கொள்ளல்
3. சாப்பிடுவதற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்பு பழவகைகளை உட்கொள்ளல்.(கொய்யா, ஜம்பு, பப்பாப்பழம், வாழைப்பழம்...)
4. இரண்டுமணித்தியாலங்களிற்கு ஒருமுறை சீனி சேர்க்காத தேநீர், கோப்பி, மோர், தேசிக்காய் தண்ணீர், இளநீர் போன்ற பானங்களை அருந்துதல் அல்லது பழவகைகளை உட்கொள்ளல்.